496
43632

# நாகரிகப் பண்ணை

857
1110



O,3MSB,N
N56
112593

# நாகரிகப் பண்ணை

முதலிய கதைகள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - MAR 1957
MADRAS

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

காவேரிப் பதிப்பகம்

புதுக்கோட்டை :: திருச்சி ஜில்லா

உரிமை ஆசிரியருக்கு

இரண்டாம் பதிப்பு: துன்முகி, கார்த்திகை.

0-,3M
N5

TAMIL NADU ARCHIVES MADRAS

112593

விலை ரூபா. 1-80

கோவாபரேடிவ் பிரஸ், புதுக்கோட்டை.

# பதிப்புரை

நாகரிகப் பண்ணை முதலிய கதைத் தொகுதியில் கலைச் சுவையும், இலக்கியப் பண்பும் கவிக் காட்சியும், அனுபவ உண்மைகளும் நிரம்பிய பதினொரு கதைகள் அடங்கியுள்ளன.

தமிழருக்கே தவம் புரியும் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள், இந் நூலில் தற்கால நாகரிகத்தின் நன்மை தீமைகளையும் மனித இயல்பையும் படம் பிடித்துக் காட்டுகிறார்கள்; பிரான்ஸ், இத்தாலி நாட்டுக் கதைகளில் சிலவற்றைத் தமிழில் தந்திருக்கிறார்கள்.

புதுக்கோட்டை—
துன்முகி, கார்த்திகை,
1—12—56.

காவேரிப் பதிப்பகம்

# பொருள் அடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | நாகரிகப் பண்ணை | ... 5 |
| 2. | மறு-மலர்ச்சி | ... 17 |
| 3. | வடக்கும் தெற்கும் | ... 23 |
| 4. | சபாஷ் சிங்கம்! | ... 35 |
| 5. | புரட்சிக் கோமாளி | ... 38 |
| 6. | வீராயி சபதம் | ... 48 |
| 7. | சாத்தான் பூச்சாண்டி | ... 59 |
| 8. | வேண்டாம் பரலோகம் | ... 66 |
| 9. | அமங்கலி சுமங்கலியானாள் | ... 74 |
| 10. | பஸ்தீல் சிறை | ... 84 |
| 11. | சுதந்தரத் திருநாள் | ... 96 |
| 12. | கல்யாணி நடராஜன் | ... 104 |

உ

# நாகரிகப் பண்ணை

## 1. நாகரிகப் பண்ணை

**நா**கரிகம் பச்சோந்தியா, மகேந்திர ஜாலமா? அது எப்படி மாறுகிறது! இன்றொரு வகை; நாளை அதற்குப் பகை! உடையில் எத்தனை வக்கிரம்! கத்திரிக்கோலுக்கு எவ்வளவு வேலை! வண்ணானுக்கு எவ்வளவு சுமை! நடையில் எவ்வளவு குலுக்கு! முகத்தில் எவ்வளவு சாயப் பட்டை! மீசையும் சிகையும் என்ன பாடு படுகின்றன! கண்ணாடிப் பார்வையில் எத்தனை தினுசு; எத்தனை கோணல்! முக க்ஷவரம், நியூஸ் பேப்பர், சந்தியோபாசனை, காப்பி டீ ஆசமன்யம், அரட்டை சுவாத்யாயம், பிரம்ம பத்திராக்னி ஓமம்—இப்படி நவநாகரிகத்தில் பஞ்ச யக்ஞங்கள் நடக்கின்றன! விடிய நான்கு மணிக்கு எழுந்து, தேக சுத்தி செய்து, குளித்து, சித்த சுத்திக்காக ஜபதபம் தியானம் செய்து, பாராயணம் பண்ணி, பாடுபட்டு உழைத்து, பசிக்குச் சுசிருசியாகச் சாப்பிட்டு ஆசாரமாக வாழ்ந்த காலம் அகாலமாய்விட்டது! பூர்வாசாரங்களெல்லாம் அபூர்வமாயின. கலி முற்றிக் காதல் மணத்தில் வந்து திருவிளையாடுகிறது.

யுகதர்மத்தை அனுசரிக்க வேண்டியதுதான்; காலத்திற்கேற்ற கல்வி நடையுடைகள் வேண்டும்; என்றால் உடம்பையும் மனதையும் கெடுக்கும் அனுசாரங்களை நாகரிகக் கணக்கில் சேர்ப்பானேன்?

"சுருட்டு பொல்லாதுடா!" என்கிறார் அப்பா; "அது பொல்லாதென்றுதானே அப்பா சுட்டுப் பொசுக்கி வஞ்சந்

தீர்க்கிறேன்" என்று புகைவிடுகிறான் பிள்ளை. பிள்ளையாண்டான் மட்டுமா? பெண்களும் இப்போது புது நாகரிக மேடையில் தங்கள் சுதந்தரத்தை நடிக்கக் கிளம்பியிருக்கிறார்கள்.

சாரதா பில் வந்தாலும் வந்தது; பெண்களெல்லாம் அம்மாமிகளாய்த் தான் மணையில் உட்காருகிறார்கள். இல்லை; மணையாவது கிணையாவது; நாற்காலியில் உட்கார்ந்து மாலையோ மோதிரமோ மாற்றிக்கொண்டு "மைலௌவி" என்று ஒரு புன்னகை புரிந்தால் போதுமே. ஒரு டின்னர் வைத்து இரண்டு நண்பர் கலியாணப் பிரசங்கம் செய்துவிட்டாலும் போதும். வேறு ஓமப் புகையும் தர்ப்பக் கட்டையும் தாலியும் கூறையும் எதற்கு? தாலி கூட அடிமையின் சின்னம்; பெண்ணுரிமைக்குப் பகை. மனு, பராசரர், வள்ளுவர் கிள்ளுவர் தர்மங்களெல்லாம் பழங் குப்பை. டாக்டர் டிக்பி ஸ்மித், ஸ்கின்னர் உட், ப்ரௌட், ஜெல்லி ஷூடர் இவர்கள் அழகாக ஆங்கிலத்தில் சுதந்தரக் காதல் (Free Love) என்ற நூல் எழுதியிருக்கிறார்கள். இந்தக் காலத்திற்கு இவர்களே ஸ்ம்ருதி கர்த்தாக்கள். மனு பராசரர் என்றால் தீக்குச்சி கிழிக்கிறார்கள்! இவையெல்லாம் என் அபிப்பிராயம் என்று வாசகர்கள் பல்லைக் கடிக்காதீர்கள்; சிவகடாக்ஷம் சாஸ்திரிகள் இப்படிப் புலம்புகிறார். அவர் பிள்ளை நமது டாக்டர் ஸுண்டர்ஸன் (சுந்தரேசன்) மேற்கேயிருந்து இறக்குமதி செய்த நாகரிகக் குறிப்புகளே தகப்பனார் கலக்கத்திற்குக் காரணம். இந்தக் குறிப்புக்களை அப்படியே மனப்பாடம் செய்துகொண்டு நடப்பவள் சுந்தரேசன் தங்கை லைலா (லிலா — Lila).

டாக்டர் தகப்பனார் சிவகடாக்ஷம் சாஸ்திரிகள் ஆங்கிலம் படித்த வைதிகர். அவர் முடிந்தமட்டும் பஞ்ச யக்ஞங்களை அனுஷ்டித்துக்கொண்டே ஹைகோர்ட்டிலும்

குறுக்கெழுத்து வேலைபார்த்து வந்தார். ஜஸ்டிஸ் மணி ஐயரே அவருக்கு வேலை பண்ணி வைத்தவர். T. V. கிருஷ்ணசுவாமி ஐயருக்கு அவரிடம் பெரு மதிப்புண்டு. சிவகடாக்ஷம் திருவல்லிக்கேணியிலிருந்து கடற்கரை வழியாகவே ஹைக்கோர்ட்டிற்குப் போய்வருவார். அப்போது அவர் கையில் ஜபமாலையிருக்கும். அதில் பஞ்சாக்ஷரி செய்துகொண்டே நடப்பார். அவர் நடையே "ஓம் நம: சிவாய ஓம்" என்று தாளம் போட்டுத் தாவுவது போலிருக்கும். சாயங்காலம் வந்ததும் குளித்து சந்தி ஜபமானதும், ஸமிதாக்னி வளர்த்து அந்த அக்னி ஜ்வாலையே சிவம் என்று அவர் உபாசித்து வந்தார். இதனால் அவருக்கு நல்ல சித்த சுத்தியும், தெளிந்த அறிவும், தேஜஸும் பெருகின. உடம்பிற்கும் பலமுண்டானது. அவர் தலை நோய் காய்ச்சல் என்று மருந்து சாப்பிட்டதே கிடையாது.

இப்படிப்பட்ட சாதுவுக்கு, சுந்தரேசனும் லீலாவதியும் வந்து பிறந்தனர். சாஸ்திரிகளின் மனைவி ஒரு வக்கீலின் பெண். அவள் உறவினரெல்லாம் நவநாகரிகப்புலிகள். கரண்டி முதல் காகிதம் வரையில் நாகரிகம் பரிபூரணமாயிருக்கும். அவர்கள் வீடுகளில் 'டுஷ் புஷ்' என்று ஆங்கிலமே முழங்கும்; தமிழராகப் பிறந்த பாவத்திற்கு இடையிடையே இரண்டொரு தமிழ் வார்த்தையும் வரும். அதுவும் அம்மா மம்மா, அப்பா பப்பாவாய் விடும். சமுஸ்கிருதம் செத்த பாஷை என்பது அவர்கள் தீர்மானம்.

சாஸ்திரிகளின் மைத்துனன் M. K. பாலி, M. D. (மகாதேவ சாஸ்திரி பிள்ளை ம. கபாலீசுவரன்) எடின்பரோவில் படித்து டாக்டர் பட்டம்பெற்றவன். சிவகடாக்ஷத்தின் விபூதி, ஜபமாலை, ஔபாசனமெல்லாம் பழைய காட்டுமிராண்டிச் சின்னம் என்பவன். அவன் புதுவாழ்வு (New life) என்றொரு நூல் ஆங்கிலத்தில் எழுதிவைத்திருக்கிறான். நல்ல வேளையாக அதை யாரும் இன்னும்

வெளியிடவில்லை. அதில் சந்திஜபம் முதல் தமிழ் சமுஸ்கிருதம் வரையில் (அப்பன் திவசம் உள்பட) நமது பழக்க வழக்கங்களையெல்லாம் சீமைக் கண்ணுடியால் அலசிப் பார்த்து, "எல்லாம் கண்மூடித்தனங்கள், இவற்றை அனுஷ்டிக்கும் ஜாதி இந்த இருபத்தொன்றே காலே அரைக்காலாம் நூற்றுண்டில் உருப்பட வழியில்லை; எல்லாரும் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் அடியோடு மாறினுலே உருப்படலாம்" என்று எழுதி வைத்திருக்கிருன். தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு மருந்துடன், தனது புதிய நாகரிகமும் இரண்டு 'டோஸ்' கலந்தே தருவான்.

இந்த மஹானுபாவனிடமே சுந்தரேசனும் லீலாவதியும் வளர நேர்ந்தது. காரணம், இருவர் தாயும் பிரசவத்தில் இறந்துபோனதுதான். தாய் காவேரி இறந்ததற்குக்கூட பாலி விநோதமான காரணங்களைக் கற்பித்தான்—புடவை கட்டுவதால் காற்று உடம்பில் படுவதில்லை—இலை போட்டுக் கையால் சாப்பிடுவதால் நகங்களில் உள்ள விஷம் உடம்பிற் கலந்து விடுகிறது; ஒருவனிடமே அடைபட்டுக் கிடப்பதால் மனேல்லாச சுதந்தரம் (Psychological free-pleasure) இல்லாதது—இன்னும் பல. சிவகடாக்ஷம் சிறுவயதில் குழந்தைகளுக்கு நல்ல பாட்டும் பழக்கமும் சொல்லிவைத்தார். அவர் மனைவி இறந்த பிறகு, தெய்வ பக்தி செய்வதும் தாமே கவனம் செய்து கீர்த்தனுஞ்சலி செய்வதுமானுர். டாக்டர் பாலியிடம் போகும்போது சுந்தரேசனுக்கு வயது பன்னிரண்டு—லீலா வயது ஏழு. டாக்டர் பாலி தன் மனப்படியே குழந்தைகளைப் புதிய வாழ்வுக்குத் தயாராக்கினுன். அவன் மனைவி காமாக்ஷி மஞ்சள்—குங்கும நாகரிகத்தை இன்னும் விடவில்லை. கணவன் குங்குமப் பரணியை ஒளித்தும் உடைத்தும்—எப்படியோ அவள் சத்தியாக்கிரகம் செய்து பத்தினிக் கடைமையைக் காப்பாற்றி வந்தாள். காமாக்ஷியைப் பாலி

"Fish-eye" என்றழைத்து பிழை என்று இப்போது கூப்பிடு கிருன். இருவருக்கும் குழந்தைகளில்லை. . ஆதலால் சுந்தரேசனும் லீலாவதியும் அந்த வீட்டில் போட்டியில்லா மல் செல்லமாகவே வளர்ந்தனர்.

டாக்டர் பாலி சென்னையில் Fashion club (நாகரிகப் பண்ணை) ஒன்று நாட்டினன். அதில் சீமைப் பண்புள்ள (Western culture) நாகரிகச் சீமான்களும் சிமாட்டிகளுமே அங்கம் வகித்தனர். சீமான் என்ருலே சீமை ஆள் என்பது அவன் நினைப்பு. ஆண் பெண் வேற்றுமைகளைத் தகர்த் தெறிதல், கோயில் சாமி சமயம் அனுஷ்டானுதிகளை நையாண்டி செய்து பொழுது போக்கல், சாக்லெட் முதல் ஷாம்பைன் வரையில் ஸ்வேதாசாரங்களைக் காப்பி அடித் தல், வேதம் முதல் அருட்பா வரையில் உள்ள எல்லா அருள் நூல்களையும் அடிமை நூல்கள் என்று ஒதுக்கித் தள்ளுதல்–சுருக்கமாக இலண்டனைச் சென்னைக்குக் கொண்டுவருதல் சென்னையைக் கடலில் தள்ளிவிடுதல்– இவையே நாகரிகப் பண்ணையின் சங்கற்பம். இப் பண்ணையில் சேர்ந்தவர்களுக்கு முதல் தீக்ஷை கிராப்பு வைத்துக்கொள் வதும், முகக்ஷவரம் செய்து சாயம் அடிப்பதுமே. இரண் டாவது தீக்ஷை கால்சராய் தொப்பி! மூன்ருவது ஸ்பூன்– சாப்பாடு. இப்படி ஐம்பது படிகளுண்டு; கடைசிப்படி இருபாலாரும் கை கோத்து ஆனந்த நடனம் புரிவதுதான். நாகரிகப் பண்ணையில் ஐம்பது படியும் ஏறியவர்களுக்கு M. F. (Muff–மப் என்று படித்துவிடாதீர்கள்) "Master of Fashion" என்ற பட்டம் உண்டு. இப்பட்டம்பெற்ற நாகரிகத் தலைவிகள் (Mistress of Fashion) ஆண்களைப் போலவே தோன்றுவார்கள்–இழவு மீசைமட்டும் முளைத் தால் ஆண்களைத் தோற்கடித்துவிடலாம். அரைக்கால் சட்டை, பூட்ஸ், ஷர்ட், டை, காலர், கோட்டு, தொப்பி, சுருட்டு, கண்ணுடிப் பார்வை (போலி மீசையும் உண்டு); எல்லாம் அப்படித்தான். பால் தரவேண்டிய அவசியமும்

இல்லை-தாய்ச்சி வேலை அது! பெண்களே ஆண்களாகின்றனர். ஆண்கள் இன்னும் புடவையோ பாவாடையோ கட்டவில்லை. அப்படி வந்தால் சமத்துவம் சரியாயிருக்கும் என்று சிலர் கிளம்பியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நாகரிகப் பண்ணையில் சுந்தரேசனும் லீலாவும் வளர்ந்தனர். சுந்தரேசன் பி. ஏ., தேறியதும் கப்பலேறிச் சென்று கேம்ப்ரிட்ஜில் படித்து பெரிய டாக்டர் பட்டம் பெற்றுவந்தான். வந்ததுமே இங்கே நாகரிகத் தலைவன் (M. F.) ஆய்விட்டான். ஐம்பது படியும் தாண்டி, நாகரிகத்தின் உச்சியில் ஏறிவிட்டான்; சீமையில் ஆங்கிலத்தில் 'த' இல்லை. ஆதலால் சுந்தரேசன் சுண்டரேசன் ஆய், ஸூண்டர்ஸன் அல்லது ஸாண்டர்ஸன் ஆய்விட்டான். அதுதான் இனிமையாயிருக்கிறது என்று பாலி நாமகரணம் செய்தான்.

இப்போது நாகரிகப் பண்ணையின் காரியதரிசி ஸூண்டர்ஸன். ஒரு மாதமாக அவனுக்குத் துணை செய்வது அதோ நிமிர் நடையும் திமிர் கண்ணுங்கொண்டு உலகையே மதிக்காது திரியும் ஸ்வீடி (சாவித்திரியின் விகாரம்). ஸ்வீடியை நீங்கள் கண்டால் "ஐயா" என்றே அழைப்பீர்கள். அவர் உதட்டில் சில நாள் மீசையும் காணும். அவர் ஐயாவா, அம்மாவா, அவளா, அவனா என்பது எளிதில் கண்டுபிடிக்க முடியாது.

டாக்டர் ஸூண்டரே முக்கிப்போனான் என்றால் நீங்கள் எந்த மட்டுக்கு! டாக்டரிடம் வைத்தியம் என்று வந்தவர் மேற்படியாரையே பைத்தியமாக்கிவிட்டார்!

ஸ்வீடியைக் கண்டு மிக மிக மயங்கிப் போனவள் லீலா (லைலா). லீலா நாகரிகப் பண்ணையில் ஊறினவளே; ஆனாலும் காமாக்ஷியின் நேசத்தால் இன்னும் பட்டுப் புடவை கட்டுகிறாள்; நாகரிகப் படிகளில் முக்கால்வாசி

ஏறியிருக்கிறாள். அவள் இண்டர் தேறி இப்போது வைத்தியக் கல்லூரியில் படிக்கிறாள். வயது இருபத்து மூன்று; வயதிற்குரிய ஆசாபாசங்கள் முகத்தில் புள்ளி போட்டுக் காட்டுகின்றன. டாக்டர் பாலியும் ஸௌண்டரும் அவளுக்கு எல்லாச் சுதந்தரமும் தந்தனர். அவள் எப்படியும் இருக்கலாம்; இஷ்டமானபேரைக் காதலித்து வாழலாம். ஜாதகமும், சடங்கும், ஔபாசனப் புகையும், மேளமும், தாலியும் அநாகரிகப் பழக்கங்கள் அன்றோ?

லைலா, காலை பெட் காபி தயாரானதுமே எழுந்திருப்பாள். பேஸினில் லவண்டர் சோப் போட்டு முகங்கழுவி, உடனே காப்பியைக் கொட்டிக் கொண்டு பிறகு மக்ளின் செய்து கொண்டு படக் படக் என்று கத்தியைத் தீட்டுவாள். அவள் உதட்டிலும் கன்னத்திலும் லேசாக மயிர் நீட்டிக் கொண்டிருக்கும்; அதை வழித்தெறிந்த பிறகு, நாகரிகத் தைலந் தடவிக் கழுவிப் பிறகு, லிப்ஸ்டிக், க்ரீம், ஸ்நோ—இன்னும் பல சாயத் தினுசுகளையும் புருவ மைகளையும் போட்டு, ஒரு மணி நேரம் கண்ணாடி முன்னே "மேகப்" செய்து கொள்வாள். சில நாட்கள் தொட்டியில் மல்லாந்து உடம்புக்குச் சோப்பும் வாசனைப் பொடிகளும் போட்டுத் தேய்ப்பதுண்டு. நகங்களுக்குச் செவ்வரக்குத் தடவிக்கொண்டு, கைக்குட்டைக்கு அத்தர் போட்டு வைத்து விட்டு லைலா துணிமணி பீரோவைத் திறப்பாள். இங்கே தான் நாகரிக-விசாரம் பலமாக நடக்கும். லைலா வண்ணாத்திப் பூச்சிகளைப் போல் அழகா யிருக்கப் பிரியப்படுவாள். ஆதலால் நிறம் பார்த்துப் புடவை ரவிக்கை முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து, மிகவும் நாகரிகமாக அணிந்து, இடுப்பை நன்றாக இறுக்கி ஒரு தங்க ஒட்டியாணமும் போடுவாள். நாகரிகப் பண்ணையில் தோடு, மூக்குத்தி, புல்லாக்கு முதலிய முக நகைகளும், தாலியுமே விலக்கு. உயர்ந்த முத்து ரத்ன மாலைகள் அணியலாம். தலைக்கு அழகான கிரீடம் அணியலாம். லைலா கையில்

தங்க வளைகளும் கழுத்தில் நவரத்ன மாலையும் முத்து மாலையும் தலையில் கிரேக்க ராணிகளைப் போலத் 'தங்கப் பட்டமும்' அணிந்து இளம் அரசி மாதிரியே காட்சியளிப்பாள். அவள் ஆங்கிலமே பேசுவாள்; ஆங்கிலப் பேச்சு நடையுடை பாவனை யுள்ள நண்பருடன் கலகலவென்று கைகுலுக்கிப் பேசுவாள். டாக்டர் பாலி "லைலா! அச்சம் நாணம் எல்லாம் அசட்டும் பைத்தியம், நீ நிமிர்ந்து நட; உரிமையுடன் பேசு" என்று தூபம் போட்டுவிட்டான். லைலா ஆண்களை மதிப்பதே யில்லை. அழகின் செருக்காலும், வயதின் மதர்ப்பாலும், நாவல் படிப்பாலும், திரைக்காட்சியாலும் லைலா ஆண்களெல்லாம் தனக்கு அடிமைகள் என்றே நினைத்தாள். இருந்தாலும் இயற்கையின் வேகத்தை அவளால் அடக்க முடியவில்லை. அடிக்கடி தன் வாழ்வுக் கொடிக்கு ஒரு கொழு கொம்பைத் தேடினாள். பிசகுகளும் நடந்தன—யார் கேட்பது? காமாக்ஷி இந்தப் பெண்ணின் விபரீதங்களைப் பார்த்து வருந்தி, சிவகடாக்ஷத்திடம் சொல்லிக் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்தாள். தகப்பனார் நல்ல வரன்களை ஏற்பாடு செய்தார்; ஜாதகப் பொருத்தம் பார்த்தார்.

லைலா "இந்த பூல் எனக்கு வேண்டாம்; இந்த இடியட் அந்த யானை, இந்த மூஞ்சூறு, இந்த எலும்புக்கூடு, இந்தப் பொதுக்கை, இந்த வறட்டன், இந்த மிருகம், இந்த ஓநாய், இந்தக் குரங்கு எனக்கு வேண்டாம்" என்று வந்த வாலிபர்களை யெல்லாம் நாகரிகச் செருக்கில் நாவடங்காமல் பிரசங்கம் செய்து துரத்திவிட்டாள். இந்தப் பெண்ணை, "நாகரிகப் பிடாரி" என்று வாலிபர் அஞ்சினர். இருபதடிக்கப்பாலிருந்து அவளது பூச்சழகையும் ஒய்யார நடையையும் வியப்பவர்கள் கூடக் கிட்ட நெருங்கப் பயந்தனர். அவள் செருக்கே வெறுப்பாக முடிந்தது. "அடங்கி நடந்தால் எவனாவது உன்னைக் கட்டிக்கொள்வான்; இல்லாவிட்டால் ஓரியா யிருக்கவேண்டியதுதான்"

என்று காமாக்ஷி ஜாடையாகச் சொல்லுவதுண்டு. "இந்த அநாகரிக மிருகங்கள் என்னை விரும்பாவிட்டாலென்ன? நான் ஓரியல்ல......? என்று லீலாவும் வெட்டிப் பேசி வந்தாள். காரணம் அவள் கண்கள் ஒருவரிடம் லயித்துப் போயின்.

டாக்டர் பாலி வீட்டு மாடியிலிருந்து பார்த்தால் ஸ்வீடி தன் உப்பரிகையில் சொகுசாக நடப்பதும், கொச்சி நாயைக் கொஞ்சுவதும் நன்ருகத் தெரியும். ஸ்வீடி ஒரு மர்மப்பேர்வழி; ஆணு பெண்ணு என்று கூட யாருக்கும் தெரியாது: கிராப்புத்தலை; ஹாட்; காகி ஷர்ட், டை, ஹண்டிங் கோட்டு, நிக்கர்ஸ், ஸ்டாகிங்ஸ், பூட்ஸ், கையில் ரிஸ்ட் வாட்சு, உதட்டில் லேசாக மயிர்கள், முகவாய்க் கட்டையில் நாலைந்து மயிர்கள், உதட்டில் கம்பீரமான அலட்சிய நகை, வாயில் ஸ்பென்ஸர் சுருட்டு, பின்ஞல் ஒரு நாய், மாலையில் ஸாண்டர்—வீட்டு வேலை செய்ய ஒரு வேலைக்காரி, வேலைக்காரன். வீட்டிற்குள் இரகசியமாக இரண்டுபேர்–இந்த ஒழுங்கில் ஸ்வீடி விளங்குகிருன்·(ள்). ஸாண்டர் ஒருவனே அவனு(ளு)டன் நெருங்கிப் பழகுகிருன். ஸ்வீடியை அவன் டீ என்றே அழைக்கிருன். அவனை அவன்(ள்) ஸான் என்கிருள். ஸான்—டீ தோள் மேல் கை போடுவது முதல் ஒருவர் சுருட்டில் ஒருவர் சுருட்டைப் பற்றவைப்பது வரையில் நட்பாடுகிருர்கள்.

லீலா தன் மாடியில் ரோஜாச் செடிகளை வெட்டிவிடுவதும் மலர் பறிப்பதும்போல் அங்கே டீயின் ஆணழகை வலைவீசிப் பார்ப்பாள். "ஆஹா என்ன அழகு, என்ன பாஷன்! எவ்வளவு நாகரிகம்! ஐம்பது படியேறி M. F. பட்டம் பெற்ற இவனை யல்லவா நான் மணம்புரிய வேண்டும்? எவ்வளவு தாரளமான சிலவு; அவன் மோட்டாரே நாகரிகத்தின் வெற்றித் தேராயிருக்கிறதே! நாகரிகப் பண்ணையில் எவ்வளவு அழகாக இந்த வாலிபன்

புது வாழ்வைப்பற்றிப் பேசுகிறுன். நல்ல படிப்பு, இனிய ஆங்கிலம். வயசு இருபத்தைந்துதான் இருக்கும்; பால் வடியும் முகம்; கருங்கொடிகள் போலக் கிராப்பு, சுருண்டு சுருண்டு மேகராசிபோலப் படிப்படியாகப் படர்ந்த அழகென்ன! மூக்கும் விழியும், பவழ வாயும் சலவைச் சிற்பம் போலச் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன. அண்ணுவுக்குக் கூடத் தெரியாமல் இந்த அழகனை நான் காதல் மணம் புரிவேன். இவனைத் தவிர வேறெந்த மிருகமும் என் கிட்ட வரக்கூடாது" இப்படி உறுதிகொண்டு லைலா தன் மாடியிலிருந்தே புன்னகைத் தூதும், விழித் தூதும் அனுப்பினுள். இவள் காதலை அங்கீகரிப்பதுபோல, டீயின் விசாலப்புன்னகை முப்பத்திரண்டு—தந்தப் பற்களையும் காட்டின. இவளைப் பைத்தியமாகவே டீ உறுதி கொண்டான்(ள்).

நாகரிகப் பண்ணையில் இருவரும் கைகுலுக்கினர்; லைலா தன் காதலனுக்குத் தினம் ஒரு ரோஜாக்கொத்துத் தந்தாள், காதலனும் அதை முத்தமிட்டு ஏற்முன். இருவருக்கும் கடிதக் காதல் தொடங்கியது: "என் உயிரே; நீயின்றி நான் வாழேன்; என் காதலே, நீயின்றி நான் சாவேன்' என்ற பாங்கில் கடிதங்கள் தூதுசென்றன.

ஒருநாள் லைலா உணர்ச்சி பொறுக்கமுடியாமல், மாடிக்குமாடி தாவி, டீயின் மாடியறைக்கே போய்ச் சேர்ந்தாள். பட்டு நிலா அடிக்கிறது; டீ அப்போதுதான் சாப்பிட்டு ஓர் ஏப்பம் விட்டான். லைலா வந்ததும் "கண்ணே காதலே வா, வா, உனக்கே காத்திருந்தேன். இந்தா சாப்பிடு'' என்று வெண்ணெய் தடவிய பிஸ்கோத்துத் தந்தான் — தலைக்கும் வெண்ணெய் தடவினுன்(ள்). ஒருவர் கடித்த பிஸ்கோத்தையும் சாக்லெட்டையும் ஒருவர் அன்புடன் கடித்து உண்டனர். பிறகு மனதை விட்டுப்பேசினர். லைலா டீயின் மெத்தையில்

சாய்ந்தாள்; டீ அவள் முகத்தைக் கையால் தடவி "என் கண்ணே உன் அழகு எவ்வளவு வசீகரமாயிருக்கிறது, என்றான்(ள்)." "காதலா நீ என் உயிர்; இதோ சந்திரன், தன் சீத கிரணங்களை நீட்டி, நம்மை உற்றுப்பார்க்கிறான்; மதியும் நிலவும் போல நாம் இனிச் சேர்ந்து வாழ்வோம்."

"அப்படியே வாழ்வோம்; கண்ணே அதற்கென்ன தடை. ஆனால் நீ ஒன்று செய்யவேண்டும்." என்று டீ உற்றுப்பார்த்ததுமே, "என்ன வேண்டுமானாலும் செய் கிறேன்" என்றாள் லீலா.

"நீ ஆணாக மாறினால் அவசியம் உன்னை என் காதலர் வரிசையில் சேர்த்து விடுகிறேன்..........." என்றாள் டீ.

லீலா திகைத்து நின்றாள். அப்போது கதவு திறந்தது ஸாண்டர் உள்ளே நுழைந்தான்.

டீ கடகடவென்று சிரித்து, "இதோ என் காதலி; இவளைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறேன்; மிஸ்டர் ஸாண்டர், நீ எங்கள் கையைச் சேர்" என்றாள். "ஹலோ லீலி இதென்ன பைத்தியம்; அவள் என் காதலி" என்றான்.

லீலி முகம் சிவந்தது. "அண்ணா இதென்ன பைத்தியக் கார நாகரிகம்—ஆண் பெண் தெரியாமல்!........" என்று வெளியே சென்றாள். டீ அவள் பின்னே சென்று, "மைடியர் லீலி, என் காதலர் ஒருவரை உனக்குத் தரு கிறேன்; நீ சினிமாவில் சேர்ந்தால் அழகுச்செருக்கி (Proud Beauty) என்ற படத்தில் கதாநாயகியாக நடிக் கலாம். காதல் வக்கிரம் (Crooked Love) என்ற படம் ஷூட்டிங் நடக்கிறது. நான் அதற்கே இப்படி ஆணா னேன்" என்றாள். "டாம், போடி" என்றொரு குண்டு போட்டு லீலி வீட்டிற்கு ஓடினாள்.

லீலா காமாக்ஷியை நமஸ்காரம் செய்தாள். "மாமி! இன்றே நான் புது வாழ்வு பெற்றேன். இனி நாகரிகப் பண்ணை முகத்தில் விழிப்பதில்லை. தங்கள் கையால் மஞ்சள் குங்குமம் தாருங்கள்; அப்பாவிடம் போகிறேன்" என்ருள். காமாக்ஷி 'தீர்க்கசுமங்கலி பவ" என்று மஞ்சள் குங்குமம் தந்து, சிவகடாக்ஷம் வீட்டிற்கு லீலாவதியைக் கொண்டு சேர்த்தாள்.

சிவகடாக்ஷம், "லீலாவதி, நீ திருந்தவேண்டுமென்று தான் பஞ்சாக்ஷரி ஜபித்தேன் அம்மா! உனக்குக் கணவன் தயாராயிருக்கிருன். ஹைகோர்ட் வக்கீல் முத்துசாமி! நாளையே நிச்சியதார்த்தம் செய்யலாம். அம்மா, இல்லறத்தில் ஒருவனுடைன் கற்புள்ள மனைவியாக வாழ்வதே பெண்ணுக்கழகு" என்ருர்.

லீலாவதி மறுவாரமே ஸ்ரீமதி முத்துஸாமியாளுள். தம்பதிகள் குல தர்மத்தை ஒழுங்காகவே நடத்தி வருகிருர்கள். லீலாவும் தமிழ் கற்கிருள்.

## 2. மறு மலர்ச்சி

**ப**ஞ்சத்தில் அடிபட்டவனுக்குச் கஞ்சித் தொட்டியுண்டு; போரில் அடிபட்டவனுக்குச் செஞ்சிலுவை உண்டு. பேனு அடிபட்டவனுக்குக் கவலைதான் உண்டு!

புஷ்பவனம் பி. ஏ., மணி மணியாக எழுதுவான். எத்தனையோ கதைகள் எழுதினுன்; வெளியாகவில்லை. முனிசிப் கச்சேரியில் குமாஸ்தா வேலைக்கு, மில்டன் நடையில் விண்ணப்பம் போட்டான்; பதில் வரவில்லை. பைரன்—நடையில் அதிகாரிகளின் செருக்கை வெளுத்து வாங்கி ஒரு சவுக்கடியனுப்பினுன்; பிறகு பற்கு நடையில் நேரே போய்ப் பேசினுன். எல்லாவற்றிற்கும் ஏமரி நடையில் (ஏமாற்றப் பதிலே) கிடைத்தது. 'இந்த அடிமை வேலையே வேண்டாம்' என்று கச்சேரியை "தானி தானி சபாபானி" சொல்லி ஒரு சுற்றுச் சுற்றி வெளியேறும்போது வான்கோழி நடைபோட்டு ரமணி வந்துசேர்ந்தான்.

இருவரும் பள்ளித்தோழர்; ரமணி ஸ்கூல் பைனல்—கணக்கில் பூர்ண சந்திரன்; ஆங்கிலத்தில் அதற்கு முன்னுல் ஒன்று வாங்கிப் பட்டதாரியான பேர்வழி. இப்போது டிவீடு கோட்டும், ட்வில் ஷர்ட்டும், சல்லாத் தலைப்பாகையும், வெற்றிலைக்காவி யேறிய உதடும், காப்பி ஏப்பமுமாக எதிரே நின்ருன்.

புஷ்பவனம்: ஏண்டா ரமணி, ஸ்கூல் பைனலில் மூன்று வருஷம் முட்டை மார்க்குவாங்கிய உனக்கு எப்படியடா வேலை கிடைத்தது? நான் மனுப்போடவே அப்பா சம்படத்தைக் காலிபண்ணி விட்டேனே! எனக்கொரு ஈயடிச்சான் காப்பி வேலைகூடக் கிடைக்கவில்லையே.

**ரமணி :** புஷ்பவனம், உன் மில்டன் நடையைக்கண்டு ஹெட்கிளார்க்கு "பைத்தியம்" என்று சிரித்தார். உன் மனுக்களெல்லாம் குப்பைக் கூடைக்குப் போய்விட்டன. நீ இங்கே பேனு ஓட்டத் தகுதியில்லை! பத்திரிகையில் பேனு ஓட்டு. போ!

**புஷ்பவனம் :** நீ எப்படி இங்கே நுழைந்தாய் என்பது கேள்வி. சொல் பதில்............

**ரமணி :** புஷ்பம், நானும் உன்னைப் போலத்தான். ஆனால் வசனத்தில் மனுப்போட்டேன், பலிக்கவில்லை. முனிசீபுக்கு ஒரு சமையற்காரன் வேண்டுமென்று கேள்விப்பட்டேன். வெள்ளைச் சட்டையை மடித்து வைத்துவிட்டுக் கிளம்பினேன். கரண்டியாபீஸ் வேலை போட்டியில்லாமலே கிடைத்தது. ஒரு மாதத்தில் ஸ்ரீமதி முனிசீபின் அன்பிற்குப் பாத்திரமானேன். முருங்கைக் காய் சாம்பாரும் பாகக்காய் பிட்லையுமே எனக்குச் சிபார்சு செய்தன. அம்மாள் தயவால் ஐயா தயவுகிடைத்தது! பத்து மணி வரையில் அங்கே கரண்டி வேலை, பிறகு இங்கே பேனு ஓட்டும் வேலை ; இந்த வேலையிலும் எனக்கு மேலே யிருக்கிறவருக்குச் சேவைசெய்ய வேண்டும். இதோ அவருக்குக் காப்பி பலகாரம் வாங்கிச் செல்கிறேன். நாழியாயிற்று கச்சேரிப்பக்கம் வராதே.

**புஷ்பவனம் :** உன் அடிமைச்சேரி வேண்டாமப்பா.

இத்துடன் புஷ்பம் சிவன் கோவிலுக்குச்சென்றான்.

வீட்டுக்குப் போனால் "என்னடா வேலை கீலை கிடைத்ததா? தலை வழிக்கும் சங்கிலிகூட நாளைக்கு இரண்டு ரூபாய் சம்பாதிக்கிறானே" என்று அப்பா எரிபுண்ணில் கொள்ளி வைத்ததுபோலப் பேசுவார். மாமியாரோ, குளத்தங்கரை ரேடியோ நிலயத்தில் மாப்பிள்ளை சமர்த்தை ஒலி பரப்பி ஊர் சிரிக்கவைப்பாள். அருமை

மனைவியோ கன்னத்தைத் தோளில் இடித்துக்கொண்டு சீமைச்சாயம் அடித்து வளர்த்த முகத்தில் மஞ்சள் பூச நேர்ந்த வறுமையைப் புலம்புவாள்.

இந்தத் தொல்லைகளையெல்லாம் ஒழிக்கவே அவன் ஊர்க்கோவில் கோபுரத்தில் ஏறினான். அங்கேதான் ரமணியின் வாய்ச்சொல் நினைப்பிற்குவந்தது—பத்திரிகையில் பேனா ஓட்ட அவனால் முடியும். ஆனால் என்ன எழுதுவது? எதற்கனுப்புவது? என்று சிந்தித்தான்.

அப்போது இரண்டு கோபுர வஸ்துக்கள் வந்தன. ஒன்று தாய். அதன் மார்பில் குட்டிக் குரங்கு பற்றிக் கொண்டிருந்தது. தகப்பன் குரங்கு குட்டியின் உடம்பைத் தடவி ஏதோ உபதேசம் செய்தது. குரங்குகள் புஷ்பத்திற்கு இரண்டு உர் உர்—ஆசி போட்டுச்சென்றன.

ஆஞ்சனேயரே இப்படி வந்து நமது பேனாவை ஆசிர்வதிக்கிறார். குட்டிக் குரங்கு போல் இனிப் பேனாவைப் பிடித்துக்கொள்வேன் என்று அவன் நினைத்தான். மனுப் போட இன்னும் சட்டைப் பையில் வைத்திருந்த காகிதங்களை எடுத்துக் கதை எழுதத் தொடங்கினான். கதைக்குக் 'கோபுர வஸ்து' என்று தலைப்பிட்டான்.

அதை எந்தப் பத்திரிகைக்கு அனுப்புவது என்று சிந்தித்தான். எழுத்தாளருக்கு நாமம் வைக்கும் பத்திரிகை பயனில்லை. என்ன எழுதினும் டென்னிஸ் பந்துபோலத் திரும்பிவிடும்; ஆசிரியருக்கனுப்பினாலும் பயனில்லை. "பேனாவுக்குப் பின் வயிறு இருக்கிறது; எழுத்தாளன் பிழைக்கவேண்டும். எழுத்தாளராலேதானே பத்திரிகை பிழைக்கிறது. அவர்களுக்கும் ஏதாவது தருவோம்" என்ற ஒரே பத்திரிகை 'மறு மலர்ச்சி'தான். "மறு மலர்ச்சி பத்திராதிபருக்கு" என்று விலாசமிட்டுத் தன் பெயரையும் எழுதினான் புஷ்பம். ஜிலு ஜிலுவென்று காற்று வந்தது.

வீட்டில் கொசுவும் மூட்டையும், அவனும் படுத்தும் பாட்டில் தூக்கம் வருவதில்லை. தென்றல் தாலாட்டியது; கண் சுழற்றியது; கோட்டை மடித்துத் தலைக்கு வைத்துக் கொண்டு இரண்டு குறட்டை விட்டதும் கனவு உலகுக்குப் போய்விட்டான்.

ஆஹா என்ன கனவு! புஷ்பவனம் கட்டுரையைப் பத்திரிகைக்கு அனுப்புகிறான். திரும்பி வருகிறது. மேன் மேலும் கதைகளை அனுப்புகிறான்... எல்லாம் வாபஸ்! "இன்னும் வேலையகப்படவில்லையா?" என்று மனைவி இடிக்கிறாள்; மாமியார் அசட்டு மாப்பிள்ளைக்கு அஷ்ட லக்ஷ்மியைக் கொடுத்தேனே, என்று பொரிகிறாள். உறவினர் கேலி செய்கிறார்கள். அவமானம் பொறுக்க முடியாமல் ஹோ என்று உளறிக்கொண்டழுதான் புஷ்பவனம்.

அவன் உளறியது கோயில் மண்டபத்தில் கேட்டது. என்னடா கோபுரத்தில் சத்தம் என்று அங்கிருந்தவர்கள் திகைத்தார்கள். "அட குரங்குச் சத்தம்! இல்லை ஆந்தை! போடா அங்கே முனியாண்டியிருக்கிறான்" என்று பல பேர் பலவிதமாகப் பேசினார்கள். முடிவில் ஒருவர் ஏறி வந்தார். அப்போதுதான் புஷ்பவனம் கண்ணைத் துடைத்துக்கொண்டு எழுந்து, தான் கதை வைத்திருந்த இடத்தைப் பார்த்தான்.

ஆனால், ஐயோ காணோம். மேலே வந்த ஆள் அவன் ஷட்டகன், "என் கதையை ஏன் எடுத்தாய்? கொடடா குப்பு" என்று மிரட்டினான்.

அவன் 'ஏண்டா புஷ்பவனம், வீட்டில் தேடுகிறார்கள். இங்கேயா இருக்கிறாய்? வாடா' என்று கையைப் பிடித் திழுத்தான்.

"என் கதையைத் தராவிட்டால் இப்படியே கீழே குதித்துச் சாவேன்! இங்கேயே சத்தியாக்கிரகம் பண்ணு வேன்'' என்று கூச்சலிட்டான் புஷ்பம்.

''அட சீ, உன் கதையை யார் கண்டது? வாடா சோறு தின்ன'' என்று முரட்டுப் பிடியாகப் பிடித்து இழுத்துச் சென்றான் குப்பு.

அவன் பலசாலி; புஷ்பம் பட்டத்திற்காக உயிரைக் கொடுத்து தேகம் தேவாங்கான வற்றல். சத்தியாக் கிரகமோ ஹத்தியாக்கிரகமோ அவனிடம் பலிக்கவில்லை. வீட்டில் நுழையும்போது புஷ்பவனம் முகம் வாடிப் போனது. மனைவி முகத்தில் விழிக்கத் தைரியம் வரவில்லை கூடத்தில் ஒரு மூலையில் சோர்ந்து விழுந்தான்.

மனைவி மங்களம் பரபரப்புடன் ஓடி வந்தாள். அவள் முகத்தில் கடுமையில்லை. உதட்டில் அன்று தான் முல்லை மலர்ந்தது.

அவள் : சாப்பிட வாங்களேன்?

புஷ்பவனம் ; போமடீ, என் துரதிர்ஷ்டத்திற்குச் சாப் பாடு வேறே உபசாரம் வேறே !

அவள் : ஏனிப்படிச் சொல்லுகிறீர்கள் ? உங்களுக்கு யோகந் திரும்பி யிருக்கு.

புஷ்பவனம் : நான் எழுதிய கதை கூட மாயமாய்ப் போனது. என்ன யோகம்?

அவள் : அதைத் தானே சொல்ல வந்தேன்.

புஷ்பவனம் : எதை ?

அவள் : அந்தக் கதையைத்தானே தேடினீர்கள் ? நான் உங்களுக்கு வேலையாக வேண்டுமென்று அம்பாளை வணங்கிவிட்டுக் கோயில் பிரகாரத்தைச் சுற்றி வந்தேன்.

கோபுரத்திலிருந்து ஒரு குரங்கு ஒரு வஸ்துவை எறிந்தது; பார்த்தேன், உங்கள் கோழிக் கிண்டல்!—கோபுரவஸ்து. விலாசமும் எழுதியிருந்தீர்களா? மறு மலர்ச்சி ஆசிரியர் எனது தோழி பருவதத்தின் கணவரே; அவளிடம் தந்து அவரிடம் சேர்க்கச் சொன்னேன்; அவர் பார்த்து உடனே இந்தக் கடிதமும் இருபது ரூபாயும் பருவதத்திடம் தந்தார். அவள் என்னிடம் தந்தாள், இதோ கடிதத்தைப் பாருங்கள்.

புஷ்பவனம் மறு மலர்ச்சி பெற்றான்; கடிதத்தை ஆவலாகப் படித்தான்:—

"ஸ்ரீ புஷ்பவனத்திற்கு, மறு மலர்ச்சி ஆசிரியர் ஆத்மபந்து வணக்கம். தங்கள் கதையின் பெயரும் கோபுரவஸ்து. அதை எடுத்து வீசியதும் கோபுர வஸ்து; கதை நயமும் கோபுரத்தின்மேல் மலர்ந்த அரிய வஸ்து தான். கதையைப் படித்து மகிழ்ந்தேன்; உடனே அச்சிற்கனுப்பினேன். இந்த வாரம் மறு மலர்ச்சியில் அது வரும். அதற்கு ரூபா இருபது சன்மானம் அனுப்பியுள்ளேன். இனித் தாங்கள் வாரந் தவறாமல் கதை அனுப்ப வேண்டுகிறேன். விருப்பமானால் மறு மலர்ச்சி துணையாசிரியராகத் தாங்கள் வேலை பார்க்கலாம்.

தங்களன்புள்ள,
ஆத்மபந்து."

சகடயோகந்தான்! புஷ்பவனம் மங்களத்தைத் தழுவி இன்பக் கண்ணீருடன் "எல்லாம் உன் அதிர்ஷ்டமடீ" என்றான்,

மறுநாள் முதல் மறு மலர்ச்சியுடன் அவன் வாழ்வும் ஐக்கியமாய் விட்டது.

# 3. வடக்கும் தெற்கும்

## 1

**பௌ**திக வகுப்பில் காந்தப் பாடம் நடக்கிறது. ஆசிரியர் **பியாரிலால்** காந்த ஊசிகளைக்கொண்டு சோதனை நடத்துகிருர். ஊசிகளின் வடமுனை வடமுனையைத் தள்ளுகிறது; தென்முனை வடமுனையைக் கவர்கிறது. அப்போது மாணவரெல்லாம் "தெற்கை வடக்கு இழுக்கிறது சார்" என்று எக்காளம் செய்கின்றனர். முருகன் கிழண் குமாரியைப் பார்த்து மெல்லக் கடைக்கண் புன்னகை பெறும்போது, மாணவர் இரகசியமாகக் கோட்டா செய்கின்றனர். பியாரிலால் "ஒத்தமுனைகள் விலகும், எதிர் முனைகள் இழுக்கும், மனிதருள் ஆணைப் பெண் கவர்வது போலே" என்று ஒரு போடு போடுகிருர். "விளங்கிவிட்டதையா" என்று மாணவர் சிரிக்கிருர்கள். "நன்ருக விளங்கக்கொஞ்சம் அனுபவம் வேண்டுமப்பா" என்று பியாரிலால் கொஞ்சம் நகைச்சுவையில் விளையாடிய பிறகு, காந்தத்தின் சக்தி எப்படிக் கவர்கிறது, எவ்வளவு பரப்பளவில் கவர்ச்சி பரவுகிறது என்பதை விளக்கப்புகுந்து, போர்டில் கணக்குப்போட்டார். அவர் அந்தப்புறம் திரும்பியதுமே இந்தப்புறம், மாணவர் "காந்தத்தின் கவர்ச்சி வகுப்பு முழுதுமே பரவியிருக்கிறது சார்" என்றனர். ஒரு காந்தத்திற்கு இத்தனை கவர்ச்சி என்று ஆசிரியர் கணக்குப் போடும்போதே "ஏழு காந்தத்திற்கு?" என்று மாணவர் மாணவிகள் பக்கம் திரும்பி நகையாடினர். இதற்குள் ஒரு கடிதம் மெல்லப் பறந்தது; இருவர் உள்ளங்களையும் இரகசியமாகப் பின்னிவிட்டது. தற்காலக் கல்லூரி வாழ்வில் இதெல்லாம் அதிசயமில்லை; நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்.

"டிங்டாங் டிங்டாங்!" மணியடித்தது. இனி விடுதலைதானே. எல்லாரும் கட்டுச் சோற்றைத் தூக்கிக் கொண்டு சுற்றியுள்ள தோப்புகளுக்குச்சென்று உண்டனர்.

## 2

பள்ளிக்கூடத்திற்கு வடக்கே ஒரு பர்லாங் தூரத்தில் ஒரு பூஞ்சோலையுண்டு. அதில் ஒரு பூம்புதர்; அடக்கமான தனி இடம். அங்கே முருகன் தன் பொதி சோற்றை அவிழ்த்தான். உள்ளே இரண்டு உளுந்து வடைகள், புளியோதரை, தத்யோன்னம் எல்லாம் இருந்தன. முருகன் வடையைச் சிறிது பிட்டு வாயில் போட்டுக் கொள்ளும்போது இலையில் ஒரு ரசகுல்லா விழுந்தது. திரும்பினான்—கலகலவென்று சிரித்துக்கொண்டே, கிரண் குமாரி எதிரே நின்றாள்.

முருகன்: கிரண்! நீ இப்படி வந்தால் நண்பர் பியாரிலாலிடம் கோளேற்றி என் படிப்பிற்கே உலை வைப்பார்கள். ஆதலால் நீ சமயமறிந்து காலமறிந்து வரவேண்டும்.

கிரண்: சரியான காலமறிந்துதான் வந்தேன், வருவேன். முருகா! இனி நம்மை யார் கேலி என்ன செய்யும்? வடக்கும் தெற்கும் கவர்ந்த பிறகு......

முருகன்: கிரண், கவர்ந்த காந்தத்தையும் தள்ளிவிட எத்தனையோ பொறாமைக் கண்கள் நம்மைக் கவனிக்கின்றன. முதலில் உனது தந்தை நமது நட்பை விரும்புவாரோ என்னமோ?

கிரண்: முருகா, எனது தந்தை சீர்திருத்தவாதி; அவருக்கு வடக்கும் தெற்கும் ஒரே இந்தியாதான்......... ஆனால் உனது முரட்டுத் தந்தையோ தொல்காப்பியத் தமிழில் உன்னை மிரட்டுவார். அவருக்கு நீ சரியான பதிற் சொல்லிவிட்டால் நமது காரியம் ஜயம்........

**முருகன் :** அதற்கு நாளுயிற்று,......எத்தனை நாள்தான் இப்படி நம்மவர் ஆரிய திராவிடச் சண்டை போட்டுக் கொண்டிருப்பது? தெற்காவது வடக்காவது? எல்லாம் ஒரே அடிமை நாடாயிருக்கிறது. வெள்ளைக்காரன் நமது தலைவிதியை எழுதும் நிலைமையில் இருக்கிறோம்......... சுதந்திரம் கேட்டால் "ஒற்றுமையாக வாருங்கள்" என்கிறார் லண்டன் துரை. நாம் ஒன்று சேராமல் வகுப்புச்சனியன்களும் பேதக்காமாலையும் நம்மை அசூயை யால் பிரித்து வைக்கின்றன. வகுப்புச் சண்டையை மெல்லத் திருகிவிட்டு வெள்ளைக்காரன் கவலையில்லாமல் இந்த நாட்டில் தர்பார் நடத்துகிறான். நமது வாழ்விலா வது இந்த வட—தென் வேறுபாடுகளை ஒழிக்கவேண்டும். இந்தியாவில் பிறந்தவன் எந்த ஊரில், எந்தத் தெருவில், எந்தப் பெற்றோருக்குப் பிறந்தாலும், இந்தியனே என்ற ஒருமையுணர்ச்சி நமக்கு வேண்டும்.

**கிரன் :** அந்த உணர்ச்சிக்காகத்தான் ரசகுல்லாவைக் கொண்டுவந்தேன்.

**முருகன் :** சரி, என் உளுந்து வடையைச் சாப்பிடு......

கிரண் உளுந்து வடையைப் பாதி கடித்துத்தந்தாள், முருகன் பெரிய ரசகுல்லாவைப் பாதி அவளுக்குத் தந்தான். அவள் சிறிது கடித்து மீதியைத்தந்தாள். காதல் பிரசாதத்தை இருவரும் உண்டனர். கிரண் கைக் கடிகாரத்தைப்பார்த்து......... "நான் போகிறேன் மணி யாயிற்று" என்று புதர்களில் புள்ளிமான் போலத் துள்ளித்துள்ளி வகுப்பிற்கு ஓடினாள். முருகன் உணவு கொண்டு பெரிய சிந்தனையில் மூளையை உலாவ விட்டுக் கொண்டே விரைவாக நடந்தான்......... "டிங்டாங் டிங்டாங்!" வகுப்பு அழைத்துவிட்டது.

## 3

முதலில் தமிழையா வகுப்பு; ஐயாவின் சங்கத் தமிழுக்கும் மாணவரின் மறு மலர்ச்சித் தமிழுக்கும் போட்டாபோட்டி நடப்பதே திருக்கூத்துத்தான். ஐயாவின் தனித் தமிழ், பிள்ளை முருகன் ஒருவனுக்கே வரும்—குல வித்தையல்லவா? ஆனாலும் முருகன் அப்புறம் போனால் மறுமலர்ச்சித் தமிழே பேசுவான். முருகன் அப்பா இருக்கிறாரா என்று பார்த்துக்கொண்டே வாயைத் திறப்பான். இன்று கிரண்குமாரியும் அங்கேயிருந்தாள்... இன்னும் ஆறு பெண்களும் இருந்தனர். தொல்காப்பியனார் பாட நூலைத் திறந்து மிதிலைக்காட்சிப் படலத்தைத் தொடர்ந்தார்.

"மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்
ஒருங்கி இரண்டுடற் குயிரொன்றாயினார்
கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ?"

தொல்காப்பியனார் இதற்குத் தொல்காப்பியச் சூத்திரங்களை யெல்லாம் போட்டுப் புரட்டி, இலக்கணமாக உரைகோடி முடித்து... மாணாக்கர்காள், இச் செய்யுளில் கம்பனார், தலைவனும் தலைவியும் இரண்டுடற் கோருயிர் போன்றே காதலித்து, எஞ்ஞான்றும் அக்காதல் வீடாது பற்றி நிற்பதை வியன்படக் கூறினாரென்க........... இக் கூற்றிற்கு உவமைச்சுவை யூட்டியிருக்கும் பண்பைக் காண்மினோ......கருங்கடற் பள்ளியில் கலவை நீங்கிய தாம்......என்ன.........விளங்கிக் கொண்டீர்களா ?

ஒருவன் : ஐயா, கருங்கடலில் பள்ளி யென்றால் பள்ளிக் கூடமா?

புலவர் : அட ! கசடா, பள்ளியென்றால் பாயல், படுக்கை.........

பகுத்தறிவு மாணவன் : ஐயா, கருங்கடல் அலை வீசுமே; அதிற் பாயல் இருத்தலெப்படி......? ஆண் பெண் இருவர் படுத்தலெப்படி...கலவி யெங்ஙனம் நிகழும் ?

புலவர் : அட மட்டி, கருங்கடலில் பாம்பின் மேல் கலவை நடந்ததடா.........

ஒரு பெண் : கலவை என்ருல்........................என்ன சந்தனமா.........குழம்பா ?

புலவர் : கலவை, கலத்தல் என்னும் தொழிற் பெயரிற் பிறந்தது. கலத்தற்ருெழிலுடையது கலவை.

மாணவர் : கலத்தற்ருெழில் எப்படி நிகழ்ந்ததையா ?

வகுப்பில் ஏக கலாட்டாதான்... கை கொட்டலும் பெஞ்சைத் தட்டலும் சிரிப்பும் விளையாட்டும் கண் வீச்சும் அமளிபட்டன.

ஒரு மாணவன் : ஐயா, கம்பனர் மருங்கிலாநங்கை என்ருரே, அப்படி ஒரு நங்கையுண்டா?

புலவர் : முட்டாள்... மருங்கிலா என்ருல் இடையே இல்லாமல் இருப்பதன்று. நுண்ணிய நூல் போன்ற இடை என்பது பொருள்............

மாணவன் : ஒருங்கிய இரண்டுடல் என்ருல் என்ன ஐயா .................

இந்த மாதிரி மாணவர் புலவரைக் கோட்டா செய்தார்கள். புலவர் விடை பகரக் கூசிஞல், " ஐயா, பரீக்கையில் இவற்றைக் கேட்பாராயின் யாம் திகைக்க நேரிடும். அச்சமயம் நமது புகழ் பெற்ற தொல்காப்பியஞரின் மாணவரோ இக் கேள்விக்குப் பின் வாங்கினவர் என்று மற்ருேர் சிறுமை செய்ய நேரிடும். ஆதலின் சொல்லிவிடுங்கள் திறந்து" என்று அசம்பாவிதமான

கேள்விகளையெல்லாம் அடுக்கி மணியடிக்கு மட்டும் ஐயாவை வம்புக்கிழுத்துத் தொலைத்தனர். வகுப்பு முடிந்ததுதான் தாமதம். முருகனையும் கிரண் குமாரியையும் நோக்கி "பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?" என்று கைகொட்டிச் சென்றனர். இப்படியே எல்லா வகுப்புக்களிலும் நண்பர் இருவரையும் கோட்டா செய்தனர். மாலையில் முருகன் டென்னிஸ் ஆடும்போது அவளும் வந்து சேருவாள். இப்படி இருவர் நட்பும் முதிர்ந்து பருவத்திற்குரிய காதற்கனலானது. கிரண்குமாரி முருகனுக்கு இந்துஸ்தானி நன்ருகச் சொல்லிக்கொடுத்தாள். முருகன் அவளுக்குத் தமிழ் சொல்லித்தந்தான்.........

## 4

ஒருநாள் ஒரு மாமரத்தைச் சுற்றிப் படர்ந்த மல்லிகைக் கொடியை முருகன் கண்டான். அதில் பூப்பறித்து ஒரு மாலை கட்டிவைத்தான். கிரண் ஓடிவந்தாள். அந்த மாலையை எடுத்து முருகன் கழுத்திற் சூட்டி "நாம் இந்த மரமும் கொடியும் போலிருப்போம்" என்ருள். முருகன் மலரும் கனியுமாகச் செழிப்போம்" என்ருன்.........பிறகு உணர்ச்சி வேகம் இருவரையும் மௌனமாக்கியது......... அந்திமாலையில் புட்களெல்லாம் ஜோடி ஜோடியாகப் பாடித்தாவிச் சிறகடித்து விளையாடின. வாழ்க்கைச் சோலையில் தாமும் அப்படி விளையாடக் காதலர் உள்ளம் துடித்தது. ஆனல் அதற்குள் செவ்வானத்தில் கருமை படர்ந்தது. உலகம் இருட்டுத்திரையில் மங்கத் தொடங்கியது...... சிறப்பொலிவால் செருக்குற்ற இயற்கையில் இரவு கரி பூசத் தொடங்கியது.

பகலும் மாலையும் கூடிக்கலந்தன...... கிரணும் முருகனும்...... இருவரும் விடு சேருமுன் சப்தரிஷி மண்டலம் பளிச்சிட்டது. கிரண் அருந்ததியைக்காட்டி ஒரு புன்னகை புரிந்து மின்போல ஓடி மறைந்தாள்.

அக்காலமே ராஜாஜி மந்திரியாகித் தமிழ் நாட்டில் அரிய பெரிய காரியங்களைச் சாதித்தார்; ஹிந்துஸ்தானியைப் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக்கினுர். அதன் விளைவாக இந்திப்போர் எழுந்தது. அப்போரில் முன்னணியிற் சென்று சிறை புகுந்த தமிழர் பலர். பின்னணியிலிருந்து வீட்டுத் திண்ணையில் சொற் போராடியவர் பலர். நமது தொல்காப்பியனுருக்கு அரசியல் கிளர்ச்சி பிடிக்காது. சிறையென்றுல் நடுக்கம். மேலும் பள்ளித் தலைவர் இந்தி நேசர். ஆதலால் புலவர் தமது நெஞ்சக்கொதிப்பையெல்லாம் திண்ணையில் வாரிவிட்டார். அவருடைய வாயைப்பெருக்கப் பத்துப்பேர் கூடுவதுணடு. அவருள் ஒருவர் ஐந்தெழுத்தனுர். அவர், "தமிழர்—ஆங்கிலங்கூடக் கற்கக்கூடாது. கற்றுல் தமிழுடன் ஆங்கிலத்தையும் கலந்துவிடுவார்கள்" என்பவர். இந்தியைப்பற்றி அவருடைய கருத்தைக் கேட்கவேண்டியதில்லை. அவர் மகன் செங்குட்டுவன் இந்தி வகுப்பிற்குப்போக மறுத்துப் படிப்பையே விட்டதில் அவருக்கொரு பெருமை. "எமது மகன் செங்குட்டுவன் வடக்கே படை நடத்தி, இமயச்சிமயத்திற்றமிழ்க்கொடி எழுதுவான்" என்று சிலப்பதிகாரத்தை ஒப்பித்துக்கொண்டிருந்தார் ஐந்தெழுத்தனுர் (பஞ்சாட்சரம்). இந்தச் செங்குட்டுவனுக்கும் முருகனுக்கும் வகுப்புப் பொறுமை பற்றிக்கொண்டது. முருகன் பள்ளிக்கூடத்திற் சேர்ந்தபோது ஐந்தாம் வகுப்பிற் படித்த செங்குட்டுவன், முருகன் பத்தாம் வகுப்பிற்கு வந்தபோதுதான் அதைவிட்டுக் கிளம்பி ஆறும் வகுப்பை எட்டினுன். அவன் கிரண் குமாரியுடன் முருகன் நெருங்கிப் பேசுவதைப்பற்றிக் கதைகட்டி அப்பாவிடம் சொல்லி, அப்பா தொல்காப்பியனுரிடம் சொல்லி, இன்று திண்ணை வம்பிற்கு அந்தப்பேச்சு வந்துநின்றது.

தொல்காப்பியனுர்; தமிழகம் தமிழருக்கே உரியது. அதில் வேற்றினத்தார் புகவொட்டோம். பிறமொழி கலக்க

வொட்டோம். இப்போழ்து இந்தி மந்தி என்னும் பேச் செல்லாம் இனி முறிந்தொடியச் செய்வோம். முயற்சி திரு வினையாக்கும்.

ஐந்தெழுத்தனர் : அண்ணா, தங்கள் தமிழார்வம் தீப் பறக்கிறது. ஆனால் தங்கள் மகனாரே, ஓர் வடநாட்டுப் பெண்ணுடன் உறவு கொண்டு காலத்தை வீணாக்குகிறார்.

இச்சமயமே முருகன் வந்தான்.

தொல்காப்பியனர் : முருகா, ஏன் இந்நேரம்? சொல் உண்மையை.

முருகன் : தந்தாய், யான் காற்பந்தடித்து நண்பருடன் சிறிது உரையாடி வந்தேன்,

தொல்காப்பியனர் : உனது நண்பர் யார்? முருகா, ஏது கெட்டுப்போனாய். நீ காதலார் (பியாரிலாலுக்குத் தனித் தமிழ்) கன்னியோடு களியாட்டயருவதை யாம் அறியோமா? அப்பெண்ணுடன் உனக்கென்ன உறவு? அவள் வடமகள், நீ தென்மகன். வடக்கும் தெற்கும் பொருந்துங் கொல்?

முருகன் : அப்பா, வடக்கு முனையும் தெற்கு முனையுந் தாம் கவர்ச்சி கொண்டு பொருந்தும்.

தொல்காப்பியனர் : கெட்டி கெட்டி; அதனாலே தான் உன் உள்ளம் வடமகள் உள்ளத்தைக் கவர்ந்தது போலும்

முருகன் : தந்தாய்! இஃதென்னே விந்தை! நாமனை வரும் இந்தியர் அல்லவோ? எத்தனை நாட்கள் இப்படி நாம் ஒருவரையொருவர் வெறுத்துக்கொண்டு கலகம் செய்வது? இன்று நாம் வடக்கானாலென்ன தெற்கானா லென்ன? எல்லோரும் அடிமைகளாகவே இருக்கிறோம். மேலும் இவ்வேறுபாடு எனக்குப் பிடிக்கவே யில்லை. தமிழ் வளரவேண்டியது தான். அதற்காக நாம் ஏன்

இந்துஸ்தானியை மறுக்க வேண்டும்? அதுதானே இப்போது நமது நாட்டிற்கெல்லாம் தாய்மொழியாகவல்லது. அதற்காகத்தானே நானும் அதைப் பயின்றேன். நீரும் பயின்ருல் குமரிக்கண்டக் கதைகளை வடநாட்டாருக்குச் சொல்லலாமே. நீர் தனித் தமிழிற் பேசினுல் எந்த வட நாட்டுக் காதும் கேட்காதே.

தொல்காப்பியனுர்: அட, களி, மடி, மாணி, கயவா, கள்ளா, தடியா, மடையா, குடிகேடா, இந்தி கற்ருயா? அவளிடமா? சரி சரி சரி...நீ இனி நமது பிள்ளையில்லை. போ, அவளுடனேயே போ...போடா உன் முகத்தில் யாம் விழியோம்...போ...இந்தி இயக்கத்தில் இத்தனை தமிழர் சிறை சென்றிருக்கிருர்கள்; தமிழனுகப் பிறந்த நீ, நமது மகனை நீ, தொல்காப்பியரிடம் பயின்ற நீ, இந்தி கற்பதாம்! வடமகளுடன் குலாவுவதாம்...கெட்டி கெட்டி! நமது மானத்தைக் கெடுக்கவே பிறந்தாய்...போ, போ.

முருகன்: அப்பா வணக்கம்; செல்கிறேன்.

முருகனுக்கு ரோசம் பொறுக்கவில்லை. தனித்தமிழ் வளர்ப்பதிலும் அவனுக்கு வெறுப்பில்லை. ஆனுல் நமது சகோதரரான வடநாட்டாரை அசூயையுடன் இகழ்வதையே அவன் வெறுத்தான். முருகன் ஒரு கடிதம் எழுதி மறுநாள் வகுப்பில் மெல்ல, கிரண்குமாரியின் புத்தகத்தில் வைத்துவிட்டு எங்கோ கிளம்பிவிட்டான். பிறகு அவனைப் பற்றித் தகவலேயில்லை.

## 5

பியாரிலால் கோரக்பூரில் பிறந்து பரம ஏழைக் குடும்பத்தில் வளர்ந்து கோயங்கா என்பவரின் உதவியால் படித்து எம். ஏ. தேறியவர். உடனே அவர் சபர்மதி சென்று மகாத்மாவுக்குத் தொண்டு செய்தார். அவரை மகாத்மா தெற்கே ஹிந்துஸ்தானி பிரசாரத்திற்கே

அனுப்பினர். இங்கே அவர் தமிழை நன்ருகக் கற்ருர். தமிழ்நாடு அவருக்குப் பிடித்துப் போனது. இங்கே வந்த பிறகே அவர் சென்னை தங்கசாலைத் தெருவில் கோகுல் தாஸ் மகள் ருக்மாயியை மணந்தார்; கிரண்குமாரி பிறந்தாள் உப்புச் சத்யாக்கிரகம் வரையில், அவர் மகாத்மாவையே பின்பற்றினர். அந்தச் சத்தியாக்கிரகத்தில் அவர் இடது தோளில் பெரிய காயம் பட்டது..............மகாத்மா, "இனி நீ உபாத்தியாயர் வேலை பார்த்து மாணவரிடையே தேசாபிமானத்தை வளர்" என்று உத்தரவிட்டார். பியாரிலால் தேசியக் கல்லூரியில் இடம்பெற்று, ஸயன்ஸும் ஹிந்தியும் பயிற்றி வந்தார். அவருக்கு கிரண் குமாரியிடம் உயிரன்புண்டு. அவளை உயர்ந்த படிப் பளித்து, பெண்கல்விப் பணியில் ஈடுபடுத்த அவர் விரும்பினர்......கிரண்குமாரிக்கு இப்போது வயது பதினைந்து. ஸ்கூல் பைனல் தேர்வு நடந்துவிட்டது தாயார் அதற்குள் கலியாணப் பேச்செடுத்தாள். பியாரிலால் அவளை ஒரு நல்ல தமிழ் வாலிபனுக்கே தரத் தீர்மானித்திருந்தார். தம் மாணவருள் ஐந்தாறு பேர்கள் அவளை விரும்பிக் காதற் கடிதங்களும் எழுதினர். கிரண் அனைத்தையும் கிழித்தெறிந்தாள். அம்மா கலியாணப் பேச்செடுக்கும் போதெல்லாம் இவள் துளசி ராமாயணத்தை உரக்கப் படித்துப் பேச்சை அமுக்கி விடுவாள். அவள் உள்ளம் முருகனுக்கே துடித்தது. பியாரிலாலுக்கும் முருகனிடம் பிரியமே. ஆனல் அவன் தந்தையின் போக்கு அவருக்குப் பிடிப்பதில்லை. முருகனும் மறைந்த பிறகு அவன் நினைப்பும் அவருக்கு மறைந்தது. ஆனல் கிரண் மறப்பாளா?

6

கிரண்குமாரி பி. ஏ. தேறிய பிறகு, சேவாகிராமம் சென்று வர்தாக் கல்வி பயின்று மகிளா மந்திரத்திற் சேவை செய்தாள். ஒருநாள் மஹாத்மா காந்தி, மஹாதேவதேசாயை, "மஹாதேவ், ஸ்ரீபுரியில் அஹிம்சாபாய்

தொண்டு எம்மட்டில் உள்ளது ? அவர் ஒரு பெண் கலாசாலை வைக்கவேண்டும் என்றுரே" என்று கேட்டார். "அஹிம்சா பாய் ஸ்ரீ புரியைக் காந்திபுரியாக்கிவிட்டார். அங்கே சர்க்காப்பாட்டும் கதர்த்தறியின் தாளமும், கலப்பை ஓசையும், கைத்தொழில்களின் துடிப்பும், கல்வியின் நாதமும் கேட்கின்றன. கட்குடி நின்றது. அவரவர் உழைத்துப் பிழைக்கின்றனர். எல்லாருக்கும் தமிழ் ஹிந்தி எழுதப் படிக்கத் தெரியும். காலை மாலை பஜனை நடக்கிறது. சென்ற மாதமே அஹிம்ஸா பாய் குமாரி வித்யாலயம் தொடங்கினுர். அதில் இப்போது நூறு பெண்கள் படிக்கிருர்கள். அதற்கு ஒரு தலைமை ஆசிரியை வேண்டும் என்று சென்ற வாரமே கடிதம் எழுதினுர்" என்றுர் தேசாய்.

மகாத்மா, கிரண்குமாரியை அன்புடன் அழைத்து, "குமாரி வித்யாலயத்தை நீ நடத்து...உனக்கு மங்கல மாகுக. ஓம் ராம்" என்று ஆசிர்வதித்தனுப்பினுர். அஹிம்ஸா பாய்க்குத் தந்தி பறந்தது.

ஸ்ரீபுரி நான்காண்டுகளுக்கு முன் மூதேவிபுரியாகத் தானிருந்தது. அஹிம்ஸா பாய் அங்கே அரிய தொண்டு செய்து, புதிய கிராமத்தையே நாட்டினுர். இன்று அது திருமகள் வாசமாயிருக்கிறது.........அஹிம்ஸா பாயைக் கிராமவாசிகள் சோடா காந்தி என்று மதிக்கிருர்கள். சோடா காந்தி சொல்லுக்கு இரண்டில்லை.

இன்று புத்தாண்டு நாள்......சித்திரைத் தென்றல் பூ மணத்தை அள்ளிவருகிறது. கிராமம் தோரணமும், வாழை கமுகும், கோலமும், மேளதாளமுமாயிருக்கிறது. திவ்ய கானங்கள் தமிழிலும் இந்தியிலும் முழங்குகின்றன. வந்தாள் கிரண்குமாரி. கிராமத்தில் புதிய களை வீசியது... பார்த்தான் அஹிம்சா பாய்......"ஆ கிரண்குமாரி...நீயா..." என்றுன். "முருகா நீயா அஹிம்ஸா பாய்"...என்று களி பொங்கினுள் கிரண். பிரிந்தவர் கூடினுல் பேசல் வேண்டுமோ?

மறுநாளே பியாரிலாலுக்குத் தந்தி வந்தது. தொல் காப்பியனார் மனமும் முருகன் மறைந்த பிறகு மாறிப் போனது. அவரையும் இழுத்துக்கொண்டு பியாரிலால் ஸ்ரீபுரிக்கு வந்தார். மஹாத்மா காந்திக்குத் தந்தியடித்தார் "அஹிம்சா-கிரன் மங்கலமாக வாழ்க" என்று மஹாத்மா தந்தி பேசினார்......முருகனும் குமாரியும் மனங்கனிந்த திருமணம் புரிந்து, தேசசேவை செய்தனர். ஸ்ரீபுரிக்கு இருவரும் தாய் தந்தையர் போல் விளங்குகிறார்கள். முருகன் துளஸி ராமாயணத்தைத் தமிழில் எழுதினான்; கிரண் கம்பனை இந்தியில் எழுதினாள். வடக்கே செல்லும்போதெல்லாம் இவன் கம்பனைப் படிக்க அவள் இந்தியில் விளக்கினாள். தென்கலை வடக்கே புகழ்பெற்றது......வடக்கும் தெற்கும் ஒன்றுயின...மங்களந்தானே !

## 4. சபாஷ் சிங்கம்!

தமிழரின் வீர ரத்தம் உங்கள் நரம்பிலும் ஓட வேண்டும்! பாருங்கள் மருதுவை: 'பட் பட்' என்று முண்டா தட்டுகிருன்; எட்டுத் திசையும் சபாஷ் என்று எதிரொலிக்கிறது! வாள் போன்ற மீசையை முறுக்கி விடுகிருன்! "ஹ ஹ" என்ற ஓர் அட்டகாஸச் சிரிப்பு! "ஹூம்" என்ெருரு பெருமூச்சு! உடனே கையில் துப்பாக்கியெடுக்கிருன். ராணி வேலு நாச்சியார் முன் வருகிருன்:

ராணி: மருது, ராசா போனபிறகு நமக்கென்ன இருக்கிறது!

மருது: தாயே, வீரம் இருக்கிறது. தமிழ் ரத்தம் சிவப்பை இழந்தாலும், வீரக் கனலை இழக்காது.

ராணி: கும்பினிப் பட்டாளந்தான் சீமையைப் பிடித்துக் கொண்டதே.

மருது: உலகையே பிடித்துக்கொண்டாலும் புலி மருதைப் பிடிக்க முடியாது.

ராணி: மருது, என்னைச் சிறைப்பிடிக்க வருகிருர்களே!

மருது: தாயே, நான் உள்ளமட்டும் நடவாது. கிளம்புங்கள். இதோ 2,000 வீரர் முன் செல்லுங்கள்; பூச்சி நாயக்கன் ஊரில் தங்குங்கள்; பிறகு திண்டுக்கல்லில் சந்திப்போம்.

அவன் உத்திரவுப்படியே எல்லாம் நடக்கிறது; அரசச் சின்னம், விருது, மகுடம், பொன்மணித்திரள்கள் எல்லாம் உடனே பூமிக்கடியில் மறைந்தன. இரவில் ராணி ஒரு நண்பர் ஊர் சென்ருள். அங்கிருந்து திண்டுக் கல்லுக்குப் புறப்பட்டாள்.

திண்டுக்கல்லில் திப்புசுல்தான் முகாம் போட்டுப் பாண்டி நாட்டைப் படையெடுத்தான். திண்டுக்கல் குன்றில் அவனும் திப்பு சுல்தானும் அமைத்த வெடி மருந்துக் குகை இன்றும் உள்ளது. ஒரு பீரங்கிகூடத் துருவேறிக் கிடக்கிறது. ஐதராலியும், திப்பு சுல்தானும், ராஜா கானும் பாண்டிய நாட்டு நிலையைப் பற்றிப் பேசுகிறார்கள். சிவகங்கையில் மறவர்கோன் கும்பினிக் காரருடன் போர் செய்து இறந்த செய்தியும் வருகிறது. மருதுவைப் பற்றியும் பேச்சு நடக்கிறது. "மர்து படா ஆத்மி" என்று ராஜா கான் வர்ணித்துக் கொண்டிருந்தான்.

ஐதர் : படா ஆத்மியானால் என்ன செய்வான் ?

ராஜா : நூறு வீரர் செய்ய முடியாததை அவன் ஒருவன் செய்வான். அவன் பலத்தைக்கண்டு நாம் ஆச்சரியப்படுவோம்.

இப்படி இங்கே பேச்சு நடக்கும் போதுதான் இராணி வேலு நாச்சியார் தன் ஆட்களுடன் திண்டுக்கல் எல்லையை மிதித்தாள்.

'யாரோ எதிரி' என்று திப்பு சுல்தான் ஒரு சிறு படை கொண்டு ஓடினான். ஹிந்துஸ்தானி தெரிந்த மறவர் "துஷ்மன் நை, மித்ரதல்! தோஸ்த்" (பகைவரில்லை நண்பர்; நேசப் படைகள்) என்று கூறினர். வாலிபத் திமிர் கொண்ட திப்பு கேட்கவில்லை; எல்லாரையும் கைது செய்யப் போனான்; வேலு நாச்சியார், "ஐயோ! மருது எங்கே?" என்று கூவினாள். இதோ என்று பெரிய மருது. சின்ன மருது இருவரும் ஓடிவந்தார்கள். பெரிய மருதுவுக்கு "டுட் பூட்" ஹிந்துஸ்தானி தெரியும். சின்ன மருது அறிவாளி; ஹிந்துஸ்தானி சுமாராகப் பேசுவான். அவன், 'ஐயா, நாங்கள் உங்கள் நண்பர்கள். முன்பே

தகவல் அனுப்பியிருக்கிறோம்; சுல்தானுக்குத் தெரியும்'' என்றான். திப்பு கேட்காமல், வேலு நாச்சியாரைக் கைது செய்யப் போனான்; பெரிய மருது கண் சிவந்தது.-''சாஹெப் வா, கை கலப்போம் ; நியாயமாகச் சொன்னதைக் கேளாமல் நடந்தாய்......'' என்று தொடை தட்டித் திப்புவை ஒரு கட்டுக் கட்டி இரும்புப் பிடியாகப் பிடித்துக்கொண்டு, "சாஹிபு நாம் இருவரும் நண்பராக வேண்டுமா; விரோதிகளாக வேண்டுமா? விரோதியானால், இப்படியே அப்பளமாக்கி விடுவேன்'' என்றான். இதற்குள், ராஜா கான் வந்துவிட்டான். சின்ன மருது அவனிடம் விஷயத்தைச் சொல்லவே, அவன் திப்புசுல்தானைச் சமாதானம் செய்து "நமது நண்பர் இவர்கள்'' என்றான். திப்பு "ஸலாம் ஸலாஹ்!'' என்று புன்னகைத்து, எல்லாரையும் ஐதரிடம் அழைத்துச் சென்றான்.

ஐதர்: திப்பு, இந்த மர்து (மருது) உன்னைவிட முரடன், பலசாலி; நீ புலி, அவன் சிங்கம் என்றான்.

திப்பு: சிங்கமானால் என்ன செய்வான்? கும்பினிக்காரரை பீட் புரட்டுவானா?

ஐதர்: திப்பு, இதுதானா பிரமாதம்? இன்னும் எவ்வளவோ வேலை செய்வான்.

திப்பு: எங்கே இந்த கும்பினி ரூபாயை இரண்டாய் ஒடிக்கட்டும் பார்ப்போம்.

ஐதர்: சும்மா ஒடிப்பானா? ரோஷம் கிளம்பினால் ஒடிப்பான்! மர்து, இந்த ரூபாய்தான் கும்பினி அதிகாரம் என்றால் நீ என்ன செய்வாய்?

மருது ரூபாயைப் படக்கென்று வாங்கினான்; இரண்டு துண்டாக்கி சுல்தான் முன் வீசினான்.

திப்பு, "அரே, பயில்வான்!'' என்று மூக்கில் விரல் வைத்தான். ஐதர், "சபாஷ் சிங்கம்!'' என்று முதுகில் தட்டிக்கொடுத்தான்.

# 5. புரட்சிக் கோமாளி

## 1

**வா**ல்தேர், ரூஸோ — இவ்விருவரும் எழுத்தினல் பிரஞ்சுப் புரட்சியைத் தூண்டினர். வால்தேரின் உரையும் கவியும் விறுவிறுப்பான உணர்ச்சியும் முறுக்கான நடையுங்கொண்டன. அவனது கட்டுரை, கதை, நாடகம் கவிதை எல்லாம் அடிமை மனப்பான்மையைத் தகர்த்தெறிவன. ரூஸோ எத்தனையோ துயர்களைப் பொறுத்து, அனுபவத்தால் மனித சமுதாயத்திற்குச் சுதந்தர வழி காட்டினன். “மனிதனுக்கு மனிதன் அடிமையில்லை; மதத்திற்கோ மன்னனுக்கோ குடிகள் அடிமையில்லை. குடிகளின் நன்மையே அரசின் குறிப்பு. குடிகளாலேதான் குடிகளுக்கு நன்மைவரும். முடியரசும் தடியரசும் ஒழிந்து குடியரசு வரவேண்டும்” என்று ரூஸோ தன் சமுதாய ஒப்பந்தத்தில் அழுத்தமாக எழுதிச் சென்ருன். அவன் வாக்கே பிரஞ்சுப் புரட்சியையும், அமெரிக்கப் புரட்சியையும் தூண்டியது.

## 2

பிரான்ஸில் லூயி XVI தன் ஆஸ்திரிய மனைவியுடன் சுயேச்சாதிகாரம் நடத்தினன். வரிச்சுமை, அடிமைச் சுமை இரண்டும் குடிகளைக் கிட்டிபோட்டு வருத்தின. “உரிமை” என்ருல் பஸ்தீல்; “குடியரசு” என்ருல் கொலைதான். நாடெங்கும் ஒற்றர்; அரசனுக்கு எதிராக மூச்சு விட்டால் உடனே கைது செய்து, சட்டப்படி தண்டித்துத் தலையைத் துண்டித்துவிடுவர் அதிகாரிகள். இந்த எமகண்ட தர்பார்கூட சுதந்தரத்தின் மூச்சைப் பிடிக்க முடியவில்லை. ஜன சக்தி நீறு பூத்த நெருப்பைப் போலிருந்து, மெல்லமெல்லக் கனன்றெழுந்தது. ஓட்டல்

களிலும் வீடுகளிலும், நாடகமேடைகளின் பின்புறங்களிலும் இரகசியக் கூட்டம் நடந்தது. ஒத்திகை நடத்துவதுபோல நடிகருடன் புரட்சிக்காரரும் கலந்து கிளர்ச்சி நாடகத்தை ஜோடித்தனர். இந்த நாடகத்தில் பெரும் பங்கு கொண்டிருந்தவன் ஒரு கோமாளி என்றால் வியப்பீர்கள்.

## 3

ஆம், லாபுஸ்ஸியேர் (Charles de Labussiere 1768-1802) பாரிஸ் நாடக மன்றங்களில் கோமாளியாக நடித்துப் பிழைத்த வாலிபன். அவன் பெரிய செல்வக் குடும்பத்தில் பிறந்தவன். ஆனால் காற்றுக்குப் பிறந்து தூசிக்கு வளர்ந்த ஏழைகளுடன் ஐக்கியமானவன். அவன் பசித்தபோது கிடைத்ததை உண்பான்; தலை சுழற்றினால் கிடைத்த இடத்தில் தலையைச் சாய்ப்பான்; பணம் கிடைத்தால் தான் உண்டதுபோக மீதியை அப்படியே பிச்சைக்காரருக்குத் தருவான்; அவன் இயற்கையின் செல்லப் பிள்ளை; கட்டுப்பாட்டின் விரோதி. அவன் அறிவும் கட்டுப்பாடில்லாமல், இயற்கையாகவே வளர்ந்தது. தலைவர்கள் பேசுவதை அவன் கேட்பான்; அவர்கள் போலவே அபிநயிப்பான். சமுதாய வாழ்வில் ஆண் பெண் நடையுடை பாவனைகளை அப்படியே நடித்துத் தனது தோழரைச் சிரிக்கவைப்பான். நாடகம் என்றால் அவனுக்குப் பெரு மகிழ்ச்சி; ஏதாவது ஒரு வேலை செய்து உள்ளே புகுந்து தன் சகாக்களுடன் நாடகம் பார்ப்பான். மறுநாள் அவனே ஒரு நாடகம் நடத்துவான். அவன் முதலில் விளம்பரப் பையனாக நாடகமேடையிற் புகுந்தான். தெருத் தெருவாக வீடு வீடாக நாடக அறிக்கை தந்து, நகைச்சுவையுடன் நாடகத்தைப்பற்றிப் பேசி, அனைவரையும் "வாருங்கள், வந்து பாருங்கள், களி கூறுங்கள்; ஆசிதாருங்கள்" என்று அழைப்பது அவன் வேலை. இந்தச் சிறுவன் பேச்சுக்கே பலர் நாடகத்திற்கு வந்தனர். பாரிஸில்

மேரோ (Mareau) என்ற ஒரு புகழ்பெற்ற நாடகச் சபையுண்டு. அதன் தலைவர் இந்தப் பையனின் நகை ததும்பும் பேச்சையும், நடி—திறனையும் கண்டு, "பையா நீ கோமாளியா யிரு" என்றார்.

லா புஸ்ஸியேர் நாடகக் கோமாளியானான்.

ஆனால் இந்தக் கோமாளி கெக்கெக்கே — கோமாளியன்று; இவனுடைய நகைச்சுவை ஜனங்களைச் சிரிக்க வைப்பதுடன் உணர வைக்கும். ரூஸோ பேனாவில் இரத்தம் கக்க எழுதி உணர்ச்சி யெழுப்பினான். லாபுஸ்ஸியேர் வயிறு வெடிக்கச் சிரிக்கும்படி பேசி, மனித சமுதாயம் இவ்வளவு மிருகத் தன்மையடைந்திருக்கிறதா? என்று உணரவைத்தான். அவனுடைய நகைச் சுவை சமுதாய சீர்திருத்தத்திற்கும் அரசியல் சுதந்தரத்திற்கும் மருந்தா யிருந்தது. அவனை எல்லாரும் விரும்பினர்.

4

இந்தச் சமயந்தான் பிரஞ்சுப் புரட்சி குப்பென்று பற்றிக்கொண்டது. மேரோ நாடகமேடையின் பின்புறம் இரகசியக் கூட்டம் நடக்கும்; முன்புறம், லேபுஸ்ஸியேரின் அரசியல் ஹாஸ்யம் நடக்கும். மதத்தின் பெயராலும், அவதாரப் பெயராலும் குருக்களும், சுயேச்சாதிகாரப் பிரபுக்களும் கொடுங்கோலாட்சியைப் போற்றிய சீர்கேட்டை இந்தக் கோமாளி நகைச் சுவையுடன் ஜனங்கள் மனம் பற்றியெறியும்படி பேசிவந்தான். மிஷனரிகள் சீறி விழுந்தனர்.

**லாபுஸ்ஸியேர்:** ஐயா நீங்கள்மட்டும் ஜனங்களை நரக வர்ணனையால் நரக வேதனை செய்கிறீர்களே; சும்மா கிடக்கிற பேர்களைப் பணம் வாங்கிக்கொண்டு சுவர்க்கத்திற்குப் போகச் சொல்லுகிறீர்களே.........

**பாதிரிகள் :** நாங்கள் மிஷனரிகள்; மனிதருக்கு ஏசுநாதர் பெயரால் ஆன்ம விடுதலை தருகிறோம்.

**லாபுஸ்ஸியேர் :** ஐயா சாமியாரே! நீங்கள் மிஷனரிகளானால் நாங்கள் மோஷனரிகள் (Motionaries). மனச்சாட்சியின் பெயரால் ஆன்மாக்களுக்கு அரசியல் விடுதலை தருகிறோம்; கொடுங்கோல் நரகத்தினின்று பொது ஜனங்களை விடுவிக்கிறோம். நாங்கள் பொதுநலத்திற்கே சுற்றித் திரிகிறோம்.

இம்மாதிரி நமது கோமாளி வாதாடினான். "மோஷனரிகள்" என்று இவன் வாக்கில் வந்த பதமே அந்தக் காலப் புரட்சிக்காரருக்கு இரகசியப் பெயரானது. அவர்கள் "டே கோமாளி! அரங்கமேடை போதும்; வா அரசியல் மேடைக்கு" என்றழைத்தனர். உடனே நாடகக் கோமாளி புரட்சிக்கோமாளியானான். அவன் சேர்த்த பணமெல்லாம் புரட்சிக்கே தந்தான். மோஷனரிகளுடன் ஊர் ஊராய்த் தெருத்தெருவாய்ச் சுற்றிப்பிரசாரம் செய்தான்.

## 5

அவன் பேச்சைக் கேட்க அரச பக்தர்கள்கூட மாறு வேடம்போட்டு வந்தனர். ஒற்றர்கூடச் சிரித்துக் கொண்டே குறிப்பெடுத்தனர்; போலீஸ்காரர்கூட மனச்சாட்சியின் குத்தலுக்குப் பயந்தனர். லாபுஸ்ஸியேர் தலைசிறந்த மோஷனரி; ஆனால் அவன் தன்னைத் தலைவன் என்று செருக்காடியதில்லை. விருந்தும், மாலையும், 'ஜே'யும், ஊர்வலமும் வேண்டவில்லை; மாலை போட்டால் அதை அவன் உடனே விற்றுப் புரட்சி நிதிக்குத் தருவான். பத்து மைலுக்குள் இருக்கும் ஊர்களுக்கு நடந்தே சென்று பிரயாணப் படியைப் புரட்சி நிதிக்குத் தருவான். படித்தவர் கூட்டத்தில் மெலுக்காகப் பேசிக் கரகோஷம் பெறும் தலைவனல்ல அவன்; பாமரர் கூட்டத்திலேயே அவன் பெரும்பாலும் பேசுவான்; சந்தை, கடைத்தெரு,

யூதச்சேரி, தொழிலாளர்புரம், ஊர்காலிகள் தங்குமிடம், குக்கிராமங்கள், சந்து பொந்துகளிலெல்லாம் அவன் குரல் இடி முழங்கும். பெரிய பெரிய சர்க்கார் உத்தியோகஸ் தரின் அமுல்களையும் அட்டகாசங்களையும், பதவிச் செருக்குக்களையும் அவன் சிரிக்கச் சிரிக்க அபிநயித்துக் காட்டுவான். லூயி மன்னன், மேரி ஆந்தோநித்—போல நடிப்பான். "கோமாளி ராசாவுக்கு ஜே!" என்று பாமர ஜனங்கள் உற்சாகமாக அவனை வரவேற்பார்கள். "புரட்சிக் கோமாளி வருகிறன்" என்றாலே போதும்; வேறு விளம்பரம் தேவையில்லை. சில ஊர்களில் அவனே ஒரு பறையைத் தட்டிப் பாடிக்கொண்டு தெருக்களில் போவான்; ஊர் முழுதும் அவன் பின்னால் வரும். காலை எழுந்ததும் கால் வண்டியைத் தட்டிவிட்டு வாயைத் திருகி விடுவான்; பசித்தபோது உண்பான்; களைத்தபோதே உறங்குவான். மீதி நேரமெல்லாம் புரட்சி வேலையிலேயே செலவிடுவான்.

## 6

லூயி சர்க்கார் சும்மா இருக்குமா? ஒற்றர், கோமாளியைப் புரட்சிப் புலியாக வர்ணித்துப் புகார் செய் தனர். இந்தக் கோமாளி என்ன செய்துவிடுவான் என்றே பிரபுக்கள் முதலில் அலட்சியமாயிருந்தனர்; நாளடைவில் அவனைச் சுற்றும் ஜனக்கடலைப் பார்த்துப் பயந்தனர்.

"பஸ்தீல் கொடுஞ்சிறையில் தள்ளவேண்டியதுதான் இவனை" என்று அரசனிடம் கோளேற்றினர். அரச ஊழியரில் கோமாளியின் நண்பர் பலர்; இரகஸ்யப் புரட்சிக்காரர் பலரும் இருந்தனர். அவர்கள் ஒரு தந்திரம் செய்தனர். ஒரு மாதம் புஸ்ஸியேர் பேசாமல் சாதுவா யிருக்கச் செய்தனர்; "ஆள் அடங்கிப் போனன்" என்று ஒற்றர் நம்பும்படி செய்தனர். பிறகு ஒரு தந்திரம் நடந்தது; புரட்சித் தீ அரசாங்க ஊழியரிடையே பற்றவே

அந்த வேலே. பொதுஜன அமைதி இலாகா ஒன்றுண்டு; நாட்டில் அரசியல் கிளர்ச்சி எழாமல் அது பாதுகாக்க வேண்டும்; அந்தச் சபையில் சில புரட்சிக்காரரும் நுழைந்தனர்; அவர்கள் லாபுஸ்ஸியேரையும் சேர்த்துக் கொண்டனர். "நான் அடிமைச் சேவகம் பார்க்க மாட்டேன்" என்று கோமாளி முதலில் முனிந்தான்; விஷயம் தெரிந்த பிறகே ஒப்புக்கொண்டான். அமைதி இலாகாவில் பொதுஜனங்கள் அரசியலில் உள்ள குறைகளை முறையிடும் இலாகா ஒன்றுண்டு. முதன்மையாகக் கைதிகளின் முறையீடுகள் அதில் வரும். பஸ்தில் கைதிகள் அரசாங்கத்தை காரமாகத் தாக்கி எழுதுவார்கள். இலாகா உத்தியோகஸ்தரை "மடையா, தடியா" என்று தாக்கி மொட்டை விண்ணப்பங்கள் வரும். இவற்றை யெல்லாம் பார்த்துக் கோமாளிக்கு எரிச்சலுண்டானது. "போதுமப்பா வசவு; என்னை விடுதலை செய்" என்று அவன் மேல் உத்தியோகஸ்தனிடம் முறையிட்டான். "சே, இப்போது நீ வேலையைவிட்டால் உயிரைவிட நேரிடும். நீ சிறை யிலாகாவைமட்டும் கவனி" என்ருன் உத்தியோகஸ்தன்.

கோமாளிக்கு மகா சங்கடமான வேலே கிடைத்தது; கைதிகளின் குற்றப் பத்திரங்களை அவன் அடுக்கி வைக்க வேண்டும்; மரண தண்டனைக் கைதிகளின் தீர்ப்பில் கோர்ட்டு முத்திரை குத்தவேண்டும். நிரபராதிகளான பலர் கொடுஞ்சிறையிலும் தூக்கு மேடையிலும் சாவதை அவன் கண்டு பல்லைக் கடித்தான். "நண்பா! மரண தண்டனைக் கைதிகளைத் தூக்குப் போடுவானேன்? என் உத்தியோகத்தில் ஒரு நாள் போட்டாலே போதுமே; நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாமே" என்ருன் புரட்சிக் கோமாளி. "பொறு பொறு நண்பா! இந்த அநீதிக் கட்டுகள் எல்லாம் நம்மிடம் பத்திரமாயிருக்கவே உன்னை இங்கே போட்டோம்" என்ருன் நண்பன்.

கோமாளி, பிரபுக்களுக்கும் நீதிபதிகளுக்கும் வணக்கம்— நடித்து இங்கே பலே வேலை செய்தான். கைதிகளைக் கண்டு—"உஷாராயிருங்கள்—சிறைக் கதவை உடைக்கும் நாள் வருகிறது" என்று தூபம் போட்டு விட்டான்.

நீதி இலாகாவில் வஞ்சமும் லஞ்சமும் தாண்டவமாடின. கோமாளி அரசியல் கைதிகளின் குற்றப் பத்திரங்களை மறைத்தான். பலரைக் கொலைகாரர் கையிலிருந்து காத்தான். முக்கியமான பத்திரங்களையெல்லாம் புரட்சி நண்பரிடம் சேர்த்தான்.

"நிரபராதியான பலர் தூக்குமேடை செல்வதை நான் தடுத்தேன்; அவர்கள் புரட்சி வீரரானார்கள். கதியற்ற குடும்பங்களின் பெற்றோர் பலர் சிறையுண்டனர்; அவர்களுக்கு நான் உதவினேன். மரணதண்டனைக்காரர் ரிகார்டுகளை ஒளித்து வைத்தேன்; நீதிபதி இன்று இருபது பேருக்குத் தூக்குத் தண்டனையிடுவார். அவர்கள் மரணப் பத்திரத்தை நான் கொலைகாரரிடம் தரவேண்டும். பத்திரத்தை நான் மறைத்து விடுவேன்; அல்லது சிலவற்றையே தருவேன்; அல்லது நானே புதிய பத்திரங்களையும் உண்டுபண்ணுவேன். நான் பரபரப்பாகப் பத்திரங்களை எழுதுவதும் அடுக்குவதும் தடபுடல் செய்வதுமாயிருப்பதைப் பார்த்து அதிகாரிகள் 'சுறுசுறுப்பான ஊழியன்' என்று மெச்சுவார்கள். வரவர, தேசாபிமானிகளுக்கே மரண தண்டனை அதிகமானது. இந்த மாதம் என் உயிரான புரட்சி வீரர்—தேலநூர் வில்நீ போன்றவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப் பெற்றிருந்தது. அவர்களுடைய குற்றப் பத்திரங்கள் கட்டுக்கட்டாயிருந்தன. நான் கொலைகாரரிடம் அவர்களைக் காட்டித் தரவேண்டும்; என் மனச்சாட்சி நரகவேதனைப்பட்டது. குற்றப் பத்திரங்களைக் கிழித்தெறியவும் முடியாது; சத்தம் கேட்டால் ஆபத்து கொளுத்தவும் இடமில்லை.

நான் ஒரு தந்திரம் செய்தேன்; வாளிகளில் நீர் நிரப்பி அதில் ரிகார்டுகளை ஊறவைத்துப் பிழிந்து, பிசைந்து, பந்து பந்தாக உருட்டி அருகில் ஓடும் லுவார் நதியில் விட்டெறிந்தேன்.''

எவ்வளவு துணிச்சல்! இது மட்டுமா? மரண தண்டனை பெற்ற புரட்சி வீரர் தப்பியோடவும் வழி செய்து விட்டான் கோமாளி. நீதிபதி தண்டனை விதிக்கிறார்; கொலைகாரன் வாளைத் தீட்டிக் காத்திருக்கிறான்; கைதிகள் மட்டும் மாயமாகின்றனர். ஸான்மூஸ்து, ஹெர்போ, டின்வில் போன்ற பெரிய பெரிய நீதிபதிகளெல்லாம் திகைக்கின்றனர். ஒற்றர் ஆட்களை அலசுகின்றனர். முடிவில் கோமாளிமேல் சந்தேகம்; பல உத்தியோகஸ்தர் மேல் சந்தேகம் பிறந்தது. எல்லோரையும் தூக்குப் போடு என்றான் அரசன்.

## 7

கோமாளி வேலையை ஓர் ஒற்றன்கண்டு கோளேற்றி விட்டான். லாபுஸ்ஸியேரை உடனே தூக்குப்போட உத்தரவு வந்துவிட்டது; இதோ கிங்கரர் வருகின்றனர்; கோமாளியின் அறை உள்ளே பூட்டியிருக்கிறது; கிங்கரர் உடைக்கின்றனர்; ''டே கோமாளி! வா தூக்குமேடைக்கு'' என்று குடி வெறியும் அதிகார வெறியும் ஏறிக் குமுறுகின்றனர்; எதிரொலி தவிர அங்கே ஒன்றுமில்லை; ஆபிஸ் ரிகார்டுகள் எல்லாம் காலி! அங்குமிங்கும் வலைபோட்டுத் தேடுகின்றனர்; ஆள் மாயமானான்! எங்கே?

சிறையின் சமயலறையில் விறகு அடுக்கும் இடமுண்டு. அதில் காற்றும் புகாது; புழுக்கமான இடம். அங்கே ஏதோ மௌனச் சாடைகள் நடக்கின்றன; சிலர் இதயத் துடிப்பால் பேசுகின்றனர். திடீரென்று விறகுகட்டுகளைப் புரட்டுகின்றனர். ஓர் ஆள் எழுந்திருக்க முடியாமல்

அங்கே தவிக்கிருன்; அவனைத் தூக்கிவிட்டு வெளியே கொண்டு செல்கின்றனர். சிறைக்கு வெளியே சென்றதும், எல்லோரும் "சுதந்தரம் வாழ்க!" என்கின்றனர். "சுதந்தரத்திற்காக நான் சாக!" என்னும் அவனே நமது புரட்சிக் கோமாளி.

கோமாளி மரண தண்டனைப் பத்திரங்களையெல்லாம் ஒரு சுமையாகக் கட்டி மறைத்துக்கொண்டு, ஒரு புதிய கனவான்போல் மாறுவேடம்போட்டு நடந்தான். இதற்குள் அவனைத் தேடி ஒற்றர் சுற்றினர். ஊரில் உள்ள கோமாளிகள், ஹாஸ்ய நடிகர்கள் அனைவரையும், அரசன் பிடித்து, பஸ்தீலுக்குள் தள்ளிவிட்டான். லாபுஸ்லியேர் ஒரு சந்து வழியே சென்றபோது, ஏயலோம் என்ற முரட்டு ஒற்றன் பின்தொடர்ந்து பற்றிக்கொண்டு, "நீ யார்?" என்று மிரட்டினன். கோமாளி, குரலை மாற்றி "என் பெயர் சொல்லமுடியாது" என்ருன். ஒற்றப்புலி கோமாளியைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்று சோதனை செய்தது.

'இதென்ன காகிதக் கட்டு?'

'என் மனைவிக்குக் கடிதம்கூட எழுதக்கூடாதா? எங்கள் காதல் கடிதம்; நீ பார்க்கக் கூடாது'

'பார்க்கத்தான் வேண்டும்.'

இப்படி வாக்குவாதம் நடந்தபோது தடபுடலாக இராணுவ உடை யணிந்து ஒரு நண்பன் வந்தான்.

"ஆ! நண்பா, நீயா...... இங்கெப்படி வந்தாய்......" என்ருன்.

ஒற்றன் திகைத்தான்.

புது ஆள் 'ஒற்றரே! இவர் பெரிய அதிகாரி. மரியாதை செய்யும்' என்ருன்.

ஒற்றன் பயந்துபோய் வணங்கினன்; பிறகு "தாங்கள் இந்த நேரம் இப்படி யேன் வந்தீர்கள்?" என்று

கேட்டான். "ஒற்று! உன்னைப்போன்ற ஆட்கள் குடியரசுப் புரட்சியில் சேர்ந்தீர்களோ இல்லையோ? அதைச் சோதிக்கவே மாறுவேடம் போட்டுக்கொண்டு சுற்றினேன்" என்று கோமாளி நண்பனுடன் சென்றான். மரண சாசனங்களை உடனே தண்ணீரில் போட்டுப் பிசைந்து பிண்டம் பிடித்து ஆற்றில் எறிந்தான்.

இச் செய்தி யறிந்த ரோபஸ்பியர் என்னும் புரட்சித் தலைவன், "நண்பா லாபுஸ்ஸியேர்! உன் செயலால் பல வீரர் தலை பிழைத்தது; அரசாங்கம் களவுபோன பத்திரங்களையும் உன்னையும் வலைபோட்டுத் தேடுகிறது. நாளை ஒரு பிரளயம் நடக்கும்; அதில் நீந்தி நீ குடியரசுக் கொடியுடன் விளங்கவேண்டும்" என்றான்.

மறுநாளே பஸ்தில் கைதிகள் புரட்சி செய்தனர். சிறைக்காவலர் புரட்சிக்காரருடன் சேர்ந்தனர்; கதவுகள் நொறுங்கின; மதில்கள் இடிந்தன; தேச வீரர் சுதந்தரக் கொடி யேந்தி—'ஒழிக முடியரசு! வாழ்க குடியரசு" என்று கர்ஜித்தனர். லா பாயத் (La fyette) என்னும் வீரன் சுதந்தரப் படை சேர்த்து லூயி மன்னனையே பிடித்துக் கைதியாக்கினான். இச்சமயம் முடியரசுக்காரர், ஒருவனைப் பிடித்து லாபுஸ்ஸியேர் என்றெண்ணிச் சுட்டனர். பாரிஸ் முழுதும் "ஐயோ நம் அருமைக் கோமாளி போனானே" என்று வருந்தியது.

அன்று மேரோ அரங்கில் புரட்சி நாடகம் நடந்தது. ஒரு புதிய ஆள் புரட்சி வீரனாக நடித்தான்.........யாரிந்த நடிகன்! என்று பொது ஜனங்கள் வியந்து கேட்டனர்.

"நானே புரட்சிக் கோமாளி" என்று நின்றான் லாபுஸ்ஸியேர். எல்லாரும் வியந்தனர். பிரெஞ்சுப் புரட்சியில் இவன் அரிய பெரிய காரியங்களைச் செய்தான். புரட்சி வென்றதும் இவன் பட்டம் பதவி எதுவும் பெறவில்லை. "தேசம் குடியரசு பெற்றது; அதுவே என் பரிசு" என்றான்.

## 6. வீராயி சபதம்

இடி புயல்; அடமழை; வெளியே தலை நீட்ட முடியாது; புதூர் வீதியெல்லாம் இடுப்பு மட்டும் வெள்ளம். செல்வர் வருணனைச் சபிக்கின்றனர். பசியும் பிணியும் குளிரும் வாடையும் ஏழைகளை வாட்டுகின்றன; மண் குடிலும் ஈரத்தால் விழுந்து, நோயுற்ற குழந்தைகளைச் சுமந்து, வேலை செய்யத் திறமையுமின்றி அவர்கள் படும் பாட்டைக் கண்டு கல்லும் உருகும்.

ஏழைக் கிரங்காத கல்நெஞ்சக் கனவான்கள் சிலர் புதூரில் அகம்பாவ ராஜ்யம் நடத்தினர்; அவருள் முதல் தாம்பூலம் பெற்றவன் ஐயாவு; லெனின்கிராடில் செத்து மடிந்த முதலாளித்வம், இவனுடம்பில் புகுந்து கொண்டு அட்டகாசம் செய்தது. ஐயாவு ஸ்கூல் பைனலில் மூன்று தரம் குழிபறித்துப் பாதி ஆங்கிலம் கலந்து பேசும் அரைத் தமிழன். சட்டை தொப்பி மோகங்கொண்ட நாகரிகக் கொக்கு. தமிழை வெறுக்கும் தமிழன். பிறந்த நாட்டை மறந்தவன்; இரக்கந்துறந்தவன், தாம் தூம் என்று இடம்பக் கூத்தாடும் தடபுடல் பேர்வழி. ஐயாவு நூல் மில் வைத்துத் தொழிலாளர் உடம்பைக் கசக்கிப் பிழிந்து பணங்கொழுத்த பக்கா முதலாளி. மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் முதலிய தொழிலாளி — நண்பரை அவன் திட்டாத நாளில்லை. செல்வர் பெட்டகமே எளியர் உயிர் நிலை என்பது அவன் கொள்கை.

நான்கு நாட்களாக ஐயாவு நூல் யந்திரம் ஓட வில்லை; மழை வெள்ளத்தால் தொழிலாளர் வரவில்லை. ஐயாவு மூன்றும் மாடியிலிருந்து, சுடச்சுடக் காப்பி பலகாரம் தீட்டிவிட்டு ஏழைகளை வாயார வைகிறான்: "அடிமைக் கூலிகள்; வரட்டும் நாளை; கூலியில் மண்ணைப்

போடுகிறேன்; வேலை நிறுத்தமென்றால் சுட்டுப் போடு கிறேன்'' என்று சுருட்டுப் புகையுடன் ஆங்காரப் புகையும் கக்கிக் கொண்டு தாண்டுகால் போடுகிறான் முதலாளி.

இச் சமயம் "ஐயோ கொடுமை! உயிர் துடிக்கிறது! ஏழைக்கிரங்கி உதவுங்கள்!'' என்ற அபயக்குரலுடன் மில் தொழிலாளர் கூட்டம் வந்தது. அங்கப்பன் அவர்களை நடத்திக்கொண்டு வந்தான். அங்கப்பன் மனைவி வீராயி தன் குழந்தையைச் சுமந்துகொண்டு "அட கடவுளே எப்படிப் பிழைக்கப் போகிறோம்' என்று புலம்பிக் கொண்டு வந்தாள். ஏழைகள் "பசி பசி'' என்று பரிதாபமாக அலறினர் மூன்றாவது மாடியிலிருந்து ஐயாவு "பசியாயிருந்தால் செங்கொடியைப் பிய்த்துத் தின்னுங் களடா—வெட்கங்கெட்ட பயங்களா; நான்கு நாளாக வராமல் எனக்கு நஷ்டம் உண்டு பண்ணின துரோகிகளா, இனி ஒழுங்காக வேலை பார்ப்பதானால் வாருங்கள்- இன்றேல் தொலையுங்கள். வேறு ஆட்களை வைத்துக் கொள்ளுகிறேன்'' என்று உருமினான். அங்கப்பன், "ஐயா மழை வெள்ளத்தில் வாடி வதங்கி வயிற்றுக் கொடுமை தாங்காது வந்தோம்; கடுமையாகப் பேசவேண்டாம் வேலை செய்கிறோம்'' என்றான். "சரி வேலை செய்யுங்கள் மடையர்களா!'' என்று திட்டிக் கொண்டே ஐயாவு மில்லைத் திறந்து விட்டான். பசிக் கொடுமையால் பொறுமையுடன் தொழிலாளர் அன்று வேலை செய்தனர். என்றாலும் உரிமை யுணர்ச்சி மட்டும் உள்ளே தணலிட்டுக் கொண்டிருந்தது. அங்கப்பன் ஆண் தொழிலாளர் காதுடன் ஏதோ பேசினான்; வீராயி பெண் தொழிலாள ருடன் "ஒரு கை பார்ப்போமடி'' என்று பேசினாள்.

ஒரு வாரம் பொறுமையாக நடந்தது. சனிக்கிழமை கூலி நாள், ஐயாவு செல்வச் செருக்குடன் ஒவ்வொரு வரையும் கூப்பிட்டுக் கூலி தந்தான். கூலிகள் பணத்தை

எண்ணிப் பார்த்தனர். "ஐயா ஐந்து நாள் கூலியைப் பிடித்துக் கொண்டதேன் ? எங்கள் வயிற்றிலடித்து விட்டீர்களே. பிள்ளை குட்டிக்காரர் எப்படி பிழைப்பது?" என்று கூக்குரலிட்டனர்.

ஐயாவு : கப்சப்! பேசாதீர். நான்கு நாள் வராமல் என் பிழைப்பில் மண்ணைப் போட்ட நாய்களுக்குப் பேச்சு வேறு? வராதது நான்கு நாள் கூலி, ஒரு நாள் கூலி அபராதம். உங்கள் திமிருக்கு இது தண்டனை.

அங்கப்பன் : ஐயா, இது மகா அநியாயம். மழையினால் இருக்கிற மண் வீடும் இழந்து தெருவில் நிற்கிறோம்; மரத்தடியில் கஞ்சி காய்ச்சிக் குடிக்கிறோம்: குழந்தை குட்டிகள் நோயால் வாடுகின்றன; மாற்றுடையில்லாமல் எங்கள் பெண்கள் ஒரே கந்தையுடன் அவதிப்படுகிறார்கள் ஐயா ஏழைக்கிரங்கவேண்டும். கூலியைப் பிடித்துக் கொள்ளக்கூடாது.

ஐயாவு ; பயல்களா, உங்களைச் செம்மையாக வெளுப்பேன்—போங்கள் மரியாதையாக. மழையாம், மரத்து நிழலாம், கஞ்சியாம்; பஞ்சைத் தரித்திரங்கள் — என் பணம் இல்லாவிட்டால் உங்களுக்குச் சுடுகாடுதான் கதி.

வீராயி : இந்தக் குழந்தையின் பரிதாபம் பாரையா—பத்து நாளாகக் காய்ச்சல்.

ஐயாவு : அதை என்னிடம் அழுவானேன்? போ வைத்தியனிடம், வாங்கு மருந்து.

வீராயி : ஐயா, கேப்பை வாங்கப் பணமில்லை; மருந்துக்கு எங்கே போவேன். ஐயோ எங்கள் பிழைப்பில் மண் போடவேண்டாம் ஐயா, இது தருமமில்லை.

ஐயாவு : டாம், தருமம் கருமமெல்லாம் என்னிடமா பேசுகிறாய்—அங்கப்பா உன் பெண் சாதி சுத்த அதிகப் பிரசங்கி; வாய் நீளம். இப்படிப் பேசினால் நீக்கிவிடுவேன்.

112593



**அங்கப்பன் :** ஐயா நியாயத்தைக் கேளுங்கள். ஐந்து நாள் கூலியைத் தரவேண்டும்.

**ஐயாவு :** மாட்டேன். அதிகம் பேசினுல் உள்ளதும் போகும்; முதலாளியிடம் பயபக்தி விசுவாசமாக நடந்து கொள்ளவேண்டும். என் பணம் உங்கள் பிழைப்பு.

**அங்கப்பன் :** ஐயா, எங்கள் உழைப்பே உங்கள் பணம். தொழிலாளியின் இரத்தமே முதலாளியின் கொழுப்பு. இந்தத் தொழிற்சாலே நடப்பது எங்களால். நாங்கள் நான்கு நாள் வராதபோது இதை நடத்துவதுதானே முதலாளி? தொழிலாளியால் தான் உலகமே நடக்கிறது.

**ஐயாவு ;** டே கூலி, என்ன பொதுவுடமை பேசுகிருய்; பணக்காரன் முதலில்லாமல் போனுல் எந்தத் தொழில் நடக்குமடா? நான் முதல் போட்டு யந்திரம் நடத்து கிறேன்; அதனுல் தான் உங்கள் பிழைப்பு நடக்கிறது.

**அங்கப்பன் :** நாங்கள் வேலே செய்யாவிட்டால் உங்கள் யந்திரம் நடக்குமா ? தொழிலாளி கை கடுக்க உழைத்த பலனேக் கொண்டுதானே முதலாளி பெட்டியை நிரப்புகிருன்?

**ஐயாவு :** முதலாளி தரும் கூலியைக் கொண்டுதானே தொழிலாளி வயிற்றை நிரப்புகிருன். அங்கப்பா, உனது நடத்தை சரியா யில்லே. எசமானுக்கு எதிர் பேசுகிருய். நாளே முதல் நீ வேலேக்கு வரத் தேவையில்லே. போ. பிச்சை யெடு!

**வீராயி :** ஐயா, ஐயா.

**ஐயாவு :** டாம், பிச்சைக்காரி; பேசாதே போ.

**வீராயி :** ஐயா முதலாளியே! மழை குளிரில் வாடும் ஏழைத் தொழிலாளரைப் பிச்சைக்காரரென்று ஏசினுய்? தொழிலாளி, பிச்சைக்காரனில்லே; அவன் உழைப்பாளி;

O — 3MSB

முதலாளியாகிய நீதான் பிச்சைக்காரன்; தொழிலாளி யிடம் உன்னைப் பிச்சை கேட்க வைக்காவிட்டால் என் பெயர் வீராயி யில்லை. அங்கப்பா இந்தப் பாவியைக் கெஞ்சாதே; வா. கையுண்டு—மெய்யுண்டு பிழைப்போம்.

**ஐயாவு:** போடி வாயாடி. சேவகா இவர்களைப் பட்டணம் கெல்தா கொடுத்துத் தள்ளுடா.

**அங்கப்பன்:** ஐயா, என்ன திமிராய்ப் பேசுறுய் உன் பணக் கொழுப்பைப் பார்க்கிறேம். தோழர்களே! இன்று முதல் யாரும் இந்த நன்றி கெட்ட மனிதனிடம் வேலை செய்யக்கூடாது. நாம் வேறு வேலை செய்து மானமாகப் பிழைப்போம். ஆனால் நமக்குரிய சம்பளத்தை வாங்காமல் விடோம். ஐயா ஐந்து நாளைச் சம்பளத்தைத் தாரும்.

எல்லாத் தொழிலாளரும் அங்கப்பனை ஆமோதித் தனர்; கூலி கேட்டனர். ஐயாவு பிடிவாதமாக மறுத்தான். வேலையாட்கள் அப்படியே மில்லில் உட்கார்ந்து 1917 முதல் 1945 வரையில் நடந்த தொழிலாளர் இயக் கத்தைப்பற்றி யெல்லாம் பேசினர்: "ஒழிக முதலாளிக் கொடுங்கோல்—வாழ்க பொதுவுடமை. உலகம் உலகோர்க்கே; உலகோர் உழைப்பாளிகளே" என்று கூச்சலிட்டனர்.

ஐயாவு பயமும் திகிலும் பதற்றமும் கொண்டு துப்பாக்கியைக் காட்டி மிரட்டினுன். அங்கப்பன் அவன் கையை மறித்துத் துப்பாக்கியைப் பறித்து இது நமது வெற்றிச் சின்னம் என்று தோழரிடம் கொடுத்து "வாழ்க பொதுவுடைமை" என்று ஆரவாரம் செய்தான். ஐயாவு போலிஸ் ஸ்டேஷனுக்கு ஓடினுன்; "ஐயோ தொழிலாளர் புரட்சி! சுடுங்கள் சுடுங்கள்" என்று கூச்சலிட்டான். போலிஸ் புலிகளைக் கூட்டிக்கொண்டு "கபர்தார்சிங்" ஒரு லாரியில் வந்திறங்கினுர். அங்கப்பனும் வீராயியும் அவரிடம் தமது நியாயத்தைச் சொன்னுர்கள்.

ஐயாவு, "இவர்கள் என் மில்லில் புகுந்து கலகம் செய்தார்கள்" என்று பொய்ப் பிராது கொடுத்தான். அத்துடன் இரகசியமாக வழக்கப்படி — — — தந்து விட்டான். கபர்தார்சிங் "போகிறீர்களா; சுடவா" என்று போலீஸ் பாஷையில் உருமினுன். "தா கூலியை" என்று தொழிலாளர் கர்ஜித்தனர். ஐயாவு "மிஸ்டர் கபர்தார், போடுங்கள் இரண்டு வேட்டு. இந்தப் பயல்கள் அடங்க மாட்டார்கள்" என்று கூச்சலிட்டான். கபர்தார் சட்டைப்பை கனத்துவிட்டது; "ஷூட்" என்ருன்; வானை நோக்கி வேட்டுகள் பறந்தன; பிறகு தொழிலாளரைக் குறி வைத்தனர் வீரப் புலிகள். இச்சமயம் வீர்ாயி மகா காளிபோல் வந்தாள். ஊழியிடிபோல் கர்ஜித்தாள்: "ஐயா என்னையும் இந்தப் பச்சைக் குழந்தையையும் சுட்டு விடுங்கள் ஐயா! வறுமைச் சுமையை உதறிச் செல்லுகிருேம். ஐயா இந்தப் பாவிக்கு இரவு பகலாய் நாங்கள் பாடுபட்டோம். எங்களால் இவன் யந்திரம் நடக்கிறது; மழை நாளில் துன்பப்பட்டு, நொந்து வந்தோம். புதூரில் யாரும் வெளிவர முடியாது. அடமழை பிடித்துக் கொண்டது; எங்கள் மண்குடில் உதிர்ந்து மரத்தடியில் வசிக்கிருேம். வயிற்றுக் கொடுமையால் இவன் வசவைப் பொறுத்து வேலை செய்தோம். இரக்கமில்லாப் பாவி எங்களுக்குரிய சம்பளத்தைப் பிடித்துக்கொண்டதுமன்றி எங்களைச் சுட்டுப் பொசுக்க உங்களைக் கொண்டுவந்தான். நாங்கள் பரம ஏழைகள், உங்களுக்கு இரக்கமில்லா விட்டால் முதலில் என்னைச் சுடுங்கள் ஐயா!"

வீராயி பேச்சு கபர்தாரின் கல் நெஞ்சையும் இளக்கியது; "சரிசரி போதும் கதை; போங்கள் வெளியே" என்று எல்லாரையும் தள்ளி மில் கதவைப் பூட்டி விட்டான். "எடுங்கள் பிச்சை ஹ ஹ!" என்று முதலாளி சிரித்தான்.

இச் சம்பவம் அங்கப்பன்—வீராயி நெஞ்சைக் கலக்கி விட்டது. "என்ன, உலகில் ஏழைகள் இரத்தப் பாடு பட்டு ஒருவாய்க் கஞ்சி காணவேண்டியிருக்கிறது. பசி என்பதே அறியாத பணக்காரன் தொழிலாளரை, நாய் கழுதைபோல் நடத்துவதா? இனி நம் உழைப்பைக் கொண்டு இந்தப் பணக்காரத் தொந்திகளை நிரப்பு வானேன்? நம் உழைப்பின் பயனை நாமே அனுபவிப்போமே மில்லில் உழைப்பதை இல்லில் உழைத்துப் பிழைப்போம்" என்று எழுந்தனர். புதூரில் இரண்டாயிரம் தொழிலாளர் இருந்தனர்; அத்தனை பேரையும் ஒரு தொழிலாளர் சங்க மாகக் கூட்டினர். "அட்டாணியிலிருக்கும் இராட் டினத்தை இறக்கிச் சுழற்றுவோம்; காய்கறித் தோட்டம் போடுவோம்; எரு முட்டை தட்டுவோம்; அரிசி தீட்டு வோம்; இடியாப்பம் சுடுவோம்; கூடை பின்னுவோம்; எத்தனையோ தொழிலுண்டு, செய்வோம். தொழிலாளர் பிச்சைப் படைகளில்லை என்பதை அந்த முதலாளி அறியட்டும்" என்று கிளம்பினான் அங்கப்பன்.

நல்ல வேளையாக இச்சமயம் கஸ்தூரிபாய் நிதிக்குத் தமிழ் நாட்டில் தலைமை வகித்த ஜயகோபாலன் புதூருக்கு வந்தான்; ஒரு பெரிய கூட்டம் நடந்தது. ஜயகோபாலன் உருக்கமாகப் பேசியதன் சுருக்கமாவது:—

தோழர்களே !

*மஹாத்மா காந்திக்குத் தரும் பணமெல்லாம் ஏழை களின் க்ஷேமநிதி; தமிழ்நாடு கஸ்தூரிபாய் நிதிக்குக் கோடி ரூபாய் தந்தது; அத்தனையும் தமிழ் நாட்டுக் கிராம ஏழை களுக்கே செலவிடும்படி மகான் கட்டளையிட்டார். நமது நாட்டை வதைக்கும் வறுமை, மடமை நோய்கள் தீரவும், நம்மவர் நோயற்று வாழவும், சோம்பல் ஒழியவும், தொழில் பெருகவும் நாங்கள் கிராமந்தோறும் பொதுநலம் புரிய வேண்டுகிறோம். எங்கே ஏழைகள் பசியால்*

*வருந்துகிறார்களோ, எங்கே உழைப்பாளிகள் வேலை யில்லாமல் திண்டாடுகிறார்களோ, எங்கே திக்கற்ற அனாதைகள் நோயால் துன்பப்படுகிறார்களோ, எங்கே கல்வி மணம் பரவவில்லையோ அங்கெல்லாம் நாங்கள் சென்று தொண்டு செய்வோம். இந்தக் கிராமத்தில் நூற்கத் தெரிந்த தொழிலாளர் பலர் இருப்பதை அறிந் தோம். அவர்களுக்கெல்லாம் இராட்டையும் பஞ்சும் தருவோம். நெசவாளிகளுக்குத் தறி தருவோம்; விவசாயி களுக்கு மாடும் கலப்பையும் விதை நெல்லும் தருவோம். இன்னும் நமது கிராம வாசிகள் செய்ய முன்வரும் தொழில்களையெல்லாம் வளர்ப்போம். மஹாத்மா புண்ணியத்தால் எல்லாரும் பாடுபட்டுப் பிழைக்கலாம். எல்லாரும் எழுதப் படிக்கக் கல்வி கற்கலாம். மஹாத்மா காந்தி வாழ்க!*

என்றதும், புதூர் தொழிலாளர் இன்ப முழக்கம் செய்து ஜயகோபாலனிடம் தங்கள் நிலையைச் சொன்னார்கள். அங்கப்பனும் வீராயியும் தங்கள் சபதத்தைச் சொன்னார்கள். ஜயகோபாலன் 2000 தொழிலாளரும் உழைத்துப் பிழைக்கும்படி பல தொழில்களை வகுத்து, அவை நடக்க எல்லா உதவியும் செய்தான்.

இரண்டே ஆண்டுகளில் தொழிலாளர் கவலை நீங்கி விட்டது. புதூரெங்கும் ஏற்றப்பாட்டு, பொலிப்பாட்டு, இராட்டைப்பாட்டு, பள்ளுப்பாட்டு, மங்களப்பாட்டு முழங்கின.

இல்லைப் பாட்டு ஒரே இடத்தில் ஓலமிட்டது—முதலாளி வீட்டில் — —முதலாளி ஐயாவு மில், இரும்புத் துண்டங்களாக அப்படியே துருவேறிக் கிடந்தது. அவன் இருக்கும் தெருப்பக்கம் தொழிலாளிகள் செல்வதில்லை.

ஒட்டன், வண்ணான், பரியாரிகூட அவனை விலக்கி விட்டனர்; தலைவழித்துக்கொள்ள அவன் பட்டணம் செலூனுக்குப் போக நேர்ந்தது; துணி வெளுக்க அசலூருக்கு மூட்டை கட்டி அனுப்ப நேர்ந்தது. வேலை ஓடாது வரும்படியில்லை; அப்பா வைத்த சொத்தெல்லாம் அள்ளியிறைத்து விட்டான். ஐயாவு ஓராண்டு விறைப்பாயிருந்தான். பிறகு செருக்கு இறங்கிவிட்டது. பையிளைத்ததும் கையிளைத்தது; கையிளைத்ததும் மனமிளைத்தது. சேவகர் வைத்து அதிகாரம் பண்ணின காலம் மலையேறிவிட்டது. அவனது சம்சாரமும் வீடு மெழுகிப் பற்றுத்தேய்த்து எரு முட்டை தட்ட நேர்ந்தது. இப்போது அவள் இவனை விரட்டுகிறாள்; "சும்மா வீட்டிலேயே உட்காருவாளோ? ஆண் பிள்ளை, ஓடியாடிக் காரியம் பாரும்—போம் கடைக்கு; சந்தைச் சாமான் வாங்கி வாரும்" என்று அந்தப்புற ஆணை பறக்கிறது. மோட்டார் சவாரி செய்த ஐயாவு காலால் நடந்து சந்தைக்குச் செல்லுகிறான்; கூலி தந்தாலும் யாரும் அவன் சாமான்களை அந்த ஊரில் சுமக்க மாட்டார்கள்; தானே சாமான் மூட்டையைச் சுமந்து வருகிறான்.

புதன்கிழமைச் சந்தை; புதூர் தொழிலாளர் விளைத்ததும் செய்ததும் வரிசை வரிசையாகச் சந்தைக்கு வந்து விற்கின்றன; வீராயி காய்கறிக்கடை விரித்து ஒரு பலகையில் விலை எழுதி வைத்துக் கம்பீரமாக வீற்றிருக்கிறாள். மறு பேச்சில்லாமல் எல்லாரும் அவள் கடையில் வேண்டியதை வாங்கிச் செல்லுகிறார்கள். அப்போது ஒருவர் தடியூன்றித் தள்ளாடிக்கொண்டு வந்து, "ஏ பிள்ளே, கத்தரிக்காய் என்ன விலை; வாழைக்காய் என்ன விலை; கீரைக்கட்டு எப்படி" என்று நச்சரித்தார். வீராயி விலைப் பலகையைக் காட்டி "அங்கே பாருங்களேன்!" என்றாள். வந்தவர் "பிள்ளே கத்தரிக்காய் இரண்டு தூக்கு, வெண்டை ஒரு தூக்கு, ஒரு கட்டு கீரை போடு; வீட்டில்

விசேஷம்" என்றார். வீராயி அவர் கேட்டதை நிறுத்துத் தந்து "கொடையா நான்கு பணம்" என்றாள். ஆள் "அம்மா, என்னிடம் இரண்டு பணமே இருக்கிறது. இரண்டு பணம் நாளை கொண்டுவந்து தருவேன்" என்றார்.

**வீராயி**: பரிதாபமாகக் கேட்கிறீர்களே; நீங்கள் யாரையா?

**ஐயாவு**: வீராயி என்னைத் தெரியாதா; நானே ஐயாவு.

**வீராயி**: ஐயா, முதலாளி ஐயாவுவா? அடையாளமே தெரியவில்லையே ..........சட்டை தொப்பி போட்டு துரை போலிருந்தீரே...ஏன் இப்படிப் போனீர்-மில் நடக்கிறதா?

**ஐயாவு**: அம்மா, என் பரிதாபத்தை நினைத்தால் கண்ணீர் வருகிறது. நான் முதலாளியாயிருந்த காலம் மலையேறிவிட்டது; இனித் தொழிலாளியா யிருந்தாலே பிழைக்கலாம் என்றாய்விட்டது. தொழிலாளரைக் கொடுமை செய்தேன்; அதன் பயனை அனுபவிக்கிறேன். தொழிலாளர் என்னைக் கைவிட்டனர்; என் முதலும் கரைந்தது, மனமும் கரைந்தது, உடலும் கரைந்தது. ஏழைகளைக் கொடுமை செய்தேன்; நானே ஏழையாய் விட்டேன்.

**வீராயி**: ஐயா, அன்று எங்களைப் பிச்சைப் படைகள் என்றது நினைவிருக்கிறதா?

**ஐயாவு**: அம்மா வீராயி, நானே இன்று பிச்சைக்காரன்; தொழில் செய்து மானமாய்ப் பிழைக்கும் நீங்களே தன்யர்கள், சுகிகள். இன்று நான் பிச்சை கேட்கிறேன்— இந்தக் காய்கறிகளைத் தா, நாளை எப்படியாவது பணம் தருகிறேன்.

வீராயி திரும்பிப் பார்த்து, "கேட்டீங்களா" என்றாள். அங்கப்பன் ஒரு சாக்கு மூட்டைக்குப் பின்னி

ருந்து கம்பீரமாக வந்து நின்றான். "ஆ! அங்கப்பனா" என்று ஐயாவு திகைத்தான். "ஆம்; முதலாளி ஐயா, இந்தாரும் பிச்சை" என்று காய்கறிகளைத் தந்தான்.

ஐயாவுக்குச் சவுக்கடி தந்தது போலிருந்தது. "அங்கப்பா உணர்ந்தேன்; தொழிலாளி வைத்தே முதலாளி; தொழிலாளிதான் முதலாளிக்கு முதலாளி! தொழிலாளி யில்லாவிட்டால் பணமும் பொறியும் அழியும். இன்று முதல் நானும் தொழிலாளியே" என்றான்.

வீராயி: என் சபதம் நிறைவேறியது.

அங்கப்பன்: தொழிலாளர் மனம் குளிர்ந்தது.

## 7. சாத்தான் பூச்சாண்டி

இந்தச் சித்திரக்காரர் மேலெல்லாம் சாத்தானுக்குப் படு கோபம்! அதிலும் பிளாரன்ஸில் (Florence) பெயர் பெற்ற சித்திரக்காரர்மேல் பொல்லாக் கோபம். ஏனென்று கேட்பீர்களா? உங்களை, குரங்கு மூஞ்சியும், கழுதை மூக்கும், ஆந்தைக் கண்ணும் ஒட்டகக் கழுத்தும் வைத்து ஆபாசமாகப் படம் எழுதினால் கோபம் வராதா? அதுவும் பலர் கண்டு தன்னைப் பாவி, சண்டாளன் என்று பழிக்கும் படியாகப் படங்களைப் போட்டால் சாத்தானுக்குக் கண் சிவக்காமல் இருக்குமா? அவனது அருமைத் தோழர்களுக்கு மனம் கொதிக்காமல் இருக்குமா?

பிளாரன்ஸில் ஸ்பிநெல்லோ (Spinello) என்ற புகழ் பெற்ற சித்திரக்காரன் மைக்கேல் முனிவர் வரலாற்றை மாதா கோவிலில் வரைந்தான். அதில் தேவதூதர், முனிவர் படங்களைச் சொக்கழகுடன் எழுதினான்; சாத்தான் படத்தைக் கண்டவர்கள் "இதேதடா பிரம்மஹத்தி!" என்று கண்ணை மூடிக்கொள்ளும்படி மகா கோரமாகக் காட்டினான்.

சித்திரக்காரனைப் புகழாதவர் இல்லை; சாத்தானை "நீ நாசமாய் போக!" என்று சாபம் வைக்காதவர் இல்லை.

ஸ்பிநெல்லோ, தனது திறமை புகழ் பெற்றதனால் மிக்க மகிழ்ந்த இரவில் "பரமபிதாவே, உனது தேவதூதர்களின் படங்களை அருமையாய் எழுதியிருக்கிறேன்; என்னையும், என்னைப் போன்ற சித்திரக்காரர்களையும் கருவைத்துத் தொல்லை செய்யும் சாத்தானைக் கிட்ட வராது விரட்டியடிக்க வேண்டியது உமது பொறுப்பு!" என்று தொழுதுவிட்டு அமைதியாக ஒரு நாள் படுத்தான்.

நள்ளிரவு; சித்திரக்காரன் கனவில் மலை போன்ற ஒரு வடிவம் தோன்றியது. "நீ யார்?" என்றான் சித்திரக்காரன்.

"நான்தான் கடவுளுடன் சுதந்திரப் போர் புரிந்து, அடிமைத் தளையை உதறியெறிந்த சாத்தான்!"

"ஐயோ! நீ எங்கு வந்தாய்?"

சாத்தான் : நானா? உன்னை ஒரு கேள்வி கேட்க வந்தேன். என்னை முன் பின் பார்த்திருக்கிறாயா?

ஸ்பிநெல்லோ : இல்லையே!

சாத்தான் : பின் ஏன் என்னை அவ்வளவு ஆபாசமாகப் படம் வரைந்தாய்? ஹூம்!

ஸ்பிநெல்லோ : உன்னை, எல்லாப் பாவங்களுக்கும் இருப்பிடம், மகா கொடியன், எல்லாத் தொல்லைகளுக்கும் காரணன் என்று சுவிசேஷம் முறையிடுகிறது. அதனால் உனது பாவ வடிவை எழுதினேன்!

சாத்தான் : ஸ்பிநெல்லோ; நீ வேதம் படித்தவன்; என்னை அறிவாய்; நான் பரலோகத்தில் முன் இருந்தேன்; யாருக்கும் அடிமையாக இருக்க எனக்கு விருப்பமில்லை. ஆதலால் எல்லாரையும் தனக்கு அடிமையாக்கும் உங்கள் பரமபிதாவுடன் போர் தொடுத்தேன். அதன் பலன் என்ன தெரியுமா? அவன் (ஆண்டவன்) வானுலகிற்கு அரசன். நான் இந்த மண்ணுலகிற்கு அரசன். சுற்றிலும் பார்; எனது ராஜ்யம் தான் எங்கும் நடக்கிறது. பார் என்னை நிமிர்ந்து! என் அழகிற்கு என்ன குறைவு! ஆடம்பரமான வாழ்விற்கு நானே அதிகாரி. என்னையும் என் சகாக்களையும் நாய், நரி, பன்றி, குரங்கு, வௌவால், ஓணான்கள் மாதிரி ஏன் எழுதுகிறார்கள் இச் சித்திரப் பேதைகள்? நாங்களும் முன்பு சுவர்க்கத்தில் அடிமைகளாயிருந்து இன்று பூலோகத்தில் ராஜாதி ராஜர்களாயிருக்கிறோம் என்பதை இவர்கள் அறியார்கள் போலும்!

ஸ்பிநெல்லோ: உனது தற்புகழ் போதும்! சாத்தானே; எமது உண்மையரசருக்கு விரோதமாகப் புரட்சி செய்தாய்; உலகில் உள்ள பஞ்சமா பாதகங்களுக்கும் காரணமாயிருக்கிறாய். நீயே பாப வடிவாக உலகில் உலவுகிறாய் என்று தேவ குமாரன் "போ பின்னால், சாத்தானே!" என்று விரட்டியடித்ததும், முன்னால் வந்து இழவு கூட்டுகிறாய்; தொல்லை செய்கிறாய்! மகா பாவி!

சாத்தான் புன்னகை புரிந்தான். பின்னர் சரமாரியாகக் கேள்விகள் கேட்கத் தொடங்கினான்.

சாத்தான்: என்னிடம் என்ன பாவத்தைக் கண்டாய்?

ஸ்பிநெல்லோ: நீ மண்டைக்கருவம் பிடித்தவன்!

சாத்தான்: உங்கள் அரை குறை வித்வான்களைவிடவா?

ஸ்பிநெல்லோ: நீ போட்டி பொறாமைக்காரன்!

சாத்தான்: உங்கள் அரசியல் தலைவர்களைவிடவா நான் போட்டி, பொறாமையில் காலத்தை வீணாக்குகிறேன்?

ஸ்பிநெல்லோ: நீ நாய்மாதிரி விழும் கோபக்காரன்!

சாத்தான்: ஏழை எளியவர்கள் யாசகம் கேட்டால் சள்ளென்று விழுந்து விரட்டியடிக்கிறார்களே உங்கள் கருமிப் பணக்காரர்கள்; அவர்களைவிடவா நான் கோபக்காரன்?

ஸ்பிநெல்லோ: நீ காமப்பேய்!

சாத்தான்: ஐயோ, பாருமே மேற்கே திரும்பி — உமது ஆண் பெண் லீலைகளை!

ஸ்பிநெல்லோ: நீ பேராசைக்காரன்; மகா கருமி!

சாத்தான்: ஐயா, உங்கள் அரசரைவிடவா நான் பேராசைக்காரன்! வரி வம்புகளால் ஜனங்களிடம்

வேண்டியமட்டும் சுரண்டிக்கொள்ளுகிறுர்கள்! எவ்வளவு கூக்குரல் போட்டாலும், காலில் முட்டிக்கொண்டாலும், பொது ஜனங்கள் சுதந்திரமாக வாழும் நன்மைகளைச் செய் கிறுர்களா? இல்லையே! அவர்களைவிடவா நான் கருமி?

ஸ்பிநெல்லோ: சாத்தானே, நீ பெருந்தீனிக்காரன்!

சாத்தான்: யார் சொன்னது? காபி ஹோட்டல்களில் போய்ப் பாரும் உமது மனிதர் தீனியை! சாண் வயிற்றை நிரப்ப எத்தனை பண்டங்கள்! எத்தனை தடபுடல்! உங்கள் ஆயுளில் பாதி சயனம், பாதி அசனம்; பாதி ஆயுளைப் படுத்துத் தீர்க்கிறீர்கள்; பாதி ஆயுளை மென்று தீர்க்கிறீர்கள்.

ஸ்பிநெல்லோ: கெட்டிக்காரச் சாத்தானே, நீ இடம்பம் செய்கிறுய்! எம் தேவகுமாரன் பரம ஏழைபோல வாழ்ந் தான். இடம்பம் பாவமில்லையா?

சாத்தான்: அகோ வாரும் பிள்ளாய்! உமது அரசர்கள், செல்வர்களின் இடம்பக் கூத்துகளைப் பார்க்க! ஏழை எளி யவர் நெற்றி வியர்வை நிலத்தில் படும்படி உழைத்து அரைக்கஞ்சிக்கு சம்பாதிக்கிறுர்கள். அவர்களைக் கசக்கிப் பிழிந்து பணம் சேர்க்கும் உமது செல்வர்கள் என்ன செய் கிறுர்கள்? பாருமே சுற்றி! ஆயிரக்கணக்கான ஏழைகள் வாழக் கூடிய இடத்தை வளைத்து ஒருவர் மாடமாளிகை கூடகோபுரங்கள் கட்டிக்கொண்டு, சரச சல்லாப உல்லாசக் கூத்துக்கள் செய்வதைப் பாரும்! ஆயிரம் ஏழைகள் வயிராற உண்ணக்கூடிய பொருளை பாதாம் ஹல்வாவாகவும் தங்க ரேக்குமாகச் செய்து, விருந்துண்டு, குடித்துக் களித்து, நோய்வாய்ப்பட்டு, மருந்துப் புட்டி களைக் காலியாக்கும், அந்த விநோதக் கூத்துக்களைப் பாரும்!

ஸ்பிநெல்லோவுக்குக் கேள்விகள் கேட்டு அலுத்து விட்டது. சட்டென்று பதில் வருவதைக் கண்டான். அதையும் மறுக்கமுடியாமற் போகவும் அவனுக்கு எரிச்சல் வந்தது. ஆகவே பின்வருமாறு சொன்னான்:

ஸ்பிநெல்லோ: சாத்தானே! உன்னோடு வாய்ச் சண்டை போட என்னால் முடியாது. நீ வீணன்; வம்பன்; சோம்பேறி!

சாத்தான்: வீணன், சோம்பேறி யார்? நானா? ரொம்பக் கண்டீரோ? ஒரு நொடி நான் சும்மா இருப்பதைப் பார்த்திருக்கிறீரா? எனது சுயேச்சாதிகாரச் சக்கரம் ஒரு நொடி சுழலாவிட்டால் உலகம் என்னவாகும்! எனது சுறுசுறுப்பினாலேதான் அத்தனை சகோதரர்களை சொர்க்கத்திற்கு அடிமை யாகாமல் நரகத்தில் சுயேச்சையாக வாழச் செய்தேன்! எனது சுறுசுறுப்பினால்தான் அரசர்களின் குண்டு பிரங்கிகளுக்கு ஓயாது வேலை யேற்படுகிறது? எனது சுறுசுறுப்பினால்தானே இருக்கிற நாடு போதாதென்று பிற நாடுகளைப் படையெடுத்து, பிறரை அடக்கியாள மன்னர் போர் புரிகின்றனர், பஞ்ச தந்திரமும் செய்கின்றனர்? எனது சுறுசுறுப்பினால்தானே உலகில் பணமும், அதிகாரமும், ஆணவச்செருக்கும், சுகபோக மோகங்களும் சிரஞ்சீவியாக வாழுகின்றன! உலகையெல்லாம் சுறுசுறுப்பாக வைத்திருப்பவன் நான் என்றால், நான் எவ்வளவு சுறுசுறுப்பானவன் என்பதை அறியும்! அறிந்தீரா? நான் ஒரு நொடி கண்ணயர்ந்தால், சுவர்க்கம் கீழே இயங்கி உலகம் நசுங்கிப் போகாதா? அறிந்தீரா?

ஸ்பிநெல்லோ; அறிந்தேன்! அறிந்தேன்!

சாத்தான்: நன்று யறிந்தாயா? பின்னை யேன் என்னை அவ்வளவு ஆபாசமாகப் படமெழுதினாய்! உன் காதைப் பிடித்துத் திருகுகிறேன்! உம்! உம்! உம்!

ஸ்பிநெல்லோ: ஐயோ வேண்டாம்! வேண்டாம்! வலி, வலி! சாத்தான் சுவாமி! மன்னித்துவிடுங்கள்!

**சாத்தான் :** இனி என்னை அப்படிப் படமெழுத மாட்டாயே! உன் விரலை ஒடிக்கிறேன், பயலே! உம்!

**ஸ்பிநெல்லோ :** ஐயோ, ஐயையோ! சாத்தான் மகராஜா! தெரியாமல் எழுதிவிட்டேன்! மாப்பு! மாப்பு!

**சாத்தான் :** எனது கண்பார்வை சற்று பட்ட அரசர்கள் ஜனங்களை எவ்வளவு கண்டிப்பாக நடத்தி, அடக்கி யாண்டு அடிமைப்படுத்துகிறார்கள்! அந்த அரசர்களுக் கெல்லாம் அரசனை என்னையா நீ அப்படி தேவாங்கு மாதிரி எழுதினாய்! உன் முழியைப் பெயர்க்கவா! உம்-உம்!

**ஸ்பிநெல்லோ :** ஐயோ! சாத்தான் பகவானே! விட்டு விடுங்கள்! இனி உமது ஜோலிக்கு வரவில்லை.

**சாத்தான் :** போ பிழைத்து! உஷார்! இனி என்னைக் குண்டு, பீரங்கி, போர், படை அதிகாரங்களுடன் உலகை அடக்கியாளும் மன்னாதி மன்னனாகச் சித்தரிக்கவேண்டும்! தெரியுமா? உலகெங்கிலும் நானே இருக்கிறேன்! கள்ளின் களிப்பில் நான்! ஆளை மயக்கும் விழியில் நான்! வேசையர் பவழ வாயில் குலுங்கும் முத்து நகை யாருடையது? என்னுடையது! உயிர்களை நடுக்கும் வாளின் கூர்மையில் நானே இருக்கிறேன்!.........அப்படியே பார்த்துக் கொள் எனது மகிமையை! நேரமாயிற்று; வேறு வேலையுள்ளது! போகிறேன், இனி...தெரியுமா.........? உன் மூக்கைப் பிடித்து ஒரு திருகு திருகி விட்டுப் போகிறேன்! நினைப் பிருக்கட்டும்!

*சாத்தான் பலமாக மூக்கைப் பிடித்துத் திருகி மறைந்தான்!*

"அஞ்ஞோ! ஞோ! ஞோ! ஞோ, ஞோ, ஞோ!" என்று அலறிப் புடைத்துக் சொண்டெழுந்தான் ஸ்பிநெல்லோ.

"என்ன! என்ன!" என்று பக்கத்தில் படுத்திருந்த மனைவி தூக்கி வாரிப் போட்டெழுந்து வினவினாள்! அவள் முன்பின் மலையாளம் கேட்டதில்லை! சாத்தான் இன்னும் மூக்கைப் பிடித்துத் திருகுவதாகவே ஸ்பிநெல்லோவின் கனவு:— "அஞ்ஞோ! மூஞ்ஞு, போஞ்ஞே! ஞெ...ஞெ" என்று உளறித் தவிக்கிறான் அவன்!

சட்டென்று விளக்கேற்றினாள் மனைவி. ஆள் உதற லெடுத்து நடுங்குகிறான்! 'மூக்கு சரியாகத்தானே இருக்கிறது! ஏன் இப்படி? பைத்தியம் சைத்தியம் பிடித்து விட்டதா? மகா தைர்யசாலி, புலியை அடிப்பேன், சிங்கத்தை உதைப்பேன் என்று மார்தட்டுவீர்களே; ஏனிப்படி உடம்பு நடுங்குகிறது? கூழ் மோர் காய்ச்சித் தரட்டுமா?" என்று வழக்கப்படி சொற்பொழிவை அபாரமாக ஆரம்பித்தாள்.

ஸ்பிநெல்லோவுக்கு நினைப்பு வந்தது! தான் கண்டது கனவென்று உணர்ந்தான். மனைவி பக்கத்திலிருக்கும் போது இப்படி அசட்டுப் பயத்தைக் காட்டினோமே என்ற அவமானம் ஒரு பக்கம். இருப்பினும் யானைக்குச் சிங்கத்தைக் கனவில் கண்டாலும் பயமல்லவா? சாத்தான் கனவில் வந்ததும் சொன்னதும் மனைவியிடம் விரிவாக உரைத்தான். கனவானாலும் சாத்தான் காதையும் மூக்கையும் பிடித்துத் திருகி, பயமுறுத்தியது ஸ்பிநெல்லோ நெஞ்சில் எப்போதும் படபடத்துக் கொண்டேயிருந்தது. அன்று முதல் சாத்தானுக்குக் கோபம் வரும்படியாகப் படம் போடுவதில்லை.

அவன் பாட்டைக் கேட்ட மற்ற சித்திரக்காரர்களுக்கும் சாத்தானிடம் பயந்தான்! அன்று முதல் சாத்தான் பூச்சாண்டி மாந்தரைப் பலமாகப் பிடித்தது. இத்தனை பேர் தனக்குப் பயந்து நடப்பதைப் பார்த்து சாத்தான், கோபுரம் போலத் தலையை உயர்த்தி நடந்தான்! மாந்தர் அச்சமே சாத்தான் அரியணையல்லவா?

## 8. வேண்டாம் பரலோகம்!

**பு**ஃஃபல் மாகோ—(வாய் நிறையப் பொறி மாவை அடைத்துக்கொண்டு இந்தப் பெயரை உச்சரியுங்கள்.) ஒரு தமாஷ் பேர்வழி. பள்ளியில் படிக்கும்போது, வகுப்பில் பையன்களைச் சிரிக்க வைப்பதே அவன் வேலை. உபாத்தியாயர் அந்தப் பக்கம் பார்த்தால், இந்தப் பக்கம் அவரைப்போலப் படம் போட்டுக் காட்டுவான்; முகத்தை வக்கரிப்பான்; ஏதாயினும் ஒரு சேட்டை செய்வான்; பையன்கள் "கொல்"லென்று சிரிப்பர், குதிப்பர். புஃஃபல்மாகோவிற்குப் படிப்பு மட்டும் மூளையில் ஏற வில்லை. படுத்தால் பனிக் கரடிதான்! வஞ்சகமில்லாமல் சாப்பிடுவான்; ஊர் சுற்றுவான்; தன்னுடன் சேர்ந்த ஆட்களைத் தமாஷாகப் பேசிச் சிரிக்கவைப்பான். ஆள் என்றால் ஒரு வேலை வேண்டும். சித்திர வேலைதான் அவனுக்குப் பிடித்தது. பிளாரென்ஸில் புகழ்பெற்ற சித்திரப் புலவனான ஆந்துரு தாஃபி (Andrew Tafi)யிடம் வேலைக்கு அமர்ந்து கலை பழகினன்.

ஆந்துரு தாஃபி கலையில் முதிர்ந்த புலவன்; வயதிலும் முதிர்ந்தவன். வெனிஸ், ஆதன்ஸ், முதலிய நகரங்களில் இருந்து கலை பயின்று தேர்ந்தவன். கிழவனானாலும் சளைக்காத உழைப்பாளி; தனது வேலையில் யாரையும் மிஞ்சவிட மாட்டான். தனது கையாட்களைக்கூட யாருடனும் தாராளமாகப் பேசவிடாமல் வீட்டிற்குள் அடைத்துப் போட்டே வேலை வாங்குவான். ஆட்களுடன் கலகலப்பாகப் பேசமாட்டான்; பழகமாட்டான். பணத்தை இறுக்கி முடிவான். யாருக்கும் தம்படி தரமாட்டான்; கடுஞ் செட்டு. மற்ற சித்திரக்காரர் குடிப்பர், நடன மாதருடன் களிப்பர். ஆந்துரு தாஃபி அந்த வழிக்கே

போக மாட்டான்; பணம் பிடுங்கும் வியாபாரத்திற்கு மூன்று தண்டன் சமர்ப்பித்து விலகிக்கொள்வான். வீட்டில் எளிய உணவுதான். மனைவிக்கு இந்தச் செட்டும், கண்டிப்பான நடத்தையும் பிடிக்காது; சும்மா முனகிக் கொண்டே யிருப்பாள்; முகம் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்; அவன் ஒன்று சொன்னால், அவள் பத்து சொல்லி, தன்னைத் தாயார் பெற்ற வரிசை, தான் வளர்ந்த வரிசை முதல் இப்படிப்பட்ட வறட்டுக் கணவனுக்கு வாழ்க்கைப்பட்டுத்தான் படும் சிறுமை வரையில் பஞ்சாதி சொல்லி, ஸம்பாவனை நடத்துவாள்; அத்துடன் அவள் எட்டேகால் லட்சணம். இருந்தாலும் நமது அழகிற்கு இவ்வளவு போதுமென்றிருப்பான் ஆந்துரு தாஃபி. கிழவன் இரவு ஒன்பது மணிக்கெல்லாம் படுக்கப் போவான்; இரண்டு மணிக்கெல்லாம் எழுந்துவிடுவான்; தனது வேலையாட்களையும் தடபுடலாக எழுப்புவான். தூங்கி விழுந்தால் முகத்தில் தண்ணீரைக் கொட்டுவான்; காதை பிடித்துத் திருகுவான். இதெல்லாம் நமது புஃஃபல்மாகோவுக்குப் பிடிக்குமா? அவனது தமாஷ் எங்கே, ஆந்துருவின் வறட்டு வாழ்வு எங்கே?

புஃஃபல் மாகோ யானைக் குட்டி மாதிரி பருத்து வந்தாலும், பள்ளிச் சேஷ்டை மட்டும் போகவில்லை. ஏதாயினும் வேடிக்கை செய்து உடனிருக்கும் ஆட்களைச் சிரிக்க வைப்பான். விடிந்தால், இன்று என்ன வேடிக்கை செய்யலாம் என்பதே அவன் சிந்தனை. தொழிலில் சோடை யில்லாதிருப்பதால் தான் ஆந்துரு தாஃபி அவன் மேல் பிரியமாயிருந்தான்.

எஜமான் ஒன்பது மணிக்குக் கண் அயர வேண்டியது தான் தாமதம். புஃஃபல் மாகோ கதவைத் திறந்து கொண்டு தனது சகாக்களுடன் வெளிக் கிளம்பி ஊர் சுற்றுவான்; நாடகம் பார்ப்பான்; ஊரில் அவனுக்குத்

தெரியாத நடிகர், நடிகை கிடையாது. யாருடனும் எளிதில் சிநேகம் செய்வான்; விகடமாகப் பேசுவான்; அவன் புறப்பட்டால் பின்னால் ஒரு 'ஜமா'' சேரும். எல்லாத் தமாஷூம் பார்த்துவிட்டு ஓசைப்படாமல் பன்னிரண்டு மணிக்கு மேலே வந்து படுப்பான். படுத்தால் கும்பகர்ணன் தான்! இப்படிப் பட்டவனை இரண்டு மணிக்கு எழுப்பினால் எப்படிச் சகிப்பான்? எழுப்ப எழுப்பத் துப்பாக்கிக் குறட்டை தெறிப்பான்!

கிழவன் ஆந்துரு தாஃபிக்குப் படு கோபம் வரும். "அட கழுதை! மூதேவி! சோம்பேறி, எழுந்திரு, உதவாக்கரை! வர்ணங் குழை'' என்று பல்லவி பாடுவான்; புஃஃபல் மாகோ போர்வையை இறுக்கி மூடிக்கொண்டு மரக்கட்டை மாதிரி அசையாது விழுந்து கிடப்பான்; தன் சகாக்களையும் முன்பே ஒத்துழையாமைக்குத் தயார் செய்தே படுப்பான்! "தடியா, என்ன சோம்பல்! இரு சொல்லுகிறேன்'' என்று போர்வையை நீக்கி முகத்தில் தண்ணீரைத் தெளிப்பான். அப்போது தான் அவனுக்குக் கொஞ்சம் உணர்ச்சி வரும்.

"ஹ—ஹ—ஹ'' என்று கோணவழித்து மூதேவி நடனமாடி, நீட்டி நெளித்துக்கொண்டு எழுந்திருப்பான்; மீண்டும் சண்டிமாடு மாதிரி படுத்துக் கொள்வான். காதைப் பிடித்துத் திருகி வர்ணச்சட்டி முன் உட்கார வைத்துவிடுவான் கிழவன்! புஃஃபல்மாகோ பல தந்திரங்கள் செய்து பார்த்தான்; பன்னிரண்டு மணிக்கு "கொக் கொக்கோ'' என்று கோழி கூவுவான்; விடிந்துவிட்டதென்று கிழவன் எழுந்து தனது வேலைக்குப் போவான். புஃஃபல்மாகோ ஹாயாகத் தூங்குவான். தினம் இப்படி நடக்குமா! மற்றொரு வேடிக்கை செய்தான் புஃஃபல்மாகோ.

ஆந்துரு தாஃபிக்குச் சாத்தான் என்றால் உதறல்! பேய் பிசாசு என்றால் நடுக்கம். படுக்கும்போதும் எழுந்

திருக்கும்போதும், பரிசுத்தக் கன்னியை மாமூலாகத் தொழுவான்.

"பரிசுத்த கன்னியே, தேவமாதாவே, சாத்தான் என் கிட்ட வராது விரட்டு; உன் கையைக் கொடுத்து என்னைப் பரலோகத்திற்குத் தூக்கி விடு! தேவகுமாரனைப் பெற்ற பரிசுத்தக் கன்னியே, பரலோகத்தில் தங்கக் குறிச்சியில் நீ பெருமையாக வீற்றிருக்கிறாய். உன் அடியில் நான் வீற்றிருக்கும்படி என்னை, இதோ இப்போதே பரலோகத்திற்கு அழைத்துக் கொண்டருள், ஆமென்!"

ஊர் இரண்டாகும்படி, காது செவிடுபட இந்த வேண்டுகோளைக் கூவி முறையிட்டே படுப்பான், எழுவான் கிழவன். இரண்டு மணிக்கு எழுந்து இப்படிக் கத்தினால் அயர்ந்து தூங்கும் புஃஃபல் மாகோவுக்குத் தொந்தரவாயிராதா? கிழவன் பரிசுத்தக் கன்னியைப் பரலோகத்திற்கு இட்டுப் போகும்படி பிரார்த்திக்கும்போதெல்லாம் இடியிடியென்று சிரிப்பான் புஃஃபல்!

தனது சகாக்களுடன் கூடி ஒரு தமாஷ் ஜோடித்தான். கிழவர் படுக்கும் அறையை ஒட்டி புஃஃபல் மாகோவின் அறை, இடையே ஒரு மெல்லிய மறைவு எட்டடி உயரத்தில் இருந்தது.

ஒரு நாள் கிழவன் ஆட்களை ஒரு மணிக்கே எழுப்பி, வர்ணங் குழைக்கச் சொல்லி காலை ஆறு மணிக்கெல்லாம் ஏசுநாதர் ஞானஸ்நானம் பெற்ற காட்சியை உள்ளூர் மாதா கோவிலில் எழுதத் தொடங்கினான். புஃஃபல் மாகோவும் சகாக்களும் வேலைக்கு வேண்டிய சுற்றுக் காரியங்களெல்லாம் செய்து முடித்துக் கீழே இறங்கினர். கிழவன் தன் வேலையில் ஆழ்ந்திருந்தான்; இது தான் சமயமென்று புஃஃபல் மாகோ சகாக்களுடன் புறப்பட்டான்; பலமான தாம்புக் கயிறும், தண்ணீர் இழுக்கும் இராட்டினமும் வாங்கிக் கொண்டான். ஆந்துரு தாஃபியின்

படுக்கையறைக்குள் நுழைந்தான். உத்திரத்துக் கொக்கியில் இராட்டினத்தை மாட்டிக் கயிற்றைப் பொருத்தினான். கிழவன் கட்டிலின் நாலு மூலையிலும் கயிற்றைக் கட்டினான். கயிற்றின் நுனியைத் தன் அறையில் தொங்கும்படி வைத்தான். சகாக்களுக்குச் சூட்சியைச் சொன்னான். ஓசைப்படாமல் கிழவன் பக்கம் போய் நின்று அன்று வெகு பணிவாக நடந்து கொண்டான். அன்று சித்திரம் நன்றாக அமைந்தது. நாளெல்லாம் வேலை செய்து அற்ப உணவு உண்டு கிழவன் ஒன்பது மணிக்கு வந்து கட்டிலில் படுத்து, வழக்கம் போலப் பரிசுத்தக் கன்னிக்கு முறை வைத்தான்.

"ஹே, தேவமாதா, ஹே பரிசுத்த கன்னிமரியாளே, சாத்தான் என் கிட்ட வராது விரட்டு; தேவகுமாரன் படத்தை அழகாக எழுதியிருக்கிறேனல்லவா? அல்லி போன்ற உனது திருக்கையைக் கொடுத்துத் தாஸனைப் பரலோகத்திற்கு ஏற்றி உன் மலரடியில் இருத்து. தேவ குமாரனைப் பெற்ற நித்திய கன்னியே, என்னை உடனே பரலோகத்திற்கு இழுத்துக் கொள்! ஆமன்!"

இருட்டு; கண் மயங்குகிறது; திடீரென்று "ஹா, ஹா, ஐயோ! வேண்டாம், வேண்டாம்! அபராதம்!" என்று கூச்சலிட்டான் கிழவன்! என்ன சமாசாரம்? கட்டில் மேலே கிளம்புகிறது! நிச்சயமாகப் பரிசுத்தக் கன்னிதான் தன்னைப் பரலோகத்திற்கு இழுக்கிறாள் என்று பயந்து நடுங்குகிறான் கிழவன்.

"ஐயோ, என் வீடு வாசலை விடமாட்டேன் ஐயோ ஏசுநாதர் படத்தை இன்னும் முடிக்கவில்லை; வேலை பாக்கி கூலி பாக்கி! அந்த வீட்டுச் செல்வன் நூறு ரூபா தர வேண்டும்; அந்தத் தெருவிலிருக்கும் பேதுருவுக்கு ஆயிரம் கடன் தந்தேன்; வட்டியும் முதலுமாக 1500 வரவேண்டும் என்னுடன் பொறாமை கொண்டு போட்டி போடும் அந்த

யோசப்பின் கண் முன் நான் புகழ் பெற்று மாளிகை கட்டி வாழவேண்டும்! அம்மா பரிசுத்த கன்னியே, இரண்டு பிள்ளை குட்டி உண்டாகிக் கண்ணால் காண வேண்டும். வீடு மராமத்து நடக்கவேண்டும்; என் பெண் சாதி முகத்தைத் தூக்கிக் கொண்டிருக்கிறாள்; அவளை சமாதானப் படுத்தவேண்டும்! தாயே! அதற்குள் பரலோகம் போகமாட்டேன்! **அம்மா, வேண்டாம் பரலோகம்!** நான் பிரார்த்தனை செய்தது தப்பிதம்! போட்டுக் கொள்ளுகிறேன் கன்னத்தில்!......"

கட்டில் மெல்ல மெல்ல மேலே ஏறி உத்திரத்தை எட்டப் போகிறது! கூச்சல் பலமாகிறது: "ஐயோ கன்னி! ஐயையோ தெய்வத்தாயே! வேண்டாம் பரலோகம்! ஐயோ! மேலும் மேலும் இழுத்துக் கொண்டு போகிறாயே! தேவகுமாரனே நீயாகிலும் உன் தாயாருக்கு சொல்லி பூலோகத்திலேயே விட்டு விடும்படி சிபார்சு செய்! பரலோகம் வேண்டாம்; விட்டு விடு!" என்று நடு நடுங்கி அழத்தொடங்கினான்.

தொப்பென்று கட்டில் விழுந்தது. கட்டில் கால்கள் ஒடிந்தன! ஆள் தூக்கியடித்துக் கீழே விழுந்தான்; காயமில்லை. 'ஐயோ ஏசு, இப்படிப் பலமாகக் கீழே தள்ளி எனது விலை பெற்ற கட்டில் காலை ஒடித்து விட்டாயே! இது உனக்குத் தருமமா! ஐயோ. தேவமாதாவே! நெஞ்சு பதறும்படி என்னை இப்படி வீழ்த்தலாமா?" என்று அலறுகிறான் கிழவன்!

அடுத்த அறையில் கடகடவென்று இடி நகை முழங்குகிறது!

"நடந்ததென்ன?" என்று புஷ்பல் மாகோ தூங்கி யெழுந்தவன் போல் சகாக்களுடன் ஓடிவந்தான்.

ஆந்துரு தாஃபியின் மனைவி அன்று கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டுக்குப் போயிருந்தாள். இல்லா

விட்டால் சாத்தானுக்குச் சரியானபடி வசைமாரி கிடைத்திருக்கும். தான் இப்படிக் கீழே விழுந்த அவமானமும் மனைவிக்குத் தெரியாதிருப்பது நல்லதே அல்லவா!

கிழவன் "பார் என் அவதியை!" என்று முறையிட்டான். "த்சொ! த்சொ! த்சொ! அடாடா இப்படியா, கயிறு கட்டித் தங்களை இழுத்து, படாரென்று கீழே தள்ளுவது!"

கிழவன்: ஆமாமப்பா ஆமாம்! இனி என் ஆயுசுக்கும் பரலோகம் வேண்டேன்!

புஃஃப்ல் மாகோ: எஜமானே, ஒன்று சொல்லுகிறேன்! இது பரிசுத்தக் கன்னியின் வேலையில்லை; இது சாத்தான் வேலைதான்!

கிழவன்: ஹா, அப்படியா. ஐயோ, சாத்தான் இங்கே எப்படி வந்தான்!

புஃஃபல் மாகோ: அவன் நுழையாத இடம் ஏது? அவன்தான் அதோ பாருங்கள்! இராட்டினத்தை மாட்டி, கயிறு கட்டி, கட்டிலை இழுத்து உங்களை கீழே தள்ளியிருக்கிறான்! அநியாயமாகக் கட்டில் கால் போயிற்று; நல்ல வேளையாக உங்கள் கால் தப்பியது.

கிழவன்: அட பாவி! அவனுக்கு நான் என்ன பிழை செய்தேன்?

புஃஃபல் மாகோ: நீர் பரிசுத்தக் கன்னிக்குப் பலத்த சப்தம் போட்டு முறையிட்டதால் சாத்தானுக்குக் கோபம் வந்துவிட்டது; மேலும் அவனைத் தூங்கவொட்டாது ஜாமத்திற்கே எழுந்து சத்தம் போடுகிறீர். இரண்டும் செய்யாதேயும். பிரார்த்தனை மனதுக்குள்ளே நடக்கட்டும். நாலு மணிமட்டுமாவது பிறரைத் தொந்தரவு செய்யாது படுத்துத் தூங்கும். சாத்தானும் சேட்டையில்லாமல் உறங்குவான்.

கிழவன் : ஆகட்டுமப்பா. ஆகட்டும்!

அன்றுமுதல் புஃஃபல் மாகோவைக் குறைத் தூக்கத்தில் யாரும் எழுப்புவதில்லை. ஆந்துரு தாஃபி கட்டிலோடு பரலோகத்திற்கு இழுக்கப்பட்ட கதை ஊரெல்லாம் நகரா அடித்துப் போயிற்று. வீட்டு முகடுமட்டும் பரலோகத்திற்கு ஏற்றிக் கிழவனைக் கீழே போட்டது யார்? மரியாளா, ஏசுவா, சாத்தானா? இவர்கள்மேல் யாருக்கும் சந்தேகம் இல்லை. புஃஃபல் மாகோவைக் கண்டபோதெல்லாம் "எம்மையும் கயிறு கட்டிப் பரலோகத்திற்கு இழுத்துக் கீழே தள்ளாதே" என்று ஊரார் சொல்லி நகைப்பர்!

## 9. அமங்கலி சுமங்கலியானாள்

### 1

புயல் சீனு ஏருத மேடையில்லை; எழுதாத இதழில்லை; அவன் குரல் அதிராத ஊர் இல்லை. காலைக் காப்பி யுடன் ஹிந்துப் பத்திரிகையைக் கரைத்துக் குடித்துக் கண்ட சுத்தி பண்ணிக்கொண்டால், வயிறு கிண்டுமட்டும் வாய் வீறிட்டுக் கொண்டிருக்கும். பேச்செல்லாம் தேசம், சீர்திருத்தம், ஊர்திருத்தமாகவே யிருக்கும். சொந்த அந்த ரங்கம் எதுவும் வெளிவராது.

"உன் சொந்த ஊர், அப்பா அம்மா பெயர் என்ன; கலியாணமானதா? குழந்தை குட்டி உண்டா?" என்றெல் லாம் கேட்டால் புயல் உங்களைச் சுற்றியடித்துவிடும்; கவனம். அரசியற் புயல் வேதாந்த இடியாக மாறி மண்டை இடியைப் பொழிந்தாலும் பொழியும்.

புயல் சீனு பொழுது போக்கிற்குச் சரியான ஆள் — ஆனால் நான்மட்டும் அவனுடைய வாய்ப் புயலை எப்படியோ தாண்டி, அந்தரங்கக் கோட்டைக்குள் நுழைய முயன்றேன். அதற்குக் காரணம் "கும்பகோணம்".

### 2

கும்பகோணம் என்றால் எனக்குப் பெரு மதிப்புண்டு; அது மேதாவிகளின் பண்ணை—ஆரிய கலாபீடம்— என் றெல்லாம் நான் போற்றுவதுண்டு; எல்லா ஊர்களுக்கும் தலபுராணம் பாடும் புயல் சீனுவின் முகம் கும்பகோணம் என்றால், அஷ்டகோணமாகும்; "கும்பகோணமாம் கொசுக்கடியாம்; கும்பகோணம் மூளை நாகேசையன் வேலை" என்பான். எப்படியோ அவனையும் சரிபண்ணி மகா மகத்திற்கு அழைத்து வந்துவிட்டோம்.

## 3

"வராதே!" என்று ரயில்காரன் படம் போட்டு மிரட்டுகிறுன்—யார் கேட்கிறுர்கள்? கால் வண்டியைத் தட்டி விட்டு இலட்சக்கணக்கான ஜனங்கள் கும்பகோணக் குளத்தில் முழுக, சமுத்திரம்போல் நிறைந்துவிட்டனர். "சிவா, ராமா, கோவிந்தா, ஹரி, சங்கரா" என்ருெரு புறம் திவ்ய நாமங்கள் கிளம்புகின்றன; "ஓய், ஏங்காணும், டலே, டேய், சீ, சு, உஸ் புஸ்..." என்று ஒருவருடன் ஒருவர் முட்டி மோதி இடித்துத்தள்ளி முன் செல்லும் போட்டிகள் எங்கும் நடக்கின்றன. தொண்டர்கள் தொண்டையும் கட்டிப்போனது; மூங்கில் தடியும் முறிந்தது—கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை. நாங்கள் எப்படியோ முண்டி முரண்டி முன்சென்று முழுகி, மகாமகக்குளத்தில் பொங்கும் புண்ணியத்தை அள்ளிக்கொண்டு திரும்பினேம்.

அப்போது ஜனசமுத்திரம் பொங்கிக் கொந்தளித்து, அலேமோதிப் புரண்டது! அந்த அலேச் சுழலில் அகப்பட்டுத் தவித்தவர்களேப் பார்க்கப் பரிதாபமா யிருந்தது! இப்படிக் கஷ்டப்பட்டுப் புண்ணியந் தேடுவோர்க்குத் துணே செய்யாமல் நாங்கள்மட்டும் குளித்து வந்தது எங்களுக்கு சுருக்கென்றது. புயல் சீனு காப்பியை மறந்தாலும் பரோபகாரத்தை மறக்கமாட்டான். மகாமகக் கூட்டத்தில் வாயால் பரோபகாரம் செய்ய வகையில்லே; நாங்கள் எல்லோருமே சாரணப் பயிற்சிபெற்ற தேசத் தொண்டர்; ஆதலால் கோயில் வாசலிலிருந்து, கூட்டத்தை ஒழுங்கு செய்யத் தொடங்கி, அங்குமிங்கும் கைத்தடியை வீசிப் பாதை யுண்டாக்கினேம். எங்களேயும் மீறி ஒரு கும்பல் மேலே விழுந்தது. பாறையில் மோதும் பேயலே போலச் சீனு முதுகில் ஒரு கூட்டம் கவிழ்ந்தது. அக் கூட்டத்திற்கிடையே 'ஐயோ பெருமாளே! ஐயையோ

ஸ்ரீநிவாசா!'' என்றொரு கிழட்டுக் குரல் கேட்டது. நாங்கள் அருகே சென்றோம். ஒரு முதிய கிழவி அங்கே தத்தளித்தாள். பழுத்த உடல்; உயிர்க்கிளையிலிருந்து உதிரப்போகிறது; மகாமகப் புண்ணியம் தேடுமுன் இப் பழத்தைக் கூட்டம் கீழே தள்ளி இதோ நசுக்கப் போகிறது—நாங்கள் பாய்ந்து வந்து, பாட்டியை அத்தாயமாகத் தூக்கினோம்.

அந்தச் சமயம் "ஐயோ பாட்டீ'' என்ற குரல் கேட்டது—ஒரு இளங்கைம்பெண் எப்படியோ மகாமக முழுக்கைப் போட்டுவிட்டு, ஒரு செம்புடன் ஓடிவந்தாள்; செம்பிலிருந்த மகாமக தீர்த்தத்தைப் பாட்டி, முகத்தில் தெளித்தாள்; வாயில் சிறிது ஊற்றினாள். "பேசாமல் வீட்டிலிருந்தால் இந்த விபத்தில்லையே — ஐயோ பாட்டி, நீ பிழைப்பாயா'' என்று அழுதாள். நாங்கள் "அம்மா அழாதே; உன் பாட்டியை நாங்கள் வீட்டிற்குத் தூக்கி வந்து வேண்டியதைச் செய்கிறோம்'' என்றோம்; பெண் முன் சென்றாள்; நாங்கள் பாட்டியுடன் அவளைப் பின் பற்றினோம். புயல் சீனுமட்டும் ஏனோ மந்திரவாதியைக் கண்ட நாகம்போல் அஞ்சி நெளிந்தான்! அவன் வாய், புயல் வீசவில்லை—உள்ளேதான் புயல்; அவன் உதட்டில் ஓர் இரகசிய முத்திரை வைத்திருந்தது.

4

சந்துகளிற் புகுந்து, பாட்டி வீட்டில் நுழைந்தோம்; இளம்பெண் உடனே பாய்விரித்துத் தன் பாட்டியை அருமையாகத் தாங்கிப் படுக்க வைத்தாள்; உடனே "அம்மா கஞ்சிபோடு; நாங்கள் காயங்கட்டுகிறோம்'' என்றோம். பெண் சிட்டாய்ப் பறந்து வேலை செய்து, கஞ்சி கொண்டுவந்தாள்; அதற்குள் நாங்கள் கால் காயத்தைக் கட்டி, ஒத்தடங்கொடுத்துச் சிகிச்சை செய்து

முடித்தோம்; பெண் உத்திரணியால் மெல்ல மெல்லப் பாட்டிக்குக் கஞ்சி புகட்டினாள். அவள் அன்பு எங்களை உருக்கியது. பாட்டி மயக்கந் தெளிந்து,

"ஹா சக்ரபாணி! என்னைக்கொண்டு போகாமல் மறுபடியுமா பிழைக்க வைத்தாய்" என்றாள். கைம்பெண், "பாட்டி, சக்கரபாணி என்னைக் கொண்டுபோனதும் உன்னைக் கொண்டு போகட்டும். இந்தக் கட்டை இருந் தென்ன — துக்கப்பட்ட ஜன்மம்?" என்று நொந்து கொண்டாள். என்மனம் இளகியது; "அம்மா, நீங்கள் ஏன் இப்படி இங்கே தனியாக இருக்கிறீர்கள்? உங்களுக்கு வேறு பந்துக்கள் இல்லையா? முடிந்தால் உங்கள் குடும்ப விவரத்தை நாங்கள் கேட்க விரும்புகிறோம்" என்றோம்.

"ஐயா, நீங்கள் புண்ணிய சீலர்கள்; பரோபகாரிகள்; அதிதிகள்; முதலில் அதிதி ஸத்காரம் செய்து, பிறகு எங்கள் கதையைச் சொல்லுகிறோம்; நாங்கள் பரம ஏழைகள்—சக்கரபாணிதான் எங்களுக்குத் துணை. அவன் எங்களுக்குத் தந்தது உரல் — உலக்கை — அவலிடித்துப் பிழைக்கிறோம்; ஏழைகளின் உபசாரத்தை அங்கீகரிக்க வேண்டும்" என்று அந்தப் பெண் முக்காட்டில் பாதி முகத்தை மறைத்துக்கொண்டு, எங்களுக்கு வெல்ல அவல் பரிமாறிக் காவேரித் தண்ணீரும் தந்தாள். பிறகு நாங்கள் ஆவலாக அவள் கதையைக் கேட்டோம்.

## 5

கண் கலங்குகிறது; மார்பு துடித்து வார்த்தை விக்கி விக்கி வருகிறது; "ஐயா எங்கள் வாழ்க்கை கண்ணீரிலும் புண்ணீரிலும் தோய்ந்து வறுமையில் காய்ந்து பொடி யானது; போன மகாமகத்தில் நாங்களும் சீரும் சிறப்புமா யிருந்தோம். அந்தக் கோயில் தெருவில் உள்ள காந்தி வாசகசாலைதான் எங்கள் வீடாயிருந்தது. சுவாமி மலையில் எங்களுக்கு ஒரு வேலி நிலமுண்டு.

நான்: எல்லாம் எப்படி இழந்தீர்கள்? ஏன் இப்படி யானீர்கள்?

அவள்: நான், துரதிட்டக்கட்டை, பிறந்த பிறகுதான் எங்கள் குடும்பம் இப்படியானது; இவள் எனது தாயைப் பெற்ற பாட்டி; அன்பு மயம்; அனாதையான எனது தெய்வம் இவளே.

நான்: அம்மா தாங்கள் அனாதையானதேன்? தங்கள் கணவன் ஊர் எது? அவரை எப்போது இழந்தீர்கள்?

அவள்: ஹூ—பாட்டி, நீ சொல்லு பாக்கிக் கதையை!

பாட்டி: கேளப்பா கேள். என் துக்கத்தைச் சொல்லித் தீர்க்கிறேன். என் கோமளத்திற்குக் கோகிலம் ஒரே பெண்—கிளிபோலப் பெண், கொள்ளைச்சமர்த்து; காரியக் சப்பல். என் மாப்பிள்ளை சீதாராமன் வக்கீல் பண்ணி வரும்படியெல்லாம் ஒரு தட்டுவாணிக்குக் கொட்டிக் கொடுத்து தீராத ஜன்னி கண்டு உயிரையும் விட்டான். கோகிலம் அப்போது பள்ளிக்கூடத்தில் படித்தாள். எனக்கு உத்தமதானபுரம் சாமிநாதையரைத் தெரியும். பெரிய வித்வான். சமயோபகாரி. அவரிடம் என் குறையைச் சொன்னேன். அவர் இரண்டு ஜாதகங்களை வாங்கித் தந்தார். ஒன்றில் தசப் பொருத்தமும் சரியா யிருந்தது; பிள்ளையாண்டான் தஞ்சாவூர்; நானே தஞ்சா வூருக்குப் போய், அவன் தாயாரைக் கெஞ்சி இந்தச் சம்பந்தம் செய்தேனப்பா. தஞ்சாவூர்க்காரர் அழுத்தமும் மாப்பிள்ளை முறுக்கும், கெடுபிடியும் தடபுடலாகத்தான் இருந்தன. பிள்ளை ஸ்ரீநிவாசன் படிப்பை ஒப்புக்கொண்டு எதிர் ஜாமின் மூவாயிரம் தந்தேன். சுவாமிமலை நிலம் இவள் கலியாணத்தில் தீர்ந்தது; மாப்பிள்ளை கும்ப கோணம் காலேஜில் படித்தான்—அவன் பி. ஏ. பட்டம் பெற்றபோது எங்கள் வீடும் அடமானத்திலிருந்தது. பட்ட மிருக்கிறது, எப்படியாவது மாப்பிள்ளை சம்பாதிப்பான்; கோகிலம் சுகமாயிருப்பாள் என்றே நம்பினோம்.

மாப்பிள்ளை பி. எல்லுக்குப் படித்தான்; மதிப்பாகப் போர்டு போட்டான். திண்ணையில் நாற்காலியும், தூங்கி விழும் குமாஸ்தாவுந்தான் மிச்சம். கட்சிக்காரர் வரவில்லை. நாங்கள் ஏமாற்றமடைந்தோம். பிறகு மாப்பிள்ளை பேனு நாட்டிச் சம்பாதிக்கிறேன் என்று கிளம்பினுன்.

பேனுச் சிலம்பம் பலிக்கவில்லை; கதை கிதை ஏதோ எழுதிப் போட்டான்; பத்திரிகை நிரம்பியது. சோற்றுப் பை நிறையவில்லை. மாப்பிள்ளைக்குப் பாட்டு வரும்—அவன் தஞ்சாவூருக்குப் போய் சங்கீத வித்வானுகக் கிளம்பினுன். அங்கே யிருந்த பிதுரார்ஜிதமெல்லாம் முன்னேயே கடனுக்குப் போய்விட்டது. ஒரு வருஷம் பேச்சு மூச்சில்லை; அப்புறம் வித்வான் ஸ்ரீநிவாசன் பட்டும் ஜரிகையும் தோடாவுமாக ஒரு நாள் இங்கே வந்து, எனக்கு நமஸ்காரப்பண்ணி "பாட்டி, நான் கச்சேரியில் அள்ளப் போகிறேன்" என்முன். "எப்படியாவது கோகிலத்தை நன்ருக வைத்துக்கொள்" என்றேன்.

கோகிலம் பத்து வயதுப் பெண்; மாப்பிள்ளை சீனு ஐப்பசி மாதம் இங்கே வந்தான். அந்த வருஷம் காவேரியில் வெள்ளம் கரைபுரண்டோடியது. ஒரு நாள் எல்லோரும் துலா ஸ்நானத்திற்குப் போனேம். நானும் கோமளமும் ஏதோ நினைவாயிருந்தோம். இந்தப் பெண் கால் தவறி விழுந்து ஐயோ என்றலறி வெள்ளத்துடன் போனுள்; மாப்பிள்ளையும் பதறிக் குதித்து அவள் கூந்தலைப் பிடிக்கப் பாய்ந்தான்; அவனையே வெள்ளச் சுழல் இழுத்துவிட்டது; ஆளை மறுபடியும் காணவில்லை; காலேஜிலிருந்து அப்போது ஓடம் வந்தது; அதிலிருந்து ஒரு புண்ணிய வாளன் குதித்து, கோகிலத்தைமட்டும் பிடித்து, சிரமப் பட்டு ஓடத்தில் ஏற்றிவந்தான். சக்கரம் வைத்துச் சுழற்றிப் படாத பாடுபட்டு டாக்டர் ராமசாமி இவளுக்கு உயிர்ப் பிச்சை தந்தார்.

**அவள் :** ஐயோ! நான் என் பிழைத்தேன்? இந்தக் கோலத்திற்கு ஆளாகாமல் அப்படியே காவேரியில் போயிருக்கக்கூடாதா?

**பாட்டி :** கர்மபலன் அனுபவிக்கத்தானே மேண்டுமம்மா. சீனு, போனவன் போனவனே. ஆளைக் காணோம். பெண்ணைப்போலப் பேத்தியும் துக்கப்பட்டாள். இது வைதீகபுரி. அந்தத் தெரு குப்பா சாஸ்திரியும் சுப்பா சாஸ்திரியும் சேர்ந்து, பதினைந்து வயதுக் கோகிலத்தை வெள்ளைப் புடவையே உடுத்தச் செய்தார்கள். அதைக் கண்ட கோமளம் மனம் வெடித்து இறந்தாள். என் மனமும் துடியாய்த் துடித்தது; உலக நாடகம் வெறுத்தது; கோகிலத்தின் கண்ணீரைத் துடைத்து "அம்மா, அழாதே; நம் விதி அப்படி; இனிப் பாழும் பிறவியே வேண்டாம்; உலகில் நமக்கு வேறு துணையில்லை; சக்கரபாணியைச் சரண்புகுவோம்; அவன் விட்டவழியே செல்வோம்" என்றேன். சக்கரபாணிதான் எங்களுக்குக் கதி; அவன் சந்நிதானத்தில் வித்வான் சடகோபாச்சாரியார் இராமாயணமும் நாலாயிரப்படியும், ஸ்ரீ பாஷ்யமும், தேசிக ப்ரபந்தமும் படித்தார்; அந்தப் புண்ணிய வாக்கைக் கேட்டு அனுஸந்தானம் பண்ணிப் பண்ணி, ஒருவாறு கவலை தீர்ந்தது; ஆசாரியாருக்கு அவல் வேண்டும் என்று கேள்விப்பட்டோம். இரண்டு பேரும் அன்று முதல் அவலிடித்து வருகிறோம்; ஆசாரமான வைதீகர் சிலர் இங்கே வழக்கமாக அவல் வாங்குவார்கள்; அதில் வருவது எங்களுக்குப் போதும்; எப்படியோ காலம் நடக்கிறது. என் காலம் இதோ ஆய்விட்டது; ஆ — சக்கரபாணி — சக்கரபாணி—

பாட்டி இவ்வளவு பேசுவதற்குள் மேல்மூச்சு வாங்கி விட்டது.

கோகிலம்: பாட்டி, நமது கதை போதும்; நமது கவலை யெல்லாம் பெருமாள் பாதத்தில் வைத்துச் சரண்புகுந்த பிறகு பழைய கதை எதற்கு? இவ்வளவு பேசிய நேரத்தில் ஸ்ரீ ராமஜபம் செய்திருந்தாலும் புண்ணியமுண்டு; உலகம் ஏமாற்றம் என்று முடிந்த பிறகு ஸ்ரீ ராமன் கருணையைத் தவிர வேறு எதை நாம் நம்ப முடியும்? பாட்டீ, ஆற்றுடன் போனவர் உள்ளத்திலும் இருப்பவன் அந்தப்பரமாத்மனே! அந்த உடல் மறைந்த பிறகு இருப்பவன் என் ஆத்மநாதனை பரந்தாமனே; அவனுக்கு அழிவுண்டோ? மனிதர் அன்பும் உறவும் எத்தனை நாள்? இறைவன் அன்பும் உறவும் என்றும் இருக்கும்; அது தேக சம்பந்தம்; இது தேகி சம்பந்தம்; அது அற்பம்; இது அகண்டம். பாட்டி! உலக விவகாரமெல்லாம் மன விகாரப்புயல் தானே; அகங்காரப்புயல் ஒழிந்து அமைதி உண்டானல், உள்ளே யிருப்பதுதான் உலகம் என்பதை அறியாமலா போவோம். பாட்டீ போனவர் வரமாட்டார்; உள்ளே யிருப்பவர் போகார்.

இப்படி அவள் பேசும்போது புயல் சீனு விம்மி வீறிட்டான்.

"என் கண்ணே! நான் போகவில்லை; கோகிலம், இதோ இருக்கிறேன்; நானே ஸ்ரீநிவாஸன்! என் அகங்காரப் புயல் ஒழிந்தது. என் அமுதமே, என்னை மன்னிக்க வேணும்!" என்று சீனு கோகிலத்தின் காலில் விழுந்து கண்ணீர் விட்டான். கோகிலம் சட்டென்று ஒரு மின் பார்வை பார்த்து "ராமா! உன் கருணை வந்ததா! பாட்டீ! சக்கரபாணி, நம்மைக் காப்பாற்றி விட்டார்—பாட்டி—அவரே இவர்!" பார் என்ருள். பாட்டி "சக்கரபாணி! என்னப்பா! என் வயிற்றில் பால் வார்த்தாயா. இனிக் கவலையில்லை—கோகிலம்—சீனு—நன்ருயிருங்கள்—என் கவலை விட்டது—ஸ்ரீராமராம்—" என்று கண்ணை அகலத்திறந்து

சீனுவைப் பார்த்துப் புன்னகைத்தாள்—கண்ணை மூடி னாள். அத்துடன் அவள் வாழ்வின் விளக்கு அணைந்து விட்டது.

சீனு: தன் புயலை ஐந்து நிமிஷம் வீசினான்:

"தோழர்களே! என்னருமைக் கோகிலத்தை இன்றே கண்டுபிடித்தேன்."

நான்: ஆற்றுடன் போனவன் எப்படி மீண்டாய்? உடனே உன் மனைவியிடம் வராததேன்?

சீனு: நண்பரே! வெள்ளத்தை வெல்ல நான் முயன் றேன்; என்னையே வெள்ளம் இழுத்துச் சென்றது; பிறகு நடந்தது தெரியாது, நினைவற்றேன். எனக்கு நினைவு வந்தபோது நான் ஆடுதுறையில் எனது நண்பன் சிதம் பரம் வீட்டில் இருந்தேன். எழுந்திருக்க முடிய வில்லை, உடம்பெல்லாம் காயம். நான் ஆடுதுறையில் ஒரு புதரில் ஒதுக்கப்பட்டதாகவும், தற்செயலாக மாமனார் வீட்டிற்குவந்த சிதம்பரம் பார்த்துப் பரிகாரம் செய்து என்னைக் கவனமாகக் காத்து வந்ததாகவும் சொன்னான். என் உடம்பு, உடம்பாக ஆறுமாதமானது. வாழ்வில் ஒரு மாறுதல் உண்டானது! உடம்பு அநித்தியம்; உள்ள மட்டில் இதைப் பொது நலத்தில் ஈடுபடுத்துவோம் என்று வைராக்கியமாகக் கிளம்பினேன்.

அப்போதுதான் மஹாத்மா காந்தி திருச்சிராப் பள்ளிக்கு வந்திருந்தார். ஒத்துழையாமை இயக்கமும் வீறிட்டெழுந்தது—நான் மகாத்மாவைத் தரிசித்தேன். அவர் என்னை காங்கிரஸ் ஊழியனாக்கினார்—அன்றுமுதல் தேசத்திற்காகப் பேசி வருகிறேன். இடையே நான் கும்பகோணம் வந்து கோயில் தெருவில் தேடினேன்; ஊரில் விசாரித்தேன்—கோகிலம் பெயரே மறைந்து விட்டது. என் குயிலைக் காணமுடியாததால் என் வைராக்கியம் தீவிரப்பட்டது.

"குயிலைக் கூடியாயிற்றே; இனி வைராக்கியம் ஐக்கியமாகலாமே! சீனு—கோகிலத்திற்கு ஜேய்" என்று நாங்கள் குதூகலித்தோம். எனது நண்பர் மனைவி, கோகிலத்தை உள்ளே அழைத்துச் சென்று கிளிபோல் அலங்கரித்துக் கொணர்ந்தார். சீனு கோகிலத்திற்கு மங்களம் பாடினேம். பிறகு நாங்கள் பாட்டியைக் கழுவிக் குளிப்பாட்டி அலங்கரித்து அவள் அன்பிற்குப் பல்லாண்டு பாடி அபரக்கிரியைகளை நடத்தினேம்.

மகாமக பலன் கிடைத்தது! சுபமஸ்து.

ஃ ஃ ஃ

சீனு தனது புயலை இப்போது சென்னையில் தனது "சுதந்தரா" பத்திரிகை மூலம் வீசித் தள்ளுகிருன் என்பது நண்பருக்குத் தெரியும். அதில் வரும் கோகிலத்வனி ஸ்ரீமதி சீனுவின் தேன் மொழிகளே.

# 10. பஸ்தீல் சிறை

பதினுலாவது லூயி சிறு வயதில் தந்தையை இழந்தான்; நாட்டை அவனது தாயான ராணி அன்னி டி ஆட்ரிச்சா பாதுகாத்து வந்தாள். ராணிக்கு வலது கை போன்றுதவியது மந்திரி மஜாரன். மந்திரி மஜாரன் இத்தாலியன்; அருங்கலைவாணன்; இனிய பேச்சாளன்; ஆனால் தொடை நடுங்கிப் பேர்வழி; அவன் யாரைக் கண்டாலும் சந்தேகிப்பான். வேட்டை நாய்க்குப் பயந்து பதுங்கிக் குடல் நடுங்கிக் கொண்டிருக்கும் குழி முயல் மாதிரியே அவன் தனது பதவியில் பதுங்கிக் கொண்டிருந்தான். தற்காப்பிற்காக அவன் ஏராளமான முரட்டுச் சிப்பாய்களை வைத்திருந்தான். நாடெங்கும் ஒற்றரை யனுப்பி, சந்து பொந்துகளில் நடக்கும் சம்பவங்களை யெல்லாம் ஒன்று விடாமல் அறிவான். பிரபுக்கள் வீடுகளிலெல்லாம் ஒற்றரை வைத்திருந்தான். ராணிக்கு அவனே ராஜா, இல்லை, 'காதலன்' என்றே சொல்லி விடலாம். இருவரும் இணை பிரிய மாட்டார்கள். அந்த அந்தப்புற ரகசியங்கள் நமது கதைக்குத் தேவையில்லை யாதலால், இக்குறிப்புடன் நிறுத்திக் கொள்வோம். முதன்மையாக அரச குடும்பத்தைச் சேர்ந்த பிரபுக்களின் மேல் மஜாரன் கண்வைத்திருந்தான். அவர்களில் யாரேனும் "மஜாரன் பொல்லாதவன்" என்றுற் போதும். உடனே பஸ்தீலுக்குப் போகவேண்டியதுதான். இவ்வாறு பஸ்தில் சிறையில் அடைபட்டு வருந்திய பிரபுக்கள் பலர் என்றால், சாதாரண மனிதர் மிகப்பலர் என்று சொல்ல வேண்டாம்.

பஸ்தில் சிறைச்சாலை என்பது வானளாவிய பயங்கரக் கோட்டை. அதில் இருட்டறைகள் பல; அங்கே சாவின்

குரல் தினம் கேட்கும். "அட அநியாயமே! நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே என்னை ஏன் சிறையிலிட்டான் இந்தப் பாவி?" என்ற கூக்குரல் கேட்கும். இச் சிறையில் யாரும் நுழைய முடியாது; பலமான காவல். காவலாளரெல்லாம் மஜாரன் பாவைகள்; அவன் இச்சை எப்படிக் கயிற்றை யிழுக்கிறதோ அப்படி ஆடுபவர்.

இச்சிறையில் கொண்டா என்னும் ஒரு பிரபு அடைபட்டிருந்தார். அவர் பதினாலாம் லூயிக்கு மாமன்முறை. மஜாரனுக்கும் அவருக்கும் ஏழாம் பொருத்தம். பிரஞ்சுக்காரர்களுக்கு, பொதுவாக பிரஞ்சுக்காரரைத் தான் பிடிக்கும். தம்மை ஒரு இத்தாலியன் ஆளுவதா என்று நெப்போலியனைக்கூட வெறுக்கும் பிரஞ்சுக்காரர் இன்னும் உண்டு. மஜாரன் என்றால் குப்பை கூளத்திற்குச் சமானமாக நினைத்தவரில் கொண்டா ஒருவன். கொண்டாவிற்குப் படிப்பு அதிகம் கிடையாதென்றாலும், குஷியாகப் பேசுவான்; பெரிய தமாஷ் பேர்வழி. காலித்தனமாகக் கவி கட்டி தனக்கு வேண்டாத பேரை மட்டந் தட்டுவான். காலிகளைத் தூண்டி அவர்களைத் தெருவில் அவமானப் படுத்துவான். சுவர்களில் ஆபாசமான படமெழுதி, பார்த்தவர் சிரிக்கும்படி செய்வான். மஜாரனுக்குக் கொண்டா இவ்வளவு மரியாதையும் செய்தான். மஜாரனுக்கும் ராணிக்கும் நடக்கும் அந்தப்புற ரகசியங்களை யெல்லாம் படம் போட்டு ஊர் சிரிக்க வைத்தான். முடிவில் மஜாரனை வீழ்த்த ஒரு கலகத்தையே ஜோடித்து விட்டான். அதற்குப் பெயர் கெளவாங்கல் கலகம். கொண்டா ஊர்க் காலிகள், பிச்சைக்காரர் படைகள், அரசாங்க விரோதிகள் அனைவரையும் இரகசியமாகத் திரட்டித் தைரியப் படுத்தினான். எதற்கு? கண்ட இடமெல்லாம் மறைந்திருந்து மஜாரன் ஆட்கள் மேல் கவண் கல்லை யடித்து மண்டையையுடைக்க வேண்டியது—இவ்வளவுதான் விஷயம். இப்படிக் கெளவாங்கல் பூசை.

வாங்கின பேர் மிகப்பலர். மஜாரன் தெருவெங்கும் சிப்பாய்களை வைத்துப் பார்த்தான். "யாரும் துப்பாக்கி, தடி, கௌவாங்கல் வைத்திருக்கக்கூடாது" என்று பலமான அடக்குமுறைகள் செய்து பார்த்தான். "இரவு ஒன்பது மணிக்குமேல் யாரும் வெளியேறக் கூடாது, கூடிப் பேசக்கூடாது" என்று சட்டம் போட்டான். தான் சொன்னபடி ஜனங்கள் நடக்கிறார்களா என்று மாறு வேஷம் போட்டு இரவு பத்து மணிக்குப் பலமான காவலுடன் ஊர் சுற்றப்போவான். அப்போதுதான், "படார்" என்று ஒரு கல் அவன் குதிரைமேலே தைக்கும். பிறகு பத்துக் கற்கள் வரும்; குதிரை கீழே உருளும். பாவம் மஜாரன் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடி, ராணி பக்கத்தில் ஒளிந்துகொள்வான்! அன்று முதல் இரவும் பகலும் தன்மேல் கௌவாங்கல் விழுவது போலவே கனவு காண்பான். இன்னொரு நாள் தைரியப்படுத்திக்கொண்டு இரவு பன்னிரண்டு மணிக்கு ஊர் சுற்றிச் சோதனை செய்யப்போனான். இப்போது கல் விழாது, யாரோ பத்துப்பேர் இடி யிடி யென்று சிரிப்பர்;

மஜாரப் பேயே
இத்தாலிய நாயே
சண்டைக்காவது வாடா—அல்லது
ஜல்தி ஓடிப்போடா

என்றொரு பாட்டுக் கிளம்பும். சுற்றிப்பார்த்தால் பாட்டு. வெகுதூரம் சென்று மறையும். மறுநாள் ஊர்ச் சுவர்களிலெல்லாம் கரியினால் இந்தப் பாட்டு எழுதியிருக்கும். மஜாரனுக்குத் தபாலில் ஒரு அழகான கடிதம் வரும்; பிரித்துப் பார்த்தால், மஜாரனை நாய்போலச் சித்தரித்து அதன்கீழே மேற்கண்ட பாட்டு வர்ண மையினால் எழுதப் பட்டிருக்கும். மஜாரன் ராணியிடம் காட்டி அழுவான்.

இதற்கெல்லாம் காரணம் கொண்டா தான் என்று ஒற்றரால் அறிந்தான் மஜாரன். உடனே ஒரு பலமான

படையனுப்பிக் கொண்டாவைக் கைது செய்து பஸ்தீலில் அடைத்துவிட்டான். கொண்டா அரசாங்கக் கைதியல்லவா? அவனுக்கு எல்லாச் சௌகரியங்களும் சிறையிலுண்டு. ஆள்மட்டும் சிறைச் சுவற்றைத் தாண்டக் கூடாது. கொண்டாவின் பின்னே அவன் நண்பரெல்லாம் ஏராளமாக வந்தனர். அவர்களில் ஒருவனைப் பார்த்து வாயினுல் ஏதோ ஜாடைசெய்து கண் சிமிட்டியதும் கொண்டா இடியிடி யென்று சிரித்துக்கொண்டே பஸ்தீலுக்குள் நுழைந்தான். கொண்டாவிடம் ஒரு அருமையான நாய் இருந்தது. அதற்கு "உண்மை" என்று பெயரிட்டான். அதை அவன் பல வேடிக்கைகள் செய்யப் பழக்கினுன்; அவையெல்லாம் பெரும்பாலும் மஜாரனையும் ராணியையும் அவமானப்படுத்தும் தமாஷாக்கள், அத்துடன் சிறைச் சுவர்களிலெல்லாம் மஜாரனைக் குரங்கு மாதிரியும், பன்றிமாதிரியும் படமெழுதினுன். அவற்றின் கீழ் ஆபாசப் பாடல்களை யெழுதினுன். ஒற்றர் சும்மா இருப்பாரா? மஜாரனிடம் உடனுக்குடன் ஒன்றுக்குப் பத்தாகச் சொல்லுவர்.

மஜாரனுக்கு ரோஷம், கோபம், பொருமை வன்மம் இத்தனையும் ஒன்றுசேர்ந்து காலாக்கினியாகப் பகையெழுந்தது. கொண்டாவை ஒரு ஒதுக்கமான தனி யறையில் வைத்தான். அவன் செய்யும் தமாஷாக்களை யாரும் பார்க்கக்கூடாது, பார்த்தாலும் சிரிக்கக்கூடாது, அவனுடன் யாரும் பேசக்கூடாது என்று உத்திரவிட்டான். ஒரு நம்பிக்கையான வீரனை ஜெயிலராக்க நினைத்தான். ஒருநாள் மஜாரன் வெகு கம்பீரமாக "அர்த்தாங்கா!" என்று கூப்பிட்டான். வந்தான் அர்த்தாங்கன். இராமாயணத்திற்கு ஹனுமான் போல அக்கால பிரெஞ்சு சரித்திரத்திற்கு அர்த்தாங்கன் விளங்கினுன். பலே சூரன், சூரன் என்ருல் சூரன் சூரன்! எத்தன் என்ருல் எத்தன்! அவனை யாரும் ஏமாற்ற முடியாது. அவன் பிடித்ததைச்

சாதித்தே தீருவான். அவனிடம் நம்பிக்கையுள்ள வீரப் புலிகள் ஆயிரக்கணக்கானபேர். அவர்களுக்கென்று தனியான பேச்சு ஜாடைகள் உண்டு. அர்த்தாங்கன் அரசாங்கப் படையில் ஒரு வீரன்தான். என்றாலும் அவன் தனது மனச்சாட்சிக்கே உண்மையான வீரன். கடவுளே அநியாயம் செய்தாலும் அவன் பொறுக்கமாட்டான். அர்த்தாங்கன் மஜாரனின் உடற்காப்பாளனாக இருந்தான்.

அரண்மனை இரகசியம், ராணி—மஜாரன் போக்கு வரத்துக்கள் எல்லாம் அவனுக்கு நன்றாகத் தெரியும். கொண்டாவிடம் அர்த்தாங்கனுக்கு உயிர். ஏனென்றால் கொண்டா பொது ஜனங்களின் நண்பன்; தன்னைப் போன்ற ஏழைகளின் தோழன். அர்த்தாங்கன் செய்த அபாரமான வீரச் செயல்களைப்பற்றிப் பல கதைகள் உள்ளன.

இப்போது அர்த்தாங்கன் மஜாரன் முன் நிற்கிறான்.

மஜாரன் : அர்த்தாங்கா, நமது அருமை வீரனே!

அர்த்தாங்கன் : ஏன்? என்ன விசேஷம்? எசமான், ஏன் அழறீங்க?

மஜாரன் : எனது உயிரைக் காக்கும் வீரனல்லவா நீ?

அர்த்தாங்கன் : நான் எப்போதும் எனது நாட்டைக் காக்கும் வீரனே.

மஜாரன் : உன்னால் ஒரு உபகாரம் நடக்கவேண்டும்.

அர்த்தாங்கன் : நியாய விரோதமில்லாத எந்த வேலையும் செய்யத் தயார்.

மஜாரன் : இந்தக் கொண்டாவிற்கு ஏற்ற ஒரு காவலாளி வேண்டும். நம்பிக்கையுள்ளவன், உறுதியுள்ளவனாக இருக்கவேண்டும். அவன் ஒரு பெரிய கோமாளி.

அவன் வேடிக்கைக் கெல்லாம் மசியாதவனுக இருக்க வேண்டும்.

**அர்த்தாங்கன்:** இவ்வளவுதானே! அதற்கேற்ற ஆளை இதோ தருகிறேன்,

என்று சொல்லிவிட்டு வெளியே சென்ருன். சற்று நேரத்தில் ஒரு ஆளுடன் திரும்பினன்.

வந்தவன் பெயர் **கிர்மாடன்.** பரம திக்குவாயன். "ஆம்" என்று சொல்லுவதற்குக் குறைந்தது ஒரு டஜன் "ஆ"வாவது பீடிகை போட்டால்தான் "ம்" தொடரும். இல்லாவிட்டால் திறந்த வாய் திறந்தபடியிருக்கும், சப்தம் மாத்திரம் வராது.

அவனையே சரியான ஆளென்று தீர்மானித்து நியமித்துவிட்டான் மஜாரன். மாதச் சம்பளம் நூறு பிராங்.

கிர்மாடன் அர்த்தாங்கனின் பரமசிஷ்யன். அவனுக்கு ஜோடியாக இன்னொரு ஆளையும் காவலுக்கு அனுப்பினன் அர்த்தாங்கன். இருவருமாகக் கொண்டாவுக்குக் காவல் காத்தனர்.

கிர்மாடன் ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை. கொண்டாவின் தமாஷ்கள் அவனிடம் கொஞ்சம் கூடப் பலிக்கவில்லை. சிறையில் கிர்மாடனை எல்லோரும் ஊமை என்றுதான் அழைப்பார்கள். அவ்வளவு கடுமையான மௌனத்துடன் காவல் செய்தான்.

கொண்டாவின் கொட்டம் அடங்கிவிட்டது. கிர்மாடனின் காவல் உறுதி, கொண்டாவை கட்டிப் போட்ட கன்ருக ஆக்கிவிட்டதோ என்று தோன்றியது. அதையெல்லாம் கேள்விப்பட்ட மஜாரனுக்குப் பரம சந்தோஷம். முதல் மாதம் இப்படிக் கழிந்தது.

அடுத்த மாதம் கொண்டாவை, சிறையில் வேறொரு விசாலமான பகுதியில் வைத்தான் மஜாரன். ஆனால் அங்கும் கிர்மாடன் தான் காவல். அதற்காக கொண்டா கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் கிர்மாடன் அடிக்கடி கண்ணாலும், கைச் சாடையாலும், அபினயங்களாலும் ஏராளமாகப் பேசுவான். அந்தப் பேச்சில்லாப் பேச்சைக் கொண்டா தான் அறிவான். இப்படி நான்கு மாதங்கள் ஆனதும் கொண்டா ஒழுங்கிற்கு வந்து விட்டதாகக் கருதி, மஜாரன் அவனுக்கு ஜெயிலுக்குள்ளேயே போதிய சுதந்திரம் அளித்தான். கிர்மாடன் கொண்டாவைக் காக்குமட்டும் மஜாரனுக்குக் கவலையில்லை. ஆனால் மற்றக் காவலரும் ஒற்றரும் கிர்மாடனைக் கவனிப்பர். கிர்மாடனைக் காப்பவன் விழித்த பேர்வழி; மஜாரதாஸன். அவனே கொண்டாவுக்கு அருகிலுள்ள ஓட்டலில் உணவு வாங்கி வருபவன். அவனுக்கு "ஷாம்பைன்" என்னும் திராக்ஷை ரஸத்தின் மேல் உயிர்.

இன்று கொண்டாவும் கிர்மாடனும் கண்ணுக்குக் கண் பேசுகின்றனர். மாலை ஆறு மணிக்குக் கொண்டா வழக்கம்போலப் பந்தாடினான். அன்று, பந்து சிறைச் சாலைச் சுவரண்டையே போய் விழுந்தது. கிர்மாடன் அதை அங்கிருந்து உள்ளே ஏற்றிக்கொண்டிருந்தான். ஒரு முறை கொண்டா சிறைச் சுவருக்கருகே போய் சுவருக்கப்பால் விர்ரென்று மேலேறி விழும்படி பந்தை உயர எற்றினான். அதை யெடுக்கச் சுவரேறும்போது கிர்மாடன் பற்றிக் கீழே யிழுத்துவிட்டுத் தான் ஏறி, பத்து நிமிஷம் தாமதமாகப் பந்தை எடுத்துக்கொண்டு கொண்டாவுடன் நேராகச் சிறைச்சாலைக்குள் ஓடினான்.

அச்சமயம் மற்றொரு காவற்காரன் சாப்பாடு கொண்டுவரச் சென்றான். கிர்மாடன் தான் கொண்டுவந்த

பந்தைப் பிரித்து உள்ளிருந்து ஒரு கடிதம் எடுத்துத் தந்தான். கொண்டா அக்கடிதத்தைப் படித்தான்.

"புகம: மாலை 6-மணி; எல்லாம் தயார்" அர்த்தாங்கன் கையெழுத்தைக் கொண்டா கண்டு மகிழ்ந்தான். சுவருக்கப்புறம் அன்று அர்த்தாங்கனே மாறுவேடம் போட்டுக் கொண்டு நின்றான். தான் வருவதாக அறிவிக்கவே, கிர்மாடன் பந்தைச் சுவருக்கப்பால் எற்றும்படி கொண்டாவுக்குச் சாடை காட்டினான்.

கொண்டாவுக்குச் சாப்பாடு தயாரிக்கும் ஓட்டலில் இன்னொரு புதிய வேலைக்காரன் வந்து சேர்ந்தான். அவன் கொண்டாவுக்குப் புது வகையான ரொட்டி செய்தான். அந்த ரொட்டி சுமார் ஓரடி நீளம் நாலங்குல அகலமிருக்கும். அந்த ரொட்டியுடன் மூன்று ஷாம்பைன் புட்டிகளும் இன்னும் பலவகைப் பலகாரங்களும் தயாரித்து, ஒரு அழகான பெட்டியில் வைத்து சிறைச் சேவகனிடம் அனுப்பினான். சிறைச் சேவகன் பெட்டியை நன்கு சோதித்த பிறகு கொண்டாவிற்கு அதைக்கொண்டு போனான்.

சாப்பாடு வந்தவுடன் கொண்டா சாப்பிட உட்காரவில்லை. அதைக் கொண்டுவந்த காவலாளியிடம் பேச்சுக் கொடுத்தான்: "இன்று எனக்குப் பசியேயில்லை" என்று ஆரம்பித்தான். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவனுடைய க்ஷேமலாபங்களைப்பற்றிக் கேட்டான். கடைசியாக அந்த ஏழைச் சிப்பாயின் கஷ்டங்களுக்காக ரொம்ப அனுதாபப்பட்டு "அடடா! உன்னைப்போன்ற ஏழைகள் குளிருக்குத் துணிகூடச் சரியாக வாங்கமுடியாதல்லவா?" என்று கவலையோடு சொன்னான். கொண்டா, கடைசியாக ரொம்ப தரித்திரமாகப் பேசி அந்தக் காவலாளிக்குத் தன் உடைகளைத் தானமாகக் கொடுத்து

அவற்றை உடனே அணிந்துகொள்ளச் செய்தான். காவலாளியின் பழைய உடைகளைக் கழற்றிக் கட்டித் தன் அறையில் வைக்கச் சொன்னான்.

பிறகு, தனக்கு உடம்பு சரியில்லையென்றும், ஆகையால் ஷாம்பைன் புட்டிகளை அவனே எடுத்துக் கொள்ளலாமென்றும் சொன்னான். காவலாளியின் சந்தோஷத்திற்குக் கேட்கவேண்டுமா? ஆவலுடன் இரண்டு புட்டிகளை மண்டினான். அதுதான் சமயமென்று கொண்டா ரொட்டியைப் பிட்டான். அதில் முழநீளம் வாள், பள பள வென்றிருந்தது. அதைக் கையில் உறுதியாகப் பிடித்துக்கொண்டான். காவற்காரன் உடையைத் தான் போட்டுக்கொண்டான். சிறைக் கதவைத் திறந்தான். அச்சமயம் காவற்காரன் கொண்டாவை எதிர்த்தான். அவனை ஒரு தள்ளுத் தள்ளி "உன்னைக் குத்தி விடுவேன் வாளால்; பேசாமல் விழுந்துகிட" என்று மிரட்டிக் கதவைத் திறந்துகொண்டு பளிச்சென்று வெளியே தாவிக்குதித்து மறைந்தான் கொண்டா. காவற்காரன் குடி மயக்கத்தில் "அரெ ரெ ரெ ரெ..." என்று உளறினான்.

சிறைச் சுவரில் ஓர் ஏணி யிருந்தது. அதில் ஏறினான் கொண்டா. ஏறியதும் ஏணியைக் கயிற்றால் வெளிப்புறம் இழுத்துக்கொண்டு போனான் ஒருவன். கொண்டா சுவரேறிக் கீழே குதித்ததும், ஆங்கொரு குதிரை தயாராயிருந்தது. அதில் ஏறி ஒரு பர்லாங் சென்றதும் ஒருபடை தயாராயிருந்தது.

கொண்டாவை இவ்வாறு தப்புவித்து, கிர்மாடன் சிறைக்குள் வந்தான். அங்கே காவற்காரன் குடி வெறியில் உளறிக்கொண்டிருந்தான். அவன் கையைப் பின்னால் பிடித்துக்கட்டி, வாயில் ஒரு பெரிய ரொட்டித்துண்டை

அடைத்துவிட்டுச் சிறைவாசலில் வெகு உஷாராக நின்ருன் ஊமை. சிறையை மேற்பார்க்கும் உத்தியோகஸ்தன் இரவு எட்டு மணிக்கு வந்தான். கிர்மாடன் அவனுக்குத் தாழ்ந்து சலாம் போட்டான்.

உத்தியோகஸ்தன்: ஆள் பத்திரமாயிருக்கிருரா?

ஊமை: குகுகுகுகுடி வெவெவெவெவெறி.........

உத்தியோகஸ்தன்: உஷாராயிரு..............

ஊமை: சிசிசிசிறை புபுபுபூட்டி.........

உத்தியோகஸ்தன்: போதும் உன் பிரசங்கம். ஆள் கவனம்.

ஊமை: பெபெபெபெ பேசமுடியுமா?............

உத்தியோகஸ்தன்: போதும் பெபெபெ.........

உத்தியோகஸ்தன் சிறையை எட்டிப்பார்த்தான். அங்கே கொண்டாவைப்போலச் சட்டைபோட்டு ஆள் குடிவெறியில் மயங்கிக்கிடந்தான். 'அவனே கொண்டா' என்றெண்ணிச் சென்ருன் உத்தியோகஸ்தன்.

நடுஇரவு மணி யடித்தது; கிர்மாடன் காவல் காக்கும் நேரம் அத்துடன் தீர்ந்தது. ஊமை சுவரில் ஏதோ எழுதினன்; உடனே ஓடிச்சென்று புற மதிலுக்கருகே நின்ருன். வெளியே "உஷ்ஷ்!" என்று சீழ்க்கை கேட்டது. உடனே உடும்பு மாதிரி சுவரேறிக் கீழே யிறங்கியதும் அங்கொரு குதிரை யிருந்தது; அதில் ஏறிச் சிறிது தூரம் சென்றதும், "நேராகப் போவோம்" என்ருருவன் சொல்லி அருகே வந்தான். யாரது? அர்த்தாங்கனே!

ஊமையும் அர்த்தாங்கனும் சேர்ந்து கொண்டாவை இவ்வாறு விடுவித்தனர். ஓட்டலிற் புகுந்து புதிய ரொட்டி செய்து உள்ளே வாளை வைத்தனுப்பியது யார்? அர்த்தாங்கனே.

அன்றிரவே கொண்டா பெரும் படைதிரட்டிக் 'கௌவாங்கல் போரை'த் தொடங்கினான். கல்லுடன் குண்டும் சேர்ந்தது.

"கொண்டா எப்படிச் சிறை தப்பினான்; பிடி அந்த கிர்மாடனை; அவ்வளவு அஜாக்கிரதையாயிருந்த அவன் முழியை வாங்கு" என்று சீறி மஜாரன் சிறைக்கு வந்தான். கொண்டாவின் அறை வெளியே பூட்டப் பெற்றிருந்தது. **நாட்டை விட்டுப்போடா, இத்தாலிய மூடா!"** என்று அங்கே எழுதியிருந்தது. மஜாரன் ஊழிக்கனல் போலக் கொதித்தான். உள்ளே எட்டிப்பார்த்தான். "அதோ இருக்கிறானே கொண்டா" என்றான். சிறையைத் திறந்து உள்ளே சென்றான். பார்த்ததென்ன? கொண்டா சட்டையைப் போட்டுக்கொண்ட காவற்காரன் பேந்தப் பேந்த முழித்தான். வாயிலே தொண்டைமட்டும் ஒரு பெரிய ரொட்டி அடைத்திருந்தது.

**மஜாரன்:** எங்கே ஊமை?

**காவற்காரன்:** உஉஉ......... ("முழநீளம்") என்று கையைக்காட்டினான். சேவகன் சட்டையை யவிழ்த்தான்; வாயிலுள்ள ரொட்டி விலக்கப்பட்டது. கொண்டா சிறை தப்பியவிதத்தைச் சேவகன் சொன்னான்.

**மஜாரன்:** ஊமை எங்கே?

**காவற்காரன்:** தெரியாது.

யாருக்கும் தெரியாது. அதோ கோண்டாவின் பக்கத்தில் இருந்துகொண்டு எதிரிகள்மீது 'விர்விர்' என்று கல் வீசுகிறானே அவனே ஊமை. கௌவாங்கல் கலகம், அன்று ஊரைக்கலக்கியது. மஜாரன் உயிர் துடித்துக் கொண்டிருந்தது. அப்போது அர்த்தாங்கன் ஒரு கடிதம் கொண்டுவந்தான். அதை ஆவலாகப் படித்தான் மஜாரன்:

இத்தாலியிலிருந்து வந்த மஜாரன் இத்தாலிக்கே போக வேண்டியது. பிரான்ஸை நிர்வகிக்கச் சுதேசிகள் உள்ளோம். அவரவர் தாய் நாட்டை அவரவர் நிர்வகிப்பதே இயல்பு; எம் வீட்டு நலம் எம்மவருக்கே உரியது. மஜாரரே! உமது வீட்டைப் பார்க்கச் செல்லும். மாந்தார்க் கைப்பெற்ற பிரெஞ்சுச் சமூகம் ஒரு நல்ல பிரெஞ்சு மந்திரியைத் தேர்ந்தெடுக்கும். பிரான்ஸ் பிரெஞ்சுக்காரருக்கே.''

பொதுஜனம்.

## 11. சுதந்தரத் திருநாள்

வெற்றி எட்டுத் திக்கும் எட்ட, முரசு கொட்டுகிறது. "வந்தேமாதரம்"; "ஜெய்ஹிந்" என்னும் முழக்கம் வானைப் பிளக்கிறது. சின்னஞ்சிறு குழந்தைகள்கூட "விடுதலை விடுதலை விடுதலை"—என்று பாடிக் கூத்தாடுகின்றன. அழகிய நீல நிறத்தில் அசோகச் சக்கரம் பொலியும் மூவர்ணக் கொடிகள் வீடுதோறும் பறக்கின்றன. மஹாத்மாவை நவ இந்திய மஹாகுருவாகவும் ரக்ஷகராகவும் நாடு வணங்குகிறது. ஊர்தோறும் கூட்டமாகப் பஜனை செய்கிறார்கள்; சபை கூடுகிறார்கள். கவிகள் 1847 முதல் 1947 வரையில், ஒரு நூற்றாண்டு இந்தியா புரிந்த சுதந்தரப்போரை வர்ணிக்கின்றனர்; நானாசாகெபு, தாந்தியாதொபே, லக்ஷ்மீபாய், குமாரஸிங், அஹமத் மௌல்வி, அஸிமூல்லாகான், தாதாபாய், திலகர், அரவிந்தர், லாலாஜி, வ. வே. சு. ஐயர், பாரதியார், சிதம்பரனார், மஹாத்மாஜி, ராஜாஜி, நேரு, தாஸ், ராஜன்பாபு போன்ற தலைவர்கள் செய்த தியாகத்தை வர்ணிக்கின்றனர். வீரர் படங்களுக்கு மாலைபோட்டு வணங்குகின்றனர். நாடெங்கும் இப்படி நடக்கையில் டில்லியைப்பற்றிச் சொல்ல வேண்டுமா?

புது டில்லி மின்சார வெள்ளத்தில் நட்சத்திரவனம் போலப் பொலிகிறது. ஜார்ஜ் மன்னரின் மகுடாபிஷேகத்தின் போதுகூட இவ்வளவு சிறப்பில்லை; ஸர்தார் பலதேவ் சிங் இராணுவத்தை அணிவகுத்துக் கம்பீரமாக நடத்துகிறார். சுதேச சேனையும் சக்கரக்கொடி பிடித்து வீரச் செருக்குடன் நடக்கிறது.

சிங்க நாத கர்ஜனையுடன்—ஜே ஜே
'ஜே ஹிந்த்' தென்ன வீரர் முன்செல்வோம்
சங்கநாத பேரிகொட்டியே—ஹே ஹே
சத்தியச் சமரை வெல்லுவோம்.

என்று இராணுவ வீரர் கடல்போலக் கர்ஜிக்கின்றனர்.

தேசத்திற்காக சர்வத்யாகம் செய்த சத்தியாக்கிரகத் தொண்டர் அணியணியாகக் கொடிபிடித்துப் பாடி வருகின்றனர்:

அன்னியர் நம் அன்னை நாட்டினை
அடிமையாக்க முடியுமோ இனி?
தன்னுறுதி கொண்டு நின்றனம்—பந்தத்
தளையறுத்துத் தலைநிமிர்ந்தனம்.

எல்லோருமே ஒரு மஹாத்மாவை நினைக்கிறார்கள்; வாயார வாழ்த்துகிறார்கள்:

வாழிய காந்தி மஹாத்மா—நீடு
வாழிய வான்கடல் வையமும்போலே

என்று நாற்பதுகோடிக் குரல்கள் பாடுகின்றன. "இன்று சுதந்தர இந்தியாவில் காந்தி ஸஹாப்தம் தொடங்குகிறது. நமது இந்தியா நீடுழி வாழக் கடவுள் வணக்கம் செய்யுங்கள்" என்று தியாகத் தொண்டர் தெருத் தெருவாகப் பஜனையுடன் செல்கின்றனர். கடவுளுக்கு அடுத்தபடி காந்தி—என்கின்றனர் சிலர்; சிலர் காந்திக்கு முடிசூட்டி அரியணையில் வைக்கவேண்டும் என்று துடியாய்த் துடிக்கின்றனர்.

மஹாத்மா எங்கிருக்கிறார்? இதோ ஓர் அலங்கார மோட்டார் புறப்படுகிறது; அதில் பத்துத் தீரர்களைக் காண்கிறோம்; முன்னே பலதேவ சிங் அமர்ந்து சக்கரத்தைத் திருகுகிறார். அவருக்குப் பின்னே

ஜவஹர்லால் கம்பீரமாக விளங்குகிருர். அவருக்கு வலது புறம் ராஜாஜி, இடதுபுறம் ராஜன் பாபு; ராஜாஜிக்கு அடுத்து அபுல்கலாம் அஜாது, பின்னல் ஜான் மத்தாய், பாபா, ஜகஜீவன் ராம் அமர்ந்திருக்கிருர்கள். மோட்டார் மலர்களாலும், தேசீயக் கொடிகளாலும், பல நிற விளக்கு களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது; அதற்குப் பின்னல் பல கார்கள் ஊறுகின்றன, அவற்றில் மாகாண முதன் மந்திரிகளும், நாட்டுத் தலைவர்களும் செல்கின்றனர். இரு புடையிலும் லாரிகளில் சுதேசச் சிப்பாய்கள் துப்பாக்கி யேந்திப் பாதுகாவலுக்காகச் செல்கிருர்கள். இந்த அலங் காரப் பவனி வானளாவிய அரசியல் மாளிகையினின்று, குடில்கள் நிரம்பிய பங்கிச் சேரிக்குப் போகிறது. அங்கென்ன?

அங்கேதான் இந்திய ரக்ஷகரான மஹாத்மா வீற்றி ருக்கிருர். இந்தியா, மஹாத்மாவை முடிசூட்டி வைசிராய் மாளிகையில் வைத்து வணங்கத் தயாராயிருக்கிறது; இந்திய விடுதலைக்கே வாழ்வைப் பலி தானமாக்கிய மஹாத்மாவோ பங்கிக் குடிலில் வசிக்கிருர்.

நேருவை முன்னிட்டு எல்லாத் தலைவர்களும் வந்து மஹாத்மாவை வணங்குகின்றனர். மஹாத்மா இறை வனையே வணங்கச் சொல்லி எழுந்து நிற்கிருர். "மஹாத்மா காந்திகி ஜே!" "வந்தேமாதரம்" "ஜே ஹிந்த்" என்ற கோஷம் வானைப் பிளக்கிறது. வால்மீகி மந்திரத்தின் முன்னே பெரிய கூட்டம்; மஹாத்மாவின் பிரார்த்தனைப் பிரசங்கம் கேட்க ஜனசமுத்திரம் ஆவலாகக் கூடியிருக்கிறது.

விடுதலை வீரர் தொடர மஹாத்மா மேடையேறினர்- ஜய கோஷங்கள் வானைப் பிளந்தன. சுமார் ஆயிரம் குரல்கள் "வந்தேமாதரம்" பாடின. பிறகு ஸ்ரீ ராமநாம பஜனை நடந்தது. மஹாத்மாவின் முன்னே மாலைகளும் பரிசுகளும் குவிந்தன: மஹாத்மா பிரார்த்தனைப் பிரசங் கத்தைச் சுருக்கமாக முடித்தார்.

"இன்று சுதந்தர இந்தியா உதயமாகிறது. இனி இந்தியா தன்னைப் பலப்படுத்திக்கொண்டு உலகில் தன் கடைமையைச் செய்யப்போகிறது. இன்று நாடெல்லாம் கொண்டாட்டமும் குதூகலமுமாயிருக்கிறது. தேசிய கீதங்கள் முழங்குகின்றன. ஆனால் கீதத்துடன் நாம் நிற்கக்கூடாது. இன்று கொண்டாட்டமே; நாளை? சுதந்தர இந்தியா இன்றுதான் பிறந்தது; அதை ஊட்டி வளர்த்து ஆளாக்க வேண்டும்; முதலில் நமக்குள் ஒற்றுமை வேண்டும்; இந்தியா இப்போது இரண்டுபட்டுள்ளது; ஆனால் ஒரு நாள் ஐக்கிய இந்தியா உதயமாகும்; அன்பினால் உதயமாகும்.

சென்ற நாட்களை நினைத்தால் எத்தனையோ தியாக வீரர் முன்னே நிற்கிறார்கள். 1857-ல் வாள் பிடித்து விடுதலை அடைய இந்தியா முயன்றது. பலாத்காரம் பலிக்கவில்லை. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு திலகர் எழுந்தார். மனவுறுதியாலும் வினைத்திறனாலும் சுதேசக் கிளர்ச்சியை நடத்தினார். தாதா பாய் சுயராஜ்ய முழக்கம் செய்தார். தென்னாப்பிரிக்காவில் கடவுள் எனக்கு ஒரு புதுவழி காட்டினார்-சத்தியாக்கிரக வழி, தியாக வழி; அதை நான் முதன் முதல் கைராரிலும் சம்பரானிலும் சோதித்தேன். இதுதான் இந்தியாவுக்குச் சரியான வழி என்று தோன்றியது. கடவுள் மேன்மேலும் வழிகாட்டினார். ஜாலியன்வாலா படுகொலை, நாட்டின் உணர்ச்சியைக் கிளப்பியது; அந்த உணர்ச்சியில் ஒத்துழையாமை இயக்கம் வெடித்தெழுந்தது. 1920-முதல் அது நாட்டைத் தியாக வழியில் நடந்து முன்னேறச் செய்தது. சிறையும் தடியடியும் பட்டு, சத்தியாக்கிரக வீரர் பொறுமையும், உண்மையும், அஞ்சா நெஞ்சமுங்கொண்டு நம்பிக்கையுடன் முன் சென்று, இன்று சுதந்தரக் கோட்டை

யுள் நுழைந்துவிட்டனர். நேற்று வரையில் நம் உரிமையை நலித்து நம்மை அடக்கியாண்ட இந்த டில்லி அரசாங்கம் இன்று நமது கையில் உள்ளது. இந்தியாவில் பெரும்பகுதி நமது ஆட்சியில் உள்ளது. இப்பகுதியைச் சம உரிமை ரீதியில் ஜனநாயக சக்தியால், நாம் நிர்வகிப்போம். நமது நாட்டை வலுவாக்கியதும் உலகிற்கு நாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்வோம். கடவுளை நம்புங்கள். அவனருளால் இன்று விடுதலை பெற்றோம். டில்லிச் செங்கோட்டையில் சென்ற ஆண்டு ஆங்கிலக்கொடி பறந்தது. இன்று நமது சக்கரக்கொடி பறக்கிறது—சுதந்தரக்கொடி பறக்கிறது. எனது விரதம் முடிந்தது.''

ஒரு நிமிஷம் நிசப்தம்; உணர்ச்சி மிகுதியால் யாரும் பேசமுடியவில்லை. அந்த மௌன அமைதியில் ஒரு கம்பிரமான குரல் கேட்டது:

"எனது விரதமும் முடிந்தது." எல்லாரும் குரல் வந்த இடத்தைத் திரும்பிப்பார்த்தனர், மஹாத்மாவும் ஜவஹரும் பார்த்தனர்—ஜவஹர், "யார் பேசுவது?"—என்றார்.

"நானே" என்றொரு சாமியார் முன்வந்தார். அவரைக் கண்டதும் ஜவஹருக்கு ஏதோ நினைப்பு வந்தது.........

**ஜவஹர்:** மஹாராஜ், தாங்கள் யார்......?

**சாமியார்:** நான் யார் என்பதைப் பிறகு அறிவீர்கள். எனக்குப் பத்து நிமிஷம் பேச உரிமை தருவீர்களா?

**மஹாத்மா:** ஆஹா பேசுங்கள்.........

சாமியார் மைக்கின்முன் கம்பிரமாக நின்றார்—தாடியை ஒரு தரம் உருவி விட்டுக்கொண்டார். பிறகு

"ஜெய் ஹிந்த்" என்று மெல்லக் கண்ட சுத்தி செய்து கொண்டார்—பிறகு கர்ஜனை :

"என்னுயிர் போன்ற ஹிந்து சமுதாயமே, இந்துசமுதாய உத்தாரகனான மஹாத்மாவே—வணக்கம். என் இரத்தத்தில் சிவாஜியும், குரு கோவிந்தனும், பிரதாபசிங்கனும், நாஞசாஹெபும், துடிக்கின்றனர். நான், 1857-முதல் 1920 வரையில் நமது தேசம் அடிமைத் தீயில் புழுவாய்த் துடித்த பரிதாபத்தை அறிந்தேன்; என் பட்டம் பதவிகளைத் தூர எறிந்தேன். அப்போதுதான் சித்தரஞ்சன தாஸர் போன்ற செல்வர் சர்வத்யாகம் செய்து தேச சேவையில் முனைந்தனர்—காந்தி மஹானே! சேனை பலமில்லாமல் பரிதாப நிலையிலிருந்த இந்த நாட்டிற்குச் சமய சஞ்ஜீவியாக சத்யாக்கிரக வழிகாட்டினீர்—அதே வழியிற் சென்று, வாலிபத்தையெல்லாம் சிறையிற் போக்கியவருள் நான் ஒருவன். அக்காலம் இங்கிலாந்து "இதோ, அதோ" என்று நம்மை ஏமாற்றியது. வட்டமேஜை மகாநாடு முட்டையாக முடிந்தது அதன் பிறகு நாடு சிறைக்கூடமானது. காந்தி நேரு முதல் அடியேன் உள்பட எல்லாரும் சிறையிலிருந்தோம். அப்போதுதான் எனக்குப் புதிய யோசனை தோன்றியது.

ஐரோப்பாவில் போர் மூண்டது. கிழக்கே ஜப்பான் முன்னேறி மலேயா, ஜாவா, பர்மா, முதலிய இடங்களிலெல்லாம் கொடிநாட்டி, வெள்ளையரை விரட்டி யடித்தது. இது எனக்கொரு புது எழுச்சியைத் தந்தது. உடனே அசல் பக்கிரியாகக் கிளம்பி, கைபர் கணவாயைத் தாண்டினேன். காபூல் சென்றேன். அங்கிருந்து ஜெர்மனி சேர்ந்தேன். ஹிட்லரிடம் சேனை பலம் பெற்றேன். ஜப்பானின் வாக்குறுதியைப் பெற்று, நீர்மூழ்கியில் சிங்கப்பூர் சென்

றேன். அங்கே எனது நண்பன் ரசவிஹாரிகோஷுடன் இந்திய சுதந்தர ராணுவம் சேர்த்து பர்மாவில் ஊன்றிக்கொண்டேன். அந்தமானில் சுதந்தரக் கொடி நட்டேன். உடனே இம்பாலை முற்றுகையிட்டு, எனது தாய்நிலத்தை முத்தமிட்டேன்; அப்போது எனக்கிருந்த இன்பம், அடடா! என் சேனையை "டில்லி சலோ" என்று ஏவினேன். டில்லி செங்கோட்டையில் தேசியக் கொடியேற்றக் கனவு கண்டேன், விரதம் பூண்டேன்.

ஜப்பான் ஆங்கிலேயருக்குச் சரணடைந்ததும் என்னைத் தேடினர். நான் விமானத்தில் சென்றவரையில் உலகம் அறியும்.

நான் மறுபடியும் மறைந்து மறைந்து திபேத்திற்கு வந்து லாமாக்கள் உதவியால் இமாலயத்தில் கைலாசம் வரையிற் சென்று அங்கே சில துறவிகளுடன் தவம்புரிந்தேன்-எதற்கு?

டில்லியில் தேசக்கொடி பறக்கவேண்டும் என்பதற்கே. முதலில் என் வீரர், கைதிகளாக டில்லி செங்கோட்டை சேர்ந்தனர். இந்திய ஆட்சி நேரு பார்வையில் வந்ததும் எல்லாரும் விடுதலைபெற்று, சுதந்தர சேனையாகச் சேர்ந்தனர்.

இன்று என் மனோரதம் நிறைவேறிவிட்டது. டில்லியில் தேசக்கொடி பறக்கிறது....................
"ஜேஹிந்த்! ஜேஹிந்த்"

இதற்குள் ஜனங்கள் "நேதாஜி வாழ்க!" "சுபாஷ் மன்னன் வாழ்க" என்று ஆரவாரம் செய்தனர். நேரு "ஆ நண்பா, நீ உயிரோடிருக்கிறாயா? நீ இனிக் காஷாயம் கட்டத்தேவையில்லை. சுபாஷ்போஸாகவே இருக்கலாம்" என்று தழுவிக்கொண்டார். சாமியார் உடனே காஷாய

ஜிப்பாவைக்கழற்றி யெறிந்தார்; முண்டாசை எடுத்தெறிந்தார். அசல் சுபாஷ், "ஜேஹிந்த்" என்றெரு கர்ஜனையுடன் வாளை உருவினர்; மஹாத்மாவின் திருவடியில் வைத்தார்—

"மஹாத்மாவே என் கத்தியன்று, தங்கள் தியாக சக்தியே இந்தியாவை விடுதலை செய்தது. என் விரதம் முடிந்தது; விடைபெற்றுக்கொள்கிறேன்" என்றார்.

நேரு "நண்பா, விரா, இரு நீ; சுதந்தர இந்தியாவின் சேனாதிபதியாயிரு" என்றார்.

"நான் இருக்கிறேன்—நான் ஒவ்வொரு இந்தியன் உள்ளத்திலும் வீரத்துடிப்பா யிருக்கிறேன். ஒவ்வொரு இந்தியக் குரலிலும் "ஜேஹிந்த்" என்று கர்ஜிக்கிறேன்.

நண்பா, நான் இந்த ஒருடலில் இல்லை; நாற்பது கோடி உடல்களில் இருக்கிறேன். எனக்கு மற்றொரு வேலை உள்ளது. துண்டுபட்ட இந்தியா ஒன்றாக, ஒரே இந்தியாவை நாட்ட வேண்டும். ஆசியர் முழுதுமே இன்னும் அன்னிய மோகம் கலந்துள்ளது. ஆசிய ஜோதியைத் தூண்டி "ஆசியா, ஆசியருக்கே" என்றாக்க வேண்டும்; இதுவே என் அடுத்தவேலை. ஜேஹிந்த், ஜே ஆசியஜோதி."

நேரு "நண்பா, இரு, இரு" என்று மன்றாடிப் பின் சென்றார்; கட்டிப்பிடித்தார். ஆச்சரியம்—நேதாஜி திடீரென மறைந்தார்!" நானே வீர பாரதத்தின் ஆவி! நானே சுபாஷின் ஆத்மா. ஒவ்வோர் உள்ளத்திலும் நான் வீரத்துடிப்பாவேன். இனி இந்தியாவை எந்த அன்னியரும் அடிமை செய்யாது பாதுகாப்பேன். ஜேஹிந்த்" என்றொரு ஆகாசவாணி கேட்டது!

## 12. கல்யாணி நடராஜன்

மல்லிகைப் பூமணக்கும்—வசந்த
மாலைப் பொழுதினிலே
அல்லியின் புன்னகையில்—என்
ஆசை தவழுதம்மா......
ஆதவன் சென்றுவிட்டான்—என்
அன்பு மனங்குளிரக்
காதலனைக் கோணர்வான்—என்
கனவு பலித்திடுமே.

கல்யாணி இப்படியே பாடிக்கொண்டு ரோஜாச் செடிகளுக்கும் மல்லிகைப் புதர்களுக்கும் தண்ணீர் விடுகிருள். "நான் ரோஜா, நீ மல்லிகை" என்று அவர் சொல்லிச் சென்றது இன்னும் அவள் காதில் ஒலிக்கிறது. 'என் ராஜா' என்று ரோஜா மலர்களைக் கொஞ்சுகிருள், அந்தி மாலையில் நட்சத்திரமணிகள் மின்னுகின்றன...காலதேவி அந்த மணிகளை உருட்டி ஜபம் செய்வதுபோலிருக்கிறது. செவ்வானத்தின் அழகெல்லாம் வனதேவதைபோல உலாவும் கல்யாணியின் முகத்தில் 'டால்' அடிக்கின்றன. நல்ல கதர்ப் புடவை, சிவப்பு ரவிக்கை, ரோஜாமுகம், முல்லை நகை, அல்லிக் கண், தாமரைக் கை—எல்லாம் சாமுத்ரிகா லக்ஷணப்படி சேர்ந்த அழகி கலயாணி. அவள் இன்னிசைக்குத் தென்றலும் பின்பாட்டுப் பாடுகிறது.

நெஞ்சக் கனவினிலே—அவர்
நேசக் கரங்கள் என்னைக்
கொஞ்சி யணைக்கையிலே—என்ன
குறை எனக்கினிமேல்......

இப்படிக் கல்யாணி பாட்டும் மலருமாயிருக்கும்போது, "ஐயையோ, ஐயையோ, அதிர்ஷ்டக்கட்டை. அட

தெய்வமே...........'' என்று அலறிக்கொண்டு வந்தாள். காமாக்ஷி.........

"வாடி உள்ளே......ஹே கல்யாணி, பூகம்பம் நம் குடியைக் கெடுத்ததடீ......வா."—சரசரவென்று காமாக்ஷி கல்யாணியைப் பிடித்து இழுத்துக்கொண்டு அதிவேகமாய் உள்ளே சென்ருள்.

## 2

உள்ளே சிவகடாக்ஷம் தீக்ஷிதர் பத்திரிகையில் இரத்தக் கண்ணீர் விடுகின்ருர். அஸ்ஸாம் பூகம்பம் என்ற தலைப்பில் விழுந்த இரத்தக் கண்ணீர் அந்தக் "காலம்' பூரா ஓடுகிறது. தீக்ஷிதர் ஞானியாதலால் மனத்திற் குள்ளேயே துக்கத்தை வைத்துக்கொண்டு, "ஹூம்! அவ்வளவுதான் மனித வாழ்க்கை......யார் நிலே? இந்த உடலும் ஒரு நாள் போக வேண்டியதுதானே. அதற்கு முன் நடராஜப் பெருமான் திருவடி அன்பிற்காக வாழ்வை அர்ப்பணிப்போம்'' என்ருர். இந்த வேதாந்தம் காமாக்ஷிக்குப் பிடிக்காமல் அடுக்களேப் பக்கம்போய்த் தன் துக்கத்தையெல்லாம் மாலே மாலேயாகச் சொல்லி யழுதாள்.

கல்யாணியைப் பெறச் சங்குவிரதம் இருந்தது. அரச மரம் சுற்றியது அவளேச் சீராட்டியது, தாலாட்டியது, பாராட்டியது, அலங்காரம் செய்தது, படிக்க வைத்தது, பாட்டுச் சொல்லி வைத்தது, தங்கமும் வெள்ளியும் பட்டும் ஜரிகையுமாகச் செலவிட்டு நடராஜனுக்குக் கொடுத்தது, அவனே கலெக்டருக்குப் படிக்க வைத்தது, சம்பந்திகள் படுத்திய பாடு, தான் பட்டபாடு—எல்லாம் சொல்லி ஒரு புராணமே பாடிவிட்டாள் காமாக்ஷி. கல்யாணிமட்டுமே சோகத்தையெல்லாம் வைராக்கியமாக மாற்றி, "அம்மா, கடவுள் கிருபையிருந்தால் பிரம்மபுத்ரா வெள்ளத்தில் அவர் ஏன் தப்பிப் பிழைத்திருக்கக்கூடாது? கௌஹதி

வெள்ளத்தில் சில உடல்கள் மிதந்து வந்தன என்பது தானே செய்தி......? நடராஜப் பெருமான் பேரில் பாரத்தைப்போட்டுவிட்டு, நாம் செய்யவேண்டியதைச் செய்வோம்'' என்ருள்.

வந்தாள் மாமி அமராவதி. ராஷ்பிஹாரி அவின்யூவே அதிரும்படி மார்பைப் புடைத்தலறிக்கொண்டு, ''அடி துடைகாலி, உன் ஜாதகந்தான் என் பிள்ளையைக் கொண்டுபோனது; உன் அம்மா வயிற்றெரிச்சலே பூகம்பமாகக் கிளம்பி அஸ்ஸாமை அழித்தது'' என்று கோபப் புயல் வீசியழுதாள். கல்கத்தா தமிழர் எல்லோருமே இந்தக் கடுஞ் சாவைக் கேட்டு அளவுகடந்து விசனித்தனர்.

கல்யாணியின் கணவன் நடராஜன் ஐ. ஸி. எஸ். ஒரு கலெக்டர். அவனுடைய பேச்சும், திறமையும், பொது நல் உணர்ச்சியும், காந்தி பக்தியும் அரசாங்கத்தாரின் மதிப்பைப் பெற்றன. ஆகவே மேலதிகாரி நடராஜனை அஸ்ஸாமுக்கு மாற்றினுர். அவன் அங்கே அகதிகளுக்குச் செய்த பெரிய உதவியும், இந்து முஸ்லிம் ஒற்றுமைக்குச் செய்த அன்புத் தொண்டும், உணவுப் பஞ்சம் தீர்த்ததும் அவரது பாராட்டைப் பெற்றன. அவர் அவனை அகதிகள் பிரச்னையைத் தீர்க்க ஒரு தலைவராக நியமிக்க விரும்பினுர். அதற்குள், 'வட அஸ்ஸாமில் பூகம்பம் கிளம்பி, மலைகளைத் தகர்த்தது; ஆறுகளை இங்கு விரட்டி அங்கு வெள்ளக் காடாக்கியது; ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலி வாங்கியது. ஆற்றோரத்தில் இருந்த கலெக்டர் ஆபீஸ் அப்படியே வெள்ளத்தில் கரைந்து போனது. நடராஜன் மறைந்தான்' என்பது பத்திரிகைச் செய்தி. இனி......?

3

'ஒரு பேரன் பிறந்து பாராமல் இப்படிக் கல்யாணி ஆனுளே' என்று காமாக்ஷி புலம்பினுள். ''கல்யாணி நடந்தது நடந்தது; நடப்பது நடக்கும். போனவன்

போனான். இனி இதற்கு நாம் என்ன செய்வது? இருப்பவர் இருக்கிறபடி இருந்தால் பிறகு சிவன் செயல்.

"நாளாக நாளாக நாளான மாயம்போய்
ஆளாதல் ஈசற்கென் றும்."

அதுதான் முடிவு. ஏதோ எனக்குக் கம்பெனி வேலை பார்த்த சொத்து இருக்கிறது. சாப்பாட்டுக்கு வரும். நான் மாப்பிள்ளையை இழந்து வருந்துகிறேன். எத்தனையோ ஆயிரம் பேர் தம் உறவினரை இழந்து அங்கே வருந்துகிறார்கள். அவர்கள் சேவையில் நம் துயரைக் கழிப்போம். ஜீவ சேவையே சிவ பூஜை. நடமாடுங் கோயில் ஊழியமே நமசிவாய ஜபம். புறப்படு கல்யாணி, பாட்டும் பஜனையும், தொண்டும் துறவும், தியாகமும் சாது சங்கமுமாக வாழ்வோம்" என்று தீட்சிதர் தூண்டினார். கல்யாணி, "அதுதான் அப்பா நல்லது" என்று வீணையுடன் எழுந்தாள். மாமியார் அமராவதி கோபப் புயலும் பொறாமை வெள்ளமுமாகப் பொங்கிச் சாபம் வைத்தாள். "அடி துக்கிரி, என் பிள்ளையை விழுங்கிய ராக்ஷஸி, நீ போன இடம் உருப்படாது. என் மானத்தைக் கெடுக்கவா வீட்டைவிட்டு கிளம்புகிறாய்? பேசாமல் மூலையிலே அடைந்து கிட. உன் வயிற்றுக்குப் பலகாரம் தொலைக்கிறேன்" என்றெல்லாம் பத்தாம் பசலி மாமூலை ஒட்டி அழுது தீர்த்தாள். இவளால் கல்யாணி பட்ட கொடுமையை என்னென்பது! கல்யாணி ஒரு நல்ல சந்தர்ப்பத்தையே எதிர்பார்த்திருந்தாள்.

வந்தார் நம் மாபெருந் தலைவர். இயற்கையின் பயங்கரத் திருவிளையாடல்களைக் காண வந்தார். பூகம்பத்தால் வருந்தும் அஸ்ஸாமிற்கு ஆறுதல் கொண்டுவந்தார். பாகிஸ்தானிற்கும் பாரதத்திற்கும் தாம் இயற்றிய ஒப்பந்தம் நிறைவேறுகிறதைப் பார்க்க வந்தார். கல்கத்தா முழுதும் மலர் மாரி சொரிந்து அவரை வரவேற்றது.

மாபெரும் கூட்டம் நடந்தது. முதலில் கல்யாணியும் தீக்ஷிதரும் தேசிய கீதங்கள் பாடினர். "பாரத வர்ஷ ஹமாரா ப்யாரா, ஜண்டா ஊஞ்சா ரஹியே" முதலிய கீதங்கள் நடந்தன. தலைவர் அன்று உருக்கமாகப் பேசினார்.

'பாரதம் விடுதலை பெற்றது. கட்டில்லை; கவலை இல்லை' என்று நாம் கையைக் கட்டிக் கொண்டிருக்கக் கூடாது. இனியே நமக்குக் கடுமையான வேலை உள்ளது. இன்னும் பயங்கரமான தியாகங்களுக்கு நாம் தயாரா யிருக்கவேண்டும். நம்மைக் காலம் சோதிக்கிறது. இயற்கை சோதிக்கிறது. மழை பெய்யாமல் பயிர்கள் வாடின. வெள்ளம் வந்து பயிர்களை அள்ளிச் சென்றது. பஞ்சமும் பற்றுக்குறையும் நாட்டைப் பீடிக்கின்றன. அஸ்ஸாம் பூகம்பம் அதி பயங்கரமாகக் கிளம்பி கணக்கில்லாத சேதம் விளைவித்தது. நம் சகோதர சகோதரிகள் அங்கே உயிர் துடிக்கிறார்கள். அவர்களுக்கு ஆடை, உணவு தர வேண்டும். அகதிகளுக்குப் புகல் அளித்து ஆதரிக்க வேண்டும். ஏராளமான தொண்டர் முன் வந்து இந்தக் காரியங்களை நிறைவேற்ற வேண்டும். பெண் அகதி களையும் அனாதைகளையும் கவனிக்கப் பெண் தொண்டர் வேண்டும். முன் வாருங்கள். தேசம் உங்களை அழைக்கிறது.'"

தலைவர் பேசியதும் வேறு சில தலைவர்கள் பேசினர். கல்யாணி 'ஜனகணமன' பாடினாள். கூட்டம் கலைந்தது. மறுநாள் காலை பத்து மணிக்குத் தலைவர் தீட்சிதருடன் வந்த கல்யாணிக்கும் பேட்டியளித்தார். கல்யாணி ஆங்கிலத்திலும் இந்தியிலும் தனது நிலையை விளக்கினாள். தலைவர் அவளுக்கு ஆறுதல் கூறி, "வெள்ளம் அடித்துச் சென்ற கலெக்டரும் மற்றோரும் இறந்தார்கள் என்று சொல்லமுடியாது. பூகம்ப வெள்ளப் பாழை ஆராயச்

சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது. அதிர்ஷ்டவசமாகக் கல்யாணியின் கணவன் பிழைத்து வந்தாலும் வரலாம் என்று தேற்றினர். கல்யாணி அதே இடத்திற்குத் தானும் சென்று ஜனோபகாரம் செய்ய விரும்பினாள். தலைவர் உடனே அங்குள்ள அதிகாரி ஒருவருக்குக் கடிதம் தந்து இருவரையும் கௌரவமான தொண்டில் ஈடுபடுத்த வேண்டினர்.

## 4

கௌஹதியின் அருகே தீனபவனம் உள்ளது. அது அழகான தோட்டத்தில் அமைந்தது. அங்கே குயில்கள் கூவும், கிளிகள் பேசும். பிரம்மபுத்ராவின் ஓங்காரம் கேட்கும்......அனைத்திற்கும் மேல் குழந்தைகளின் கலகலச் சிரிப்பு ஜலதரங்கம் போலக் கேட்கும். அவற்றிற்குமேல் கல்யாணியின் யாழிசையும் குரலும் அமைதியான காற்றில் நீந்திவந்து ஆறுதலளிக்கும்.

ப்ரேமாம்ருத தாரா பர்ஸாவோ—ஹே
ப்ரியதம மன மோஹனங்க ரூப தீகாவோ,
அகில ஜீவ்மேம் சுபமங்கல கிரண் பைலாவோ
அக்ஞான சோக மோஹ ரஹித ஜ்யோதி ஜலாவோ!
அனாத ரக்ஷகா தீன ஜனவனா—ஹரி.

என்று அவள் பாடும்போது கேட்டார் உள்ளம் உருகும். ஆயிரம் அனாதைக் குழந்தைகளுக்கு அவள் அன்னை. ஆயிரம் அனாதைப் பெண்களின் சகோதரி. அவள் உள்ளம் கருணை மயம். அவள் கண்கள் அன்பின் காந்தம். அவள் கைகள் பரோபகாரத்தின் கற்பகக் கிளைகள். அவள் மூச் செல்லாம் தீனசேவை. பேச்செல்லாம் பரமப் பிரேமையின் கிண்கிணிநாதம். காலை நான்கு மணிக்கு—பௌளி ராகத் துடன் தொடங்கும் அவள் வாழ்க்கை இரவு பத்து மணிக்கு ஸஹானாவுடன் கண்ணயரும். பல்லாயிரம் குரல்கள் அவளுடன் திவ்யநாம ஸங்கீர்த்தனம் செய்வ

தைக் கேட்டுப் பிரம்மபுத்ராவின் பூகம்ப வெள்ளங்கூட வணங்கித் தணிந்து சாந்தகீதம் பாடியது. பூகம்ப வெறியால் குன்றுகள் மறைந்தன. ஆறுகள் வற்றின. உயிர்கள் ஒழிந்தன. பயிர்கள் அழிந்தன. வீடுகள் சரிந்தன. நாடு பாழானது. மிச்சம் இருந்த மக்களும் ஏன் பிழைத்தோம் என்று ஏங்கினர். பஞ்சமும் பட்டினியும் நாட்டை உருக்குலைத்தன. இந்த விசனக் காட்டில் கல்யாணியின் பாட்டும் பணியும் மாந்தர் உள்ளத்தில் நம்பிக்கையூட்டும் மந்திர சக்திபோல் எழுந்தன. அந்த மந்திர சக்தி ஒரு துறவிக் கூட்டத்தையும் வசிகரித்தது.

மஹாநதி வனங்களில் குன்று சூழ்ந்த இடம். அங்கே சில சாதுக்கள் சிவசமாஜம் அமைத்துச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சாதனங்கள் செய்துவருகிறார்கள். அவர்கள் சிந்தை சிவமயம், செய்கை தேசமயம். அனைவரும் தீவிரமான தேசபக்தர்கள். தெய்வ பக்தர்கள் ஊர்ச் சோற்றை உண்டு உலகம் எப்படிப் போனால் என்ன என்னும் சோம்பேறி மடங்களல்ல. இல்லத்தார் எட்டு மணி வேலை செய்தால் இந்தத் துறவிகள் பதினெட்டு மணி நேரம் வேலை செய்வார்கள்.

சித்தம் எல்லாம் சிவமயமே
சிவ னெல்லாம் சிவமயமே
நித்தம் ஜீவ சேவைகளே
நியம மான சிவபூஜை

இதுவே அவர்கள் சுருதி வாக்கியம். இவர்கள் தலைவர் கைலாஸயோகி அஷ்டாங்க யோக சித்தர். கல்விமான், திடசாலி, ஆஜானபாகு, சிவாஜிபோல் வீரபுருஷர், மகாத்மாபோல் தியாகி. அவருடன் காணும் கம்பீரமான புருஷர் ஜயசங்கர் யோகி. இவரே சிவ சமாஜத்தின் மூளை. நல்ல தேஜஸ்வி. ஆங்கில-இந்தி வித்வான். காந்தி பக்தர். தீனசேவையில் தத்பரர். சலியாத உழைப்பாளி. மற்றத்

துறவிகளும் ஜீவ சேவையைத் தவமாகக்கொண்ட சாதுக்களே, இவர்கள் இமாசலத்தை நோக்கிப் பஜனையும் ஜனசேவையுமாக முன் செல்கிறார்கள். நாடு முழுதும் இவர்களைப் பக்தியுடன் வரவேற்று உபசரிக்கிறது. தெய்வத் தொண்டின் பிரதிபலிப்பே ஜனத்தொண்டு. ஆகையினால், நாடெங்கும் ஒரு பரபரப்பும், குதூகலமும் உண்டாயின. செல்லும் இடமெல்லாம் 'ஜே-ஜே' என்று ஆரவாரக் களிப்பு கடல்போல் ஒலித்தது. வழியில் தீன பவனம் இவர்களை வரவேற்றது. கல்யாணியின் அரிய பெரிய சேவைகளை இவர்களும் கேட்டிருந்தார்கள். உத்தமமான பணிபுரியும் புனிதத் தன்மையை அறிந்திருந்தார்கள். ஆகவே இரண்டும் ஐக்கியம் அடைந்தன. நதியுடன் நதி கலப்பதுபோல், சிவசமாஜம் தீன பவனத்துடன் கலந்தால் இன்பவெள்ளம்தானே!

## 5

தீபாவளியன்று அகண்ட பஜனை நடந்தது. ஜயசங்கர், "ஸர்வம் சிவம் சச்சிதானந்தமயம்" என்ற கீதத்தைப் பாடினார். கல்யாணியின் உள்ளம் புதிய இன்பத்தை உணர்ந்தது. இன்னதென்று புரியாத ஒரு ஆனந்தமும், ஆர்வமும் மேலிட்டன. புதிய நம்பிக்கையால் அவள் சித்தம் களித்தது. ஜயசங்கரின் முகத்தைக் கனிவுடன் கூர்ந்து நோக்கினாள். அவள் பார்வையில் மறுகணம் ஒரு மலர்ச்சி அரும்பியது. அதே முகமே, அதே குரலே, அதே உருவே உடைமட்டும் பைராகிக் கோலம். 'இருக்கட்டும், சோதிப்போம் என்று தமிழில் இனிமையாகப் பாடினாள்.

உள்ளத்திற் கூடிய ஜோடிப் பறவையை
வெள்ளம் பிரித்ததம்மா.
வெள்ளம் பிரித்த நடனப்பறவையை
உள்ளமும் கண்டதம்மா.

"ஹா கல்யாணி!" என்றார் ஜயசங்கர்......கல்யாணி இன்பமிகுதியால் மூர்ச்சையானாள். கைலாஸ யோகி

உண்மையறிந்து கல்யாணியை எழுப்பி, "அம்மா உன் கணவனுடன் மங்கலமாக வாழ்ந்திரு' என்று ஆசீர்வதித்து நடந்த கதையைச் சொன்னார். நடராஜன் ஐ. ஸி. எஸ். திப்ருகரில் தன் மாளிகையிலிருந்து கல்யாணிக்கு ஒரு கடிதம் எழுதும்போது பூமி அசைந்து மாளிகை சாய்ந்து அவனையும் ஊழி வெள்ளம் அள்ளிச்சென்றது. கால தேவியின் கருணையால் அவன் ஒரு காட்டில் ஒதுக்கப் பட்டான். அங்கேதான் சிவசமாஜ சாதுக்கள் அவனை எடுத்து வந்து உயிர் கொடுத்துக் காப்பாற்றினார்கள். பூகம்பமும் வெள்ளமும் சாவும் துயரும் அவனுக்கு வைராக்கியம் அளித்தன. நடராஜன் ஜயசங்கராகி யோகம் புரிந்தான். யோக சக்தியால் தேச சேவை செய்யவே சாதுக்களுடன் கிளம்பினான். வழியில் உலக வாழ்விலும் இன்பம் உண்டு என்பதைக் கல்யாணி விளக்கினாள். கல்யாணி தீனபவனத்தின் தாயாயிருந்தாள் ஜயசங்கர்—நடராஜன் தந்தைபோலிருந்து அனாதைக் குழந்தைகளுக்கு ஆதரவளித்தான்.

இந்தச் செய்தியைக் கேட்ட தலைவர் நடராஜனையும் கல்யாணியையும் சரணார்த்திகளின் பாதுகாப்பாளராக நியமித்தார். வங்காளம், அஸ்ஸாம் மாகாணங்களின் அகதிகள், பிச்சைக்காரர் ஏழை எளியவர் அனைவரும், "கல்யாணி மாதாகீ ஜே, ஜயசங்கர் நடராஜ்கீ ஜே!" என்று கையெடுத்துக் கும்பிடுகிறார்கள். ஏனெனில் ஆத்மப் பிரகாசம் ஒளிரும் புனிதமான வாழ்க்கையில் அவர்கள் ஈடுபட்டு விட்டார்கள். அந்த வாழ்க்கையில் இன்பம் இருந்தது. அன்பு பெருகியது ஆனந்தம் மேலிட்டது. எல்லாவற்றையும்விட, 'இறை சேவை' என்ற திவ்யமான கருணை ஒளி சுடர்விட்டது.

112593

காவேரிப் பதிப்பகம்

புதுக்கோட்டை :: திருச்சி ஜில்லா.

Wrapper Printed at NATHAN & Co, Tiruchy-1.